# இன்பத் தமிழகம்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS.
1136

ம. பொ. சிவஞானம்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY MADURAI
16 DEC 1957

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

*Univ. Grants Commission.*

1387

முதற் பதிப்பு: 26–ஜூன், 1956.
ம. பொ. சி. ஐம்பதாவது ஆண்டு நிறைவு (பொன்) விழா.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

விலை
ரூ. 1-12-0

1387
O3l1;6
5?

## ம. பொ. சி.
### எழுதிய நூல்கள்

இன்பத் தமிழகம்
கட்டுரைக் களஞ்சியம்
இலக்கியச் செல்வம்
முரசு முழங்குகிறது
வீரபாண்டியக் கட்டபொம்மன்
கப்பலோட்டிய தமிழன்
வானொலியில் ம. பொ. சி.
தமிழன் குரல்
சிலப்பதிகாரமும் தமிழரும்
சுதந்தரப் போரில் தமிழகம்
தமிழர் கண்ட காந்தி
பிரிவினை வரலாறு
இலக்கியத்தின் எதிரிகள்
தமிழரசா, திராவிடஸ்தானா?
கயத்தாற்றில் கட்டபொம்மன்
தலைவர் ம. பொ. சி.
(தொகுப்பு நூல்)

மாருதி பிரஸ், ராயப்பேட்டை, சென்னை–14.

# பதிப்புரை

★

"இன்பத் தமிழகம்" பண்டை நாளில் எவ்விதமிருந்தது; இன்று எந்த நிலையை அடைந்திருக்கிறது; இனி எதிர்காலத்தில் ஏற்றமடைய என்னென்ன செய்யவேண்டும் என்பவை பற்றி திரு. ம. பொ. சி. அவர்கள் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

தமிழகம், மொழி, சாதி வேற்றுமை ஒழிய வழி முதலியவை பற்றிய கருத்து நிறைந்த பல கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலை வெளியிடும் நல்வாய்ப்பை அளித்த ம. பொ. சி. அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும்.

சோம. சுவாமிநாதன்

26–6–56

இன்ப நிலையம்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இன்பத் தமிழகம் ... ... ... | 5 |
| மறைந்த வரலாறு ... ... ... | 13 |
| உறவும் உரிமையும் ... ... ... | 21 |
| மொழியும் வழியும் ... ... ... | 26 |
| இந்தி படும் பாடு ... ... ... | 30 |
| சொல்லாட்சி ... ... ... | 36 |
| சென்னையில் தமிழரும் உளரோ? ... | 44 |
| கற்பவை கற்க ... ... ... | 48 |
| வாய் இனிக்கப் பேசாமல் வாழ்வு இனிக்கப் பாடுபடுவோம் ... | 55 |
| களையெடுப்போம் வாரீர்! ... ... | 61 |
| சாதிப் பிரிவுகள் வேண்டாம்! ... ... | 66 |
| சாதிகள் ஒழிய வழி ... ... | 74 |
| மதம் பெரிதா? நாடு பெரிதா? ... | 88 |
| தேசிய வாதிகளும் சமூகப் புரட்சியும் ... | 94 |
| ராணுவத்தில் பெண்கள் ... ... | 96 |
| சொல் வன்மை ... ... ... | 105 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# இன்பத் தமிழகம்

தமிழகம் தனியரசானால், வேங்கடத்திற்கு வெளியேயுள்ள பிற மாகாணங்களின் தயவின்றி வாழ இயலுமா? அப்படி வாழும் அளவுக்குத் தமிழகத்தில் வளம் இருக்கிறதா? என்று கேட்கின்றனர் சிலர். தமிழரசுவாதிகள் கோருவது இந்தியாவின் இதர பகுதிகளோடு உறவு கொள்ளும் தமிழரசே யன்றி, தனித்து நின்று வேலி கட்டி வாழும் தனியரசு அல்ல. ஆனால், பிரிந்து போகும் உரிமையுடன் சுயநிர்ணயம் வேண்டுவதால், "பிரிந்து நின்றால் வாழ முடியுமா?" என்ற கேள்விக்கும் பதிலளித்துத்தான் ஆகவேண்டும்.

தமிழ் நாடு, கிழக்கு—தெற்குப் பகுதிகளில் கடலையும், வடக்கு—மேற்குப் பகுதிகளில் மலையையும், இயற்கை எல்லைகளாகக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் நிலப்பரப்பு, வேறு நாட்டின் துணையின்றித் தனித்து நிற்கக்கூடிய பெருநிலமாகும். தமிழகத்தைவிட மிக மிகக் குறைந்த நிலப்பரப்புடைய பிரதேசங்களெல்லாம் தனியரசு கொண்ட நாடுகளாக விளங்குவதை உலக பூகோளப் படத்தில் காண்கிறோம்.

எனவே, தமிழகம் இயற்கை அரண்களுடன் தனித்து விளங்கக்கூடிய திருநாடாகும். அப்படி ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தனித்து நின்று அரசாண்ட வரலாறும் தமிழகத்துக்கு உண்டு.

தமிழகத்தின் மக்கள் தொகையும் அந்நாடு தனித்து வாழ்வதற்குப் போதிய துணை புரிகிறது. நாம் கோரும் விதத்தில் எல்லைகள் திருத்தி அமைக்கப்பட்டால், புதிய தமிகத்தின் மக்கள் தொகை மூன்று கோடிக்கு மேற்பட்ட தாக இருக்கும்.

தமிழகத்தின் மக்கள் சோம்பேறிக் கூட்டமன்று; அறிவற்ற ஆட்டு மந்தைகளுமல்லர். உழைப்புத் திறனும் ஊராளும் ஆற்றலும் ஒருங்கே படைத்தவர்கள். சிங்களம், மலாயா, இந்தோனேஷியா, தென்னாப்பிரிக்கா முதலிய பல்வேறு நாடுகளிலும் மெய்வருந்திப் பாடுபடுவோர் தமிழரேயாவர். கன்னட அரசுக்கு உட்பட்ட கோலாரில் பூமியைக் குடைந்து பொன் எடுக்கும் தொழிலாளர் எல்லோரும் தமிழர்களே.

சுருங்கக் கூறின், உழைப்புக்கு அழைப்புத் தந்த உலக நாடுகளிளெல்லாம் ஓடியோடிப் பாடுபட்டவர் தமிழர். இன்று நேற்றல்ல—எத்தனையோ நூற்றாண்டு களாக இந்த நிலை.

> "பெகு, பினங்கு, சிங்கப்பூர் முதலிய கீழ் நாடுகளில் காணப்படும் கலிங்கர்களில் பெரும் பாலோர் தமிழர்களே. மோரீஸுக்கும், மேலை இந்தியக் குடியேற்ற நாடுகளுக்கும் சென்றுள்ள கூலி மக்களில் பெரும்பாலோர் தமிழர்களே. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் சிங்களம் சென்று குடியேறி னர். பொருள் திரட்டும் வழியமைந்துள்ள

இடங்களிலெல்லாம் தமிழர்களைக் காணலாம். சோம்பேறிகளாய் நகத்தில் அழுக்குப் படாமல் வாழ விரும்பும் செல்வர்கள் இருக்குமிடங்களி லெல்லாம் தமிழர்களை அணி அணியாகக் காணலாம்."

இது, தமிழரசுவாதியின் தற்பெருமைப் பேச்சன்று; ஐரோப்பியரான அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஆராய்ச்சியுரை.

எனவே, உழைப்புச் சக்தியுள்ள தன் மக்களை உலகுக் கீந்த பெருமை யொன்றே, தமிழகம் தனது தேவைக்கு அதிகமாகவே உழைப்பாளிகளைப் பெற்றிருக்கிற தென் பதைப் புலப்படுத்தும்.

உழைப்புச் சக்தி மட்டுமல்ல, அறிவுச் சக்தி கொண்ட மக்களையும் அதிகம் பெற்றிருக்கிறது தமிழகம். இந்தி யாவிலேயே அறிவாளி மக்களை அதிகமாகக் கொண்டது தமிழகமே. அதை இன்றைய இந்திய ஆட்சியே எடுத்துக் காட்டும். பத்திரிகைக் காரியாலயங்கள் முதல் பாராளும் உத்தியோகங்கள்வரை இந்தியா எங்கும் தமிழரே நிறைந் துள்ளனர்.

ஒரு நாட்டுக்கு முக்கியமானது தொழில். அந்தத் தொழிலுக்கான மூலப்பொருள்கள் அந்தந்த நாட்டிலேயே கிடைக்க வேண்டுமென்பது ஒரு நியதி. தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கான மூலப்பொருள்கள் ஓரளவேனும் இல்லாமலில்லை.

இரும்பு, மக்னீஷியம் போன்ற இன்னும் பல முக்கிய உலோகப் பொருள்கள் தமிழ் நாட்டில் கிடைக்கின்றன. தங்கம் தமிழகத்தின் ஓரப்பகுதியான கோலாரில் தமிழர் உழைப்பால் திரட்டப்படுகிறது. புதிய தமிழரசு, கன்னட

அரசுடன் கலந்து பேசி, கோலார் பிரதேசம், அதில் கிடைக்கும் தங்கம் ஆகியவற்றின்மீது தனக்குள்ள உரிமையைச் சமரச வழியில் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தே தீரும்.

இன்னும் உலோகப் பொருள்கள் பற்றி இதுவரை தமிழகத்தில் சரியான ஆராய்ச்சி நடத்தப்படவில்லை என்பதை இந்திய அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது.

இந்திய பூநிலை ஆராய்ச்சியாளர்கள் 1940—44ஆண்டுகளுக்கிடையே செய்த பரிசீலனையின்படி திருச்சி—சேலம் ஜில்லாக்களில் மண் கலந்த உலோகப் பொருள்கள் 30,46,50,000 டன்கள் கிடைக்குமென மதிப்பிட்டுள்ளனர். இந்தக் கனிப்பொருள் பூமிக்கு 100 அடி ஆழத்திற்குள்ளேயே கிடைத்துவிடுமென்றும் கூறுகின்றனர். அவர்கள் ஆராய்ச்சியின்படி வேலை துவக்கினால் எதிர் பார்ப்பதைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிக உலோகப் பொருள்கள் கிடைக்குமென்றும் நம்பப் படுகிறது.

தென்னாற்காடு ஜில்லாவில் 'லிக்னைட்' (நிலக்கரி) இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டதோடு, அப்பொருள் 50 கோடி டன் கிடைக்கலாம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலக்கரி மிக உயர்ந்த ரகமானது என்றும், எஃகுத் தொழிலுக்குப் பயன்படுத்துவது பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, தமிழகம் இரும்பு, எஃகு தொழில் துறைகளில் தன்னந்தனியாகவே முன்னேற முடியுமென்ற நம்பிக்கை நாளுக்கு நாள் வலுத்து வருகிறது.

அலுமினியத்திற்குப் பயன்படும் மூலப்பொருளான 'இல்மெனைட்' (Ilmente) குமரி முனையில் கிடைக்கிறது. அணுசக்திக்குப் பயன்படும் 'தோரியம்' என்னும் மூலப்

பொருளும் அங்குதான் கிடைக்கிறது. இன்றைய விஞ்ஞான உலகில் அணுசக்திக்குள்ள பெருமையை அறியாதார் இல்லை.

விமானம் கட்டும் தொழிலுக்கும், கண்ணாடி, காகிதம், ரப்பர் முதலியவற்றின் உற்பத்திக்கும் பயன்படும் 'மெக்னஸைட்' (Magnesite) சேலம் ஜில்லாவில் கிடைக்கிறது.

மின்சார சக்தியிலும் தமிழகம் பின்வாங்கவில்லை. பைக்காரா, மேட்டூர், பாபநாசம், சிவசமுத்திரம், பள்ளிவாசல் ஆகிய மின்சார உற்பத்தி நிலையங்களைச் சரிவரப் பயன்படுத்தினால், கைத்தொழில், விவசாயம், வீட்டுவசதி முதலியவற்றிற்குத் தமிழகம் தனது தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ள முடியும். தேவைக்கு அதிகமாகவும் மின்சார உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று பல நிபுணர்கள் கூறுகின்றனர்.

வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கும் வாணிபம் செய்வதற்கும் தமிழகத்தின் கடற்கரையோரங்களில் பல துறைமுகங்கள் அமைந்திருக்கின்றன. சென்னை நகரத் துறைமுகம் மேல்நாடுகளோடு தமிழ்நாடு வாணிபம் செய்வதற்குச் சிறந்த துறைமுகம் ஆகும். மற்றும் தூத்துக்குடி, கோடிக்கரை, புதுச்சேரி ஆகிய துறைமுகங்களை சீர்செய்து பயன்படுத்தினால் கீழ்த்திசை நாடுகளுடனும் தமிழகம் வாணிபம் செய்து வளம்பெற முடியும்.

இன்றையச் சென்னை அரசாங்கம் தமிழகத்திற்கும் சேர்த்து உணவுப் பிச்சை எடுக்கிறது. ஏன்? தமிழகம் வறண்ட பிரதேசமா? அல்லவென்பதை அகிலம் அறியும். காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை ஆகிய பஞ்சநதி பாயும் பண்ணைகள் நிறைந்த நாடு

தமிழகம். வையை நதியை, பொய்யாக் குலக்கொடி என்றும், பொன்னின் மதிப்பைப் பின்னிடச் செய்யும் நெல் வளம் தந்த காரணத்தால் காவிரிக்கு "பொன்னி நதி" என்றும் பட்டங்கள் தந்து பாராட்டினர் பழம் புலவர்கள்.

நெல்லுடன் சோளம், கம்பு, கேழ்வரகு, கடலை முதலிய தானிய வகைகள் பலவும் நம் இன்பத் தமிழகத்தில் ஏராளமாய் விளைகின்றன. இந்த விளைபொருள்களைக் கொண்டு மக்கள் வயிருர உண்டு, வந்தவர்களையும் உபசரித்து வறண்ட பிரதேசங்களுக்கு உதவி புரியவும் முடியும்.

ஏரிகள், ஓடைகள் போன்ற நீர் நிலையங்களில் மழைக் காலங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரை வீணுக்காமல் வாய்க்கால் வெட்டி வயல்களுக்குப் பாய்ச்சலாம். நதிகள், ஆறுகள் ஆகியவற்றின் நீர்ப்பெருக்கு கடலில் வீழ்ந்து பாழாகாமல் அணை கட்டித் தடுத்தால் பல லட்சக்கணக் கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யலாம். மற்றும், கிணறுகள், குளங்கள் எடுப்பித்து அவற்றின் நீரைப் பயிர்களுக்குப் பயன்படுத்தலாம்.

இவையனைத்தும் இடையூறின்றி நிகழ்வதற்கு விளை நிலங்களை தேசீய உடைமையாக்கி, கூட்டுறவு முறையில் பண்ணைகளின் விஸ்தீரணத்தைப் பெருக்கி, மின்சாரத்தின் துணையால் யந்திரங்களைக் கொண்டு பயிர் செய்தால், உணவுப் பொருள்களைத் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்ய முடியும்.

உற்பத்தி செய்த உணவுப் பொருள்களை ஓரிடத்தி லிருந்து மற்ருேரிடத்திற்குக் கொண்டு செல்வதற்காகப் புதிய புதிய ரயில் பாதைகளை ஏற்படுத்திப் போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். இவ்வளவுக்கும் பிறகு தமிழகத்தில் கிடைக்கும் மூலப்பொருள்களோ,

உற்பத்திப் பொருள்களோ அதன் தேவைக்குப் போத வில்லை என்ருல், பணம் கொடுத்தோ அல்லது பண்ட மாற்று மூலமோ மற்ற நாடுகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இன்றைய இந்தியாவும் உணவுப் பொருள் உள்பட தன்னிடம் இல்லாததும், தனக்குத் தேவைப்படுவதுமான எவ்வளவோ பொருள்களை வெளி நாடுகளிலிருந்து பெறுவதை நாம் கண்ணெதிரே காண வில்லையா!

உலகத்தில், எல்லா வகைகளிலும் தனது தேவை யைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் ஒரு நாட்டை எவரேனும் உவமானமாகக் கூற முடியுமா! முடியாது. எல்லா நாடுகளும் ஒன்றுக்கொன்று கொண்டும் கொடுத் தும் வாழ்வதாகத்தானே வரலாறு கூறுகிறது. எனவே, தமிழ்நாடு மட்டும் அதற்கு விதிவிலக்காயிருக்க வேண்டு மென்று எப்படி எதிர்பார்க்க இயலும்?

மேலும், சோஷலிச அடிப்படையில் இனவாரி குடியரசுகள் இஷ்டத்தின்பேரில் இணைந்து நிற்கும் ஒரு இந்திய சோஷலிசக் கூட்டரசையே தமிழரசுவாதிகள் விரும்புகின்றனர். ஏனெனில், இந்தியாவின் நில அமைப்பு அப்படி இணையுமாறு நம்மைத் தூண்டுகிறது.

சோஷலிச இந்தியாவில் ஒரு மாகாணத்தை இன் னொரு மாகாணம் சுரண்ட முடியாது என்ற நம்பிக்கையை சோஷலிசத் தத்துவம் நமக்கு உணர்த்துகிறது. மற்றும் தமிழகமோ வேறு எந்த இந்திய மாகாணமோ எவ்வளவு தான் தனித்து நிற்கும் பலமுடையதாயினும் இந்த அணுகுண்டு சகாப்தத்தில், அன்னிய நாட்டவரின் படையெடுப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியுமென்று நம்புவதற்கில்லை.

ஆகவே, அரசுரிமை பெற்ற தமிழகம் இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டுமென்பதே தமிழரசுவாதிகளின் விருப்பம். ஐக்கிய இந்தியாவில் கலந்துள்ள எந்த ஒரு தனி மாகாணமும் மற்ற மாகாணங்களை வெறுத்து வெளி நாடுகளின் தயவுக்குக் கையேந்தும் நிலையோ, அவற்றின் சூழ்ச்சியில் சிக்கி ஒரு சகோதர மாகாணத்திற்கு விரோத மாய் இன்னொரு மாகாணம் அயல்நாட்டுக்குத் துணை புரியக்கூடிய அபாயமோ ஏற்படுமென்று அஞ்சத் தேவை இல்லை.

—"முரசு" 1—8—48.

# மறைந்த வரலாறு

ஒரு நாட்டினரின் பண்புகளையும், பழஞ் சிறப்புகளையும் அந்நாட்டு மக்கள் வழிவழி கடைப்பிடித்து வரக் காரணமாயிருப்பதும், அந்நாட்டைப் பற்றி உலகம் அறிந்து கொள்வதற்குத் துணை புரிவதும் ஒழுங்குபெற எழுதப்பட்ட வரலாறேயாகும். தனது வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து வைத்துக்கொள்ளாத ஒரு நாடு, வாழ்ந்தும் வாழாதது போலத்தான். தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்கல்ல.

தலைவாசல் கதவினுக்குத் தாள்பூட்டுப் போடாத தனி நாடு, தமிழகம் !

பரதேசி என்று வந்த பிற தேசத்தினரை யெல்லாம் பரிவுடனே வரவேற்றுப் பங்கும் தந்தவர், தமிழினத்தார் !

வந்த எந்தப் பிற மொழிக்கும் வரவு கூறி வாழ்வளித்தது, தமிழ் மொழி !

மாற்றலரே யன்றி, கூற்றுவனே வந்திடினும், எதிர் நின்று போர் புரியும் ஆற்றலுடையவர், தமிழ் மறவர் !

போருக்கு வந்த மன்னர்களை யெல்லாம் புறங்கண்டு இமயத்தில் கொடி பொறித்தவர்—சிங்களத்தை ஆண்டு

சீனத்தோடு உறவுகொண்டு, தம் செங்கோலுக்குச் சிறப்புத் தேடியவர், அசோகர்—அக்பர் போன்ற சக்கரவர்த்திகளின் சாம்ராஜ்யங்களுக்கெல்லாம் தலை வணங்காது தனியரசு செலுத்தியவர், தமிழ் மூவேந்தர் !

எண்ணிலடங்காத நீதி நூல்களும், நெஞ்சை யள்ளும் காவியங்களும் யாத்ததோடன்றி, வந்த மொழியான வட மொழிக் காவியங்களையும் செந்தமிழ் நாட்டின் பண்புக் கேற்ப சீர்திருத்தித் தந்தவர், தமிழ்ப் புலவர்கள் !

திரை கடலோடியும் திரவியம் தேடி செந்தமிழ் நாட்டின் செல்வத்தைப் பெருக்கி வாணிபத்தை வளர்த்த வர்கள், தமிழ் நாட்டு வணிகர்கள் !

தாம் பெற்ற மைந்தரோடு, குழவிப் பருவத்தில் கொஞ்சி மகிழ்ந்தும், காளைப் பருவத்தில் வேலெடுத்துக் கொடுத்துப் போருக்கனுப்பியும், புறமுதுகிடாது போரில் மாண்டபோது பெற்றபோதினும் பெருமகிழ்வு எய்தியும் தமிழகத்தின் மானங் காத்தவர், தமிழ்த் தாய்மார்கள் !

இன்னும், தமிழகத்தின் சிறப்பை விளக்கும் செய்தி கள் ஆயிரம் ஆயிரமாகும். அவை யனைத்தும் தமிழ்க் கவிதைகளிலும் காவியங்களிலும் சிதறிக் கிடக்கின்றன.

தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி, சீனத்து வேதத் திலும், சிங்களத்தின் வரலாற்றிலும், பர்மாவின் பழங் கதைகளிலும் தமிழகத்தைப் பற்றிய செய்திகள் மறைந்து கிடக்கின்றன. இவற்றை ஒருங்கு திரட்டி, “தமிழக வரலாறு” என்ற பெயரில் தனி நூல் ஒன்று வெளியிடு வதற்கான முயற்சியை சென்னை அரசினரோ அல்லது செந்தமிழ் அறிஞர்களோ இதுவரை மேற்கொண்டார்க ளில்லை. இன்றுள்ள நிலையில் தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகளை அறிய விரும்பும் அன்னிய நாட்டினர், தமிழ்க்

கற்று, தமிழ் இலக்கியப் புலமை பெற்ருலொழிய அவர்களது எண்ணம் ஈடேற ஏதுமில்லை. ஏன்? தமிழ் மக்களிலும் இலக்கியப் புலமையுடையோர் தவிர, ஏனையோர் தமிழகத்தின் வரலாற்றை அறிய வழி இல்லை. தமிழகத்துப் பள்ளிகளிலே, 'இந்திய வரலாறு' தமிழ் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படுகிறது. ஆனுல், நூறு பக்கங்களுக்கு மேற்பட்ட வரலாற்று நூலிலே நம் தமிழ் நாட்டைப் பற்றிய செய்திகள் மூன்று பக்கங்களுக்கு மேலிரா. ஆம்; இந்திய வரலாறு என்ற குடத்திலே தமிழ் வரலாறு என்ற விளக்கு மறைந்து கிடக்கிறது. குன்றின்மேல் இருக்க வேண்டிய விளக்கு குடத்திற்குள் மறைந்திருக்கும் கொடுமையை என்னென்பது!

'வரலாறு' என்ற பெயரில் தமிழகத்தைப் பற்றி இதுவரை வெளிவந்துள்ள நூல்களின் பெரும்பாலானவை பிற இனத்தவரால்—பிற நாட்டினரால் எழுதப்பட்டனவேயன்றி, தமிழரால் இயற்றப்பட்டவையன்று.

ஏடுகளில் இடம் பெருத காரணத்தால், தமிழ் மக்களின் எண்ணங்களிலும் தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகள் இடம்பெருதொழிந்தன. ஆம்; நம் மக்கள் கொடைக்குக் கர்ணனைச் சொல்வார்களேயன்றி, குமணனைக் கூறமாட்டார்கள். கற்புக்கு அருந்ததியைக் குறிப்பார்களேயன்றி, கண்ணகியை நினைக்கமாட்டார்கள். வீரத்திற்கு சிவாஜியைப் போற்றுவார்களேயன்றி, செங்குட்டுவனைப் புகழ மாட்டார்கள்.

பகீரதன் என்பான் ஆகாயக் கங்கையை பூமிக்குக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படும் கற்பனைக் கதையை தமிழகத்துப் பாமரர்களும் அறிவர். ஆனுல், சோழ வேந்தன் திருமாவளவன் பன்னீராயிரம் சிங்களவர்களைக் கூலிகளாகக் கொண்டுவந்து காவிரிக்குக் கரை கட்டிய

உண்மைச் செய்தியைப் பாமரர்களே யன்றிப் பண்டிதர் களிலும் பலர் அறிய மாட்டார்கள்.

வடமொழியில் தோன்றிய ராம கதையை, வரன் முறையாகப் படிப்பதும், படிக்கக் கேட்பதும் தொன்று தொட்டு இன்றுவரை வழக்கமாக இருந்து வருகிறது. பாரதக் கதையும் அப்படியே. வடமொழிக் காவியங் களில் கவிஞர்கள் கற்பித்த பாத்திரங்களைக் கடவுளாக வும் எண்ணி வழிபடுகின்றனர் தமிழ் நாட்டு மக்கள். ஆனால், தமிழ் நாட்டில் நிகழ்ந்த—தமிழ்ப் புலவன் எழுதிய தமிழினத்தவரின் பெருமை ஒன்றையே பேசுகின்ற சிலப் பதிகாரக் காவியத்தின் சிறப்பை அறிந்த தமிழர் மிகச் சிலரே யாவர். சிலப்பதிகாரத்தைப் பற்றி தமிழர்கள் அறிந்திருப்பதெல்லாம் கோவலனைக் கோவிலனாக்கி, கண்ணகியை கர்ணகை யாக்கி, மாதவியை மாதகி யாக்கி நாடக மேடையில் காட்டப்படும் கோவலன் கதையே யாகும். மண்ணக மாந்தருக்கு வழிகாட்டும் கண்ணகி தேவியின் உண்மைப் புரட்சியை பண்டிதர்கள் படித்து மறந்தார்கள் ; பாமரர்கள் படிக்காமலே புதைத்தார்கள்.

தமிழ் நாட்டு மக்கள் வீட்டுக்கு வீடு நடத்தும் விழாக் களையே கவனிப்போம். இன்றைய வழக்கப்படி சித்திரை துவங்கி பங்குனி முடிய நடத்தும் பண்டிகை நாட்களில், பொங்கல் விழாவைத் தவிர ஏனைய விழாக்கள் அனைத் தும், தமிழகத்துக்குத் தொடர்பில்லாத—தமிழ் இனத் துக்குப் பெருமை தராத விழாக்களேயாகும். உழைப்புக்குப் பெருமை தந்து உற்பத்தியைப் பெருக்க உற்சாக மூட்டும் பொங்கல் விழாவுக்கும் 'சங்கராந்தி' எனப் பெயரிட்டுக் கற்பனைக் கதைகளைக் கட்டி வைத்தனர் சமயவாதிகள்.

சித்திரை முதல் நாளை தமிழ் வருடப் பிறப்பு நாளாகக் கொண்டாடுவது வழக்கமாகிவிட்டது. ஆனால் தமிழர்

பண்பு வழி ஆராயுங்கால், தமிழ் ஆண்டு, தைத் திங்களில் துவங்கி மார்கழியில் முடிகிறதேயன்றி, நாம் நம்பி வருவதைப் போன்று சித்திரையில் துவங்கி பங்குனியில் முடிவதில்லை. பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோற்பத்தி என வரும் ஆண்டுகள் அறுபதின் பெயர்களைப் பார்த்தாலே அவை தமிழரின் மொழிக்குப் புறம்பானவை என்பது புலப்படும்.

சங்க காலப் புலவர்கள், அரசர்கள் ஆகியோரின் பெயர்கள் தூய தமிழிலேயே வழங்கி வந்திருக்கின்றன. வள்ளுவர், பரணர், கோவூர்க்கிழார் என வரும் புலவர்கள் பெயர்களும், கரிகால் வளவன், நெடுஞ்செழியன், அதிகமான், குமணன், பாரி என்பன போன்ற அரசர் பெயர்களும் தூய தமிழ்ப் பெயர்களே யல்லவா? ஆனால் இடைக்காலத்தில் வாழ்ந்து வந்த அரசர்களின் பெயர்கள் எல்லாம் ராஜ ராஜ சோழன், குலோத்துங்கன், அதிவீரராம பாண்டியன், வரதுங்கப் பாண்டியன் என்ற வடமொழிப் பெயர்களாகவே அமைந்திருக்கக் காண்கிறோம். மன்னர்கள், புலவர்கள் பெயர்களில் ஏற்பட்ட இந்த மாறுட்டம்தான் மக்கள் பெயர்களிலும் தோன்றியிருக்கின்றது.

தமிழ்ப் புலவர்களைப் பற்றியும் தெளிவான வரலாற்றுச் செய்திகள் இல்லை. குறள் இயற்றிய வள்ளுவர், சிலம்பைச் சித்தரித்த இளங்கோ ஆகிய பெரும் புலவர்கள் பிறந்த காலம் எது? வாழ்ந்த இடம் எது? என்பனவற்றைப் பற்றியும் ஐயத்திற்கிடமற்ற ஆராய்ச்சி முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை. திருக்குறள் எழுதியவர் வள்ளுவர் அல்லர்; இளங்கோ என்ற ஒரு புலவர் இருந்ததேயில்லை என்ற செய்திகள்

கூட இலக்கிய உலகில் நடமாடுகின்றன. ஔவை என்ற பெயரில் வாழ்ந்த புலவர் ஒருவரா? அல்லது இருவரா? சங்க நூற்களில் வரும் ஔவையும், நீதி நூற்களை எழுதிய ஔவையும் வெவ்வேறானவர்களா? இந்த ஆராய்ச்சியும் இன்னும் முடிந்தபாடில்லை.

அண்மையில், அதாவது நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே நடந்த சம்பவங்களைப் பற்றியும் உண்மைக்கு மாறான செய்திகளே உலவி வருகின்றன. 1797 முதல் 1801 வரை ஐந்தாண்டுகள் நடைபெற்ற பாஞ்சாலங்குறிச்சிப் போரைப்பற்றி ஆங்கிலேயர்கள் தவறான செய்திகளை வரலாறாகக் கட்டி விட்டனர். பாஞ்சைப் புரட்சி வீரன் கட்டபொம்மனைக் கொள்ளைக் காரனாகவும் கொலைகாரனாகவும் சித்தரித்திருக்கின்றனர். புதுக்கோட்டை மாஜி சமஸ்தானம் வெளியிட்டுள்ள மான்யுவலிலும், எட்டயாபுரம் சமஸ்தான சரித்திரத்திலும் கட்டபொம்மன் கொள்ளைக்காரனாகவே வருணிக்கப்பட்டுள்ளான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்வரை வீர பாண்டியனைப் பற்றி வெளிவந்த வரலாற்று நூல்கள் சிலவற்றில்கூட, பாஞ்சைப் புரட்சி, இந்திய விடுதலைப் போரின் முதற்கட்டம் என்று கூறப்படவில்லை. கட்ட பொம்மனை வீரப் பெருமகனாக ஒப்புக்கொள்ளும் சிலரும் அவனுடன் தோளோடு தோள் நின்று ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் புரிந்து, தூக்கில் மாண்ட தானாதிபதிப் பிள்ளையை தாசிலோலன் என்றும், தனது பிள்ளையின் திருமணத்திற்காக கம்பெனியின் நெற்களஞ்சியத்தைக் கொள்ளையடித்தவன் என்றும், வீரபாண்டியனைக் காட்டிக் கொடுத்தவன் என்றும் நம்புகின்றனர். கம்பெனி வெள்ளையர்கள், தானாபதிப் பிள்ளைக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கைக் குறைப்பதற்காகக் கட்டிவிட்ட

பொய்ச் செய்திகளை உண்மை என்று நம்பும் வரலாற்று அறிஞர்களின் அறியாமையை என்னென்பது!

அண்மையில் வெளிவந்துள்ள ஒரு தமிழ் நாடக நூலில், ஆங்கிலேயர்கள் தானபதிப் பிள்ளையைப் பற்றிக் கூறிய பொய்களைவிட அதிகப் பொய்களைக் கற்பித்துள்ளார் அதன் ஆசிரியர். நம்முடைய வீரர்களைப் போற்றாமலிருப்பதைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியும். அவர்களைத் தூற்றுவோரின் துணிச்சலை எப்படிப் பொறுப்பது?

தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகளுக்கு வடநாட்டு அறிஞர்கள் மதிப்புத் தருவதில்லை. வடநாட்டு நிகழ்ச்சிகளைத்தான் அவர்கள் இந்திய வரலாருகக் கொள்ளுகின்றனர் போலும்! அகில இந்தியக் காங்கிரஸ் செயற்குழுவின் அனுமதியுடன், டாக்டர் பட்டாபி வெளியிட்டுள்ள காங்கிரஸ் வரலாற்றில், சவுரிசரா சத்தியாக்கிரகம், நாகபுரிக் கொடிப்போர், பர்தோலி வரிகொடா இயக்கம் ஆகிய சின்னஞ்சிறு இயக்கங்களைப் பற்றியெல்லாம் பக்கம் பக்கமாக வரையப்பட்டுள்ளன. ஆனல் சிதம்பரனரின் சீரிய புரட்சி பற்றி ஒரு வரிகூட இல்லை. ஏன்? ஒரு வார்த்தைகூட இல்லை.

கிழக்கிந்தியக் கம்பெனியார் காலம் முதல் வெள்ளையர் வெளியேறிய ஆகஸ்டு 15-வரை, இந்திய மக்கள் நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி பற்றிய செய்திகளைச் சேகரிக்கின்றனர் டில்லி ஆட்சியினர். ஆனல், சிப்பாய்ப் புரட்சிக்குப் பின்னே நிகழ்ந்த சம்பவங்களைத்தான் தொகுக்கப் போவதாக அறிக்கை விடுத்துள்ளனர். இதனல், பாஞ்சைப் புரட்சி—வீரபாண்டியனின் விழுமிய தியாகம்—வரையவிருக்கும் வரலாற்றில் இடம் பெருதென்பது திண்ணமாகி விட்டது.

இந்த நிலையில் தமிழர் உறங்கிக் கிடந்தால், தமிழகத்தைப் பற்றிய உண்மைச் செய்திகள் ஆழக் குழி தோண்டிப் புதைக்கப்படுவது திண்ணம். அந்தக் கொடுமைக்கு இடங்கொடுக்காமல், தமிழரின் பெருமையைப் பரப்ப அறிஞர்கள் முன்வரவேண்டும்.

தமிழகத்தின் வரலாற்றைத் தொகுக்க சாதி, சமய, கட்சி பேதமற்ற நடுநிலைமையாளர்கள் கொண்ட ஒரு குழுவை அமைக்கும்படியும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழக வரலாறு என்ற தனி நூலைப் பாடமாக வைக்கும்படியும் சென்னை அரசினரை வற்புறுத்த வேண்டும்.

# உறவும் உரிமையும்

'தமிழருக்குத் தனியரசு வேண்டும்' என்ற உடனேயே, 'ஐயோ, பிற மாகாணங்களைப் பகைத்து வாழ்வதா?' என அலறும் அரசியல் ஞான சூன்யங்களும் உண்டு. 'தனியரசு' என்ற உடனேயே, பிற அரசுகள் எல்லாம் பகையரசுகளாகி விடும் என்று கருதுவானேன்? அப்படியானால் உலகத்தில் ஒரு நாடும் தனியரசு நடத்தாமல் அல்லவோ இருக்க வேண்டும்? தமிழக அரசியல் வரலாற்றை அறிந்த எவரும் இந்த ஞான சூன்யங்களின் அலறல் அறியாமையின்பாற் பட்டதே என்று அஞ்சாமல் கூறுவர். தமிழர் அரசாண்ட வரலாற்றை அறியாதவர்கள் இன்று அரசியல் தலைவர்களாகவும், அமைச்சர்களாகவும் வீற்றிருக்கும் தமிழகத்தில், தமிழருக்குத் தனியரசு என்றால் அதற்கு எதிர்ப்பு இருப்பதும், அந்தத் தமிழரசு பிற அரசுகளுக்கும் பகையாகத்தான் இருக்கும் என்று பயங்காட்டப்படுவதும் இயற்கைதானே!

தமிழகத்தின் அரசியல் வரலாற்றை ஆராய்ந்தால், தமிழ் மூவேந்தர் பிற அரசுகளுடன் அல்லது அரசர்

களுடன் உறவுகொண்டு வாழ்ந்ததை எளிதில் உணர முடியும். எப்போதோ சில சமயங்களில் பிறநாடுகளுடன் தமிழரசுக்குப் பகை தோன்றி இருக்கலாம். அந்நாடுகளின்மீது படையெடுத்தும் சென்றிருக்கலாம். ஆனால், தமிழரசர்கள் பிற அரசர்களுடன் உறவு கொண்டு வாழ்ந்த சம்பவங்களோடு இதை ஒப்பிட்டுப் பார்த்தால், பகை கொண்டு போரிட்ட சம்பவங்கள் மிகச் சொற்பமாகவே இருக்கும். மற்றும் அவை பகைவரின் வாய்க் கொழுப்பால் தோன்றியனவே யொழிய, தமிழர் வலுவில் செய்த சண்டைகளல்ல. வந்த சண்டையை விடாது போர்க்களம் புகுந்தனர். பகைவனைப் போரில் புறங்கண்ட போதும் அவனது நாட்டை, அந்நாட்டு மக்களை அடிமைப்படுத்திக் கொடுங்கோலோச்சியதாகவும் செய்தி இல்லை.

இனி, தமிழ் வேந்தர் பிற நாட்டு அரசர்களோடு உறவு கொண்ட வரலாற்றை ஆராய்வோம் :

அந்நாளில், தமிழ் மன்னர் பிற நாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுவரை அனுப்புவது வழக்கமாக இருந்து வந்தது. அதுபோலவே, பிறநாட்டுத் தூதுவர்களும் தமிழ் நாட்டுக்கு வருவதுண்டு. இப்படி பரஸ்பரம் அனுப்பப்படும் தூதுவர்கள் தாங்கள் செல்லும் நாட்டின் அரசருக்குக் காணிக்கை செலுத்துவதும உண்டு.

கி. மு. 20–ம் ஆண்டில், அதாவது இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ரோமாபுரியை ஆண்ட அகஸ்திஸ் சீசருக்கு பாண்டியன் ஒரு நல்லெண்ணத் தூதுகுழுவை அனுப்பியிருந்தான்.

இராஜராஜ சோழன், கி. பி. 1015–ல் தனது தூதுவரை சீனத்திற்கு அனுப்பி வைத்தாக சீன நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுக்குப் பின், கி. பி. 1034–ல்

ராஜேந்திர மன்னனும், கி. பி. 1077–ல் முதலாங் குலோத் துங்கனும், சீன தேசத்துக்குத் தூது அனுப்பி இருந்தனர்.

ரோமாபுரி மன்னருக்கும், நம் தமிழ் வேந்தருக்கும் உடன்படிக்கைகள் பல ஏற்பட்டன. அந்த உடன் படிக்கைகளைச் செய்து கொள்ள தமிழ்நாட்டு மன்னர் தமது பிரதிநிதிகளை (Ambassadors) அவ்வப்போது அனுப்பி வந்ததாக ரோம் நாட்டு வரலாறுகள் அறிவிக் கின்றன.

கி. பி. 1286–ல் பாண்டி வேந்தன் மங்கோலிய மன்னனை குலேகானிடம் தனது தூதுவரை அனுப்பி உறவு கொண்டதாக சீன வரலாறு கூறுகிறது.

அயல் நாட்டுப் போர்வீரர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ் வேந்தரிடம் சேவகம் புரிந்ததாகத் தமிழ் இலக்கி யங்கள் அறிவிக்கின்றன. யவனப் போர்வீரர்கள் மதுரைக் கோட்டையைக் காவல் புரிந்ததாகப் பத்துப் பாட்டில் காண்கிறோம்.

எந்த அசோகச் சக்ரவர்த்தியின் அறவாழியைக் கொடியில் பொறித்து இன்றைய இந்தியப் பேரரசு தமிழகத்தைக் கட்டி ஆள்கிறதோ, அதே அசோகச் சக்ரவர்த்தி தனது சாம்ராஜ்யத்தின் கீழ் தமிழகத்தை அடிமைப்படுத்த இயலாமல், ஜனநாயகப் போர்வையில் தமிழரை அடக்கி ஆள நினையாமல், அன்பு வழிப்பட்ட அரசியலால் தமிழரோடு உறவுகொண்டிருந்தான்.

அசோக மன்னன் தமிழரசர்களை 'எமது நண்பர்கள்' என கட்டளைத் தூண்களில் பொறித்து வைத்திருக்கிறான். இப்படிப் பெரும் பகுதி இந்தியா அசோக சாம்ராஜ்ய மாகவும், சிறுபகுதி தமிழகத் தனியரசுமாய்ப் பிரிந்திருந்த காலை இந்தியாவில் ஒற்றுமை குறைந்திருந்ததாகக் கூற

முடியாது. அதற்கு மாருக, உறவு ஆழமாக வேரோடி இருந்தது. ஏனெனில் அசோகப் பேரரசு தமிழகத்தைச் சுரண்டும் புத்தி கொண்டிருந்ததல்ல. அசோகரின் அன்பு மதமாகிய புத்தமதம் தமிழகத்தில் பரவுவதற்குத் தமிழ் வேந்தர்கள் ஆதரவு காட்டினர். புத்த மடங்களுக்கு மானியங்கள் வழங்கினர். காரணமென்ன ? புத்த சமயம் தமிழர் பண்பாட்டுக்குப் பொருந்துவதாக இருந்ததேயாம்.

சோழ, பாண்டிய மன்னர்களின் புகழ் கிரேக்கம், ரோம், எகிப்து, பாரசிகம், யூதம், சாவகம், மலேயா, பர்மா ஆகிய நாடுகளெங்கும் பரவியிருந்தது.

வெளிநாடுகளுடன் தமிழ்நாட்டார் வாணிபத்திலும், அரசியலிலும் மிக அழுத்தமான உறவு கொண்டிருந் தனர் என்பதை அதே காலத்தில் வட இந்தியாவில் நிகழ்ந்து வந்த படையெடுப்புக்களைக் கொண்டே அறிய லாம். வடஇந்தியாவில் கி. பி. 5-ம் நூற்றுண்டிலிருந்து 18-ம் நூற்றுண்டுவரை ஓயாது அந்நியரின் படையெடுப்பு நிகழ்ந்து வந்துள்ளது. கடைசி நூற்றுண்டுகளிலே ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் தென்னிந்தியர்மீது முஸ்லிம்களின் படையெடுப்பு நிகழ்ந்ததோடு, அதன் பெரும்பகுதியை அவர்கள் ஆண்டதும் உண்டு. இது சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர் ஆட்சி புரிந்த காலத்திலன்று. தமிழகத்தில், சாதிச் சழக்கும் சமயப் பிணக்கும் தமிழினத்தைப் பல்வேறு கூறுகளாகச் செய்து சீரழித்த பிறகே, தமிழ் நாட்டின்மீது முஸ்லிம் மன்னர் கண்ணேட்டம் விழுந்தது. அந்நாளில் தமிழகம் பல் வேறு குறுநில மன்னர்களால் தனித்தனியே ஆளப்பட்டு வந்தது. பொதுவாகச் சொன்னல், தமிழர்கள்மீது கொண்ட பகை காரணமாக, தமிழகத்தின் மீது எந்தப் படையெடுப்பும் நிகழ்ந்ததாகக் கூறுவதற்கில்லை. வட

நாட்டின்மீது படையெடுத்து வந்த இஸ்லாமியரும் தமிழ் நாட்டோடு நட்புக்கொண்டு வாழ்ந்ததே தமிழகத்தின் வரலாறு.

மற்றும், சிக்கந்தர் தலைமையின் கீழ் வடநாட்டின் மீது படையெடுத்து, அதைப் போர்க்களமாக்கிய கிரேக்கரும் தமிழ் நாட்டோடு உறவாகவே இருந்தனர். கிரேக்கரில் சிலர் தமிழ் மன்னருக்குத் தொண்டு செய்தும் வாழ்ந்தனர்.

இவ்வாறு வெளிநாடுகளோடும் இந்திய உள்நாடுகளோடும் உறவு கொண்டு வாழ்ந்தது பண்டைத் தமிழரசு. போக்கு வரத்தும், விஞ்ஞான அறிவும் போதிய அளவு அதிகப்படாத அந்த நாளிலும் தமிழர் பிற அரசுகளோடு நட்புக்கொண்டு வாழ்ந்தனர் என்றால், விஞ்ஞான அறிவும், சேர்ந்து வாழும் சந்தர்ப்பமும், வர்க்க உணர்ச்சியும், சர்வ தேச மனப்பான்மையும் வந்துள்ள இந்த நாளில், தமிழர் தனியரசு பெற்றால் அது இன்னொரு பாகிஸ்தான் ஆகி விடும் என்று கூறுவோர் தமிழரது பண்பாட்டைப் பழித்துப் பேசுவோரே யாவர்.

# மொழியும் வழியும்

தமிழ் "மறுமலர்ச்சி" பெற்று வருகிறது என்று எல்லோரும் சொல்லுகின்றனர். மறுமலர்ச்சி என்பதன் பொருள் என்ன? காலத்திற்கேற்றவாறு, மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வகையில் எளிய தமிழில், இனிய நடையில் புதுப்புது நூல்கள் தோன்றுவதேயாகும். அவை தமிழ் மொழியில் மட்டுமல்லாமல் தமிழ் வழியிலும் அமைந்திருத்தல் வேண்டும்.

முதலில் மொழியை எடுத்துக்கொள்வோம். தமிழ் மொழியில் நூல் எழுதும்போது அம் மொழிக்குரிய மரபை மறந்துவிடக்கூடாது. பிறமொழிச் சொற்களைத் தேவையில்லாத இடத்தில் கலப்பது தமிழ் மொழிக்குத் தீங்கு செய்வதாகும். பிறமொழிச் சொற்களைக் கலத்தல் கூடாது என்போரை "தனித் தமிழ்ப் பித்தர்" என்று தமிழ் மொழிப் பகைவர் எள்ளி நகையாடுகின்றனர். ஒரு சில தமிழறிஞரும்கூட பிறமொழிச் சொற்கள் கலவாத தமிழுக்கு 'தனித் தமிழ்' என்று கூறத் தயங்குவதில்லை. இவை இரண்டும் தவறாகும். முன்னது, இறுமாப்பால் எழுவது. பின்னது, மயங்கிப் பேசுவது. உண்மை என்ன

வெனில், 'தனித் தமிழ்' என ஒரு மொழியே இல்லை. தமிழில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்துவிடத்து வேண்டுமானால் அதைக் 'கலப்புத் தமிழ்' என்று எள்ளி நகையாடலாம். அஃதின்றி, 'தனித் தமிழ்' என்று உண்மைத் தமிழ்ப் பற்றுடையோரே கூறிக்கொள்வது ஏளனம் செய்வோருக்கு இடந்தருவதாகும்.

பிறமொழிச் சொற்கள் தேவைப்படுமானால் அவற்றை எடுத்துக்கொள்ள இடர்ப்பாடு ஒன்றுமில்லை. அதற்குத் தமிழ் இலக்கணமும் இடம் தருகின்றது. ஆனால் பிற மொழிச் சொற்கள் தேவைப்படுவது எங்கு? இதை அறிந்து கொள்ளும் திறம் தமிழ் எழுத்தாளருக்கு இருத்தல் வேண்டும். திருக்குறள் போன்ற சங்க நூல்களைக் கற்றூர்க்கன்றி அந்தத் திறமை வாய்த்தலரிது. இத்தகையார் எழுதும் நூல்கள் தமிழ் வழியில் அமையாததோடு, தமிழ் மொழியிலும் இருப்பதில்லை. சான்றாக சிலவற்றை ஆராய்வோம்.

பிறநாடுகளிலிருந்து புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப் படும் விஞ்ஞானக் கருவிகள், எந்த நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டனவோ அந்த நாட்டுக்குரிய மொழியில் பெயர் தாங்கி நம் தமிழ் நாட்டுக்கு வருகின்றன. சான்றாக, "ஏரோப்ளேன்" மேல் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டது. அதை நம் நாட்டில் 'ஆகாய விமானம்' என்ற பெயரால் அழைக்கின்றனா. 'ஆகாய விமானம்' என்பது தமிழ்ச் சொல் அல்ல. வடமொழிச் சொல். தமிழில் 'வானூர்தி' என்றே அழைத்தல் வேண்டும். இப்படிச் சொன்னால், குறுகிய மொழிப்பற்று என்று குறை கூறுகின்றனர். ஆனால் 'ஏரோப்ளேன்' என்ற ஆங்கிலச் சொல்லானது 'ஆகாய விமானம்' என்று வடமொழியில் பெயர்க்கப்படுவதில் குறுகிய மொழிப்பற்று இல்லையானால், அதை 'வானூர்தி'

என்று தமிழ்ப் பெயரால் அழைப்பதுமட்டும் எப்படிக் குறுகிய புத்தியாகும்? அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட 'ஆட்டம் பாம்' தமிழில் 'அணுக்குண்டு' என்று வழங்கப் படவில்லையா? "தமிழில் வருவதில் குற்றமில்லை. ஆனால், எளிதில் புரியவேண்டும்" என்பார் சிலர். வானத்தே ஊர்ந்து செல்வதால் ஏரோப்ளேனை வானூர்தி (வான்+ ஊர்தி) என்று சொல்கிறோம். இதில் புரியாதது என்ன இருக்கிறது? ஆனால், புரியும் தமிழில்தான் எழுத வேண்டும் என்று வழக்காடும் நண்பர்கள், பெயருக்கு முன்னே 'திருவாளர்' என்பதற்குப் பதிலாக 'ஸ்ரீமான்' என்றும், 'வணக்கம்' என்பதற்குப் பதிலாக 'நமஸ்காரம்' என்றும், 'மொழி' என்பதற்குப் பதிலாகப் 'பாஷை' என்றும் எழுதுகின்றனர். இவர்கள் தூய தமிழ்ச் சொற்கள் எல்லாம் புரியாதவை என்று கருதுகின்றனரா?

பண்டைநூற் புலவர்களெல்லாம் பிறமொழிச் சொற் களைக் கையாளவில்லையா? என்று கேட்கலாம். உண்மை தான். பண்டைநூற் புலவர்களும் பிறமொழிச் சொற் களைக் கையாண்டதுண்டு. செய்யுளுக்குத் தேவைப்பட்ட இடத்தில்தான் அப்படிக் கையாண்டார்க ளென்பதை மறந்துவிடக் கூடாது. மேலும், தமிழர் என்ற இன உணர்ச்சி ஒன்றே மொழித் துறையில் ஆட்சிகொண் டிருந்த பண்டைக்கால நூல்களில் சிற்சிலவிடங்களில் தான் வடமொழிச் சொற்கள் இலைமறை காயென இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், பிற்காலத்தில் இன வுணர்ச்சி மறைந்து சமயப்போர் மூண்டெழுந்தது. அப் போது பல்வேறு சமயங்களின் சார்பாக தமிழில் எழுதப் பட்ட சமய நூல்களில்தான் வடமொழிச் சொற்கள் மிகுதி யாகக் கலந்தன. பின்னர் அராபியர் தமிழகத்தில் குடி புகுந்தபோது அராபியச் சொற்களும், அதன்பின்னர்

ஆங்கிலேயர் ஆட்சி புரிந்தபோது ஆங்கிலச் சொற்களும் தமிழ் உரைநடை நூல்களிலும் பேச்சு வழக்கிலும் பெரிதும் கலக்கலாயின. எனவே, தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுவோர் முடிந்தவரை பிறமொழிச் சொற்களை விலக்கி மீண்டும் தமிழைப் பழைய நிலைக்குக் கொண்டுவரப் பாடுபட வேண்டும்.

பிறமொழிச் சொற்கள் உரை நடை நூல்களுக்குத் தேவையே இல்லை. ஏனெனில் தமிழ், தனித்தியங்கும் மொழி ; இன்றுங்கூடத்தான். ஆனால், செய்யுள் இயற்று வோர் பாவின் நயங்கருதிப் பிறமொழிச் சொற்களைக் கைக்கொள்வதாயினும், தமிழ் மரபை மறத்தல் கூடாது. சான்றாக, தர்மம் என்ற வடமொழிச் சொல்லை, தருமம் என்று எழுத வேண்டும். மற்றும் தேவையற்ற இடங் களிலெல்லாம் வடமொழி எழுத்துக்களைத் தமிழில் கலத் தல் கூடாது. லக்ஷ்மணன் என்பதை லட்சுமணன் என்று எழுதுவதே முறை. தமிழில் மிகப் படித்தவர்கள் கூட சுப்பிரமணியன் என்று எழுதாமல் ஸுப்ரஹ்மண்யன் என்றே எழுதுகின்றனர். இதில் சு என்ற தமிழ் எழுத் துக்கும் ஸு என்ற வடமொழி எழுத்துக்கும் உச்சரிப்பில் வேற்றுமை உண்டென்று வழக்காடலாம். ஆனல், தமிழ னுடைய நாக்குக்கு உச்சரிப்புப் பேதத்தை உணரும் திறனுண்டு என்பதை இவர்கள் அறியார்போலும் !

# இந்தி படும் பாடு !

'காங்கிரஸ் வட்டாரத்தில் இந்திக்கு எதிர்ப்பே இல்லை; எதிர்ப்பு இருக்கவும் கூடாது' என்பது ஒரு சில காங்கிரஸ் வாதிகளின் நினைப்பு. இந்தியை எதிர்க்கும் வட்டாரத்திலும் சிலர், 'இந்தி என்றால் காங்கிரஸ்; காங்கிரஸ் என்றால் இந்தி' என்று இரண்டையும் பிணைத்து நினைத்துக் கொண்டு இந்தி எதிர்ப்பை காங்கிரஸ் எதிர்ப்பாக மாற்றுகின்றனர்!

இந்த இரண்டு தரப்பாரும் பரஸ்பரம் கட்சி விருப்பு வெறுப்பு காரணமாக உண்மையை மறந்து விடுகின்றனர்; அல்லது மறைத்துவிடுகின்றனர். எத்தகைய வெறுப்பு மனப்பான்மையுமின்றி, அகில இந்தியக் கண்கொண்டு இந்திப்பிரச்னையை ஆராய்ந்தால், இந்தி மொழிக்கு பிறந்த இடத்திலேயே—அரசியல் காரணத்திற்காக அதை ஆதரிக்கும் வட்டாரத்திலேயே—பலவித வடிவங்களில் எதிர்ப்பு இருந்து வருவதை எளிதில் புரிந்து கொள்ளலாம். இந்திக்கு வட நாட்டிலுள்ள எதிர்ப்பை ஆராயுமுன்னர், அம்மொழியின் பிறப்பையும், அமைப்பையும் ஓரளவு அறிந்து கொள்வது நல்லது.

இந்திமொழி, ஒன்பதாம் நூற்றுண்டுக்குப் பிறகுதான் தோன்றியது. அதாவது இந்தியாவில் எத்தனை மொழிகளுண்டோ அத்தனை மொழிகளுக்கும் பின்னே பிறந்த மொழி ஒன்று உண்டென்றால், அது இந்தி மொழியேயாகும்.

இந்தி மொழியின் பிறப்பு இவ்வாருக, அதன் அமைப்பு தமிழைப்போல் ஒரே வகைப்பட்டதல்ல. வட இந்திய மாகாணங்களில் எங்கெல்லாம் இந்தி வழங்கப் படுகிறதோ, அங்கெல்லாம் ஒவ்வொரு மாகாணத்திலும் வெவ்வேறு விதமாகப் பேசப்படுகிறது. அசல் இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட பிரதேசம் ஐக்கிய மாகாணம் ஒன்றுதான். மத்திய மாகாணத்தில் மகா கோசலம் என்ற ஒரு பகுதியில் மட்டுந்தான் இந்தி பேச்சு வழக்கில் இருந்து வருகிறது. ஏனைய மாகாணங்களிலெல்லாம் அந்தந்த மாகாண மொழிகளுடன் உறவாடித்தான் இந்திமொழி உயிர் வாழ்ந்து வருகிறது.

பொதுவாக, இந்தி மொழியை இரண்டு விதமாகப் பிரிக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ஒன்று, அரபிச் சொற்கள் அதிகமாகக் கலந்த இந்துஸ்தானி. இன்னொன்று, சமஸ்கிருதச் சொற்கள் அதிமாகக் கலந்த இந்தி. ஆகவே, இந்திய நாட்டிற்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்ற பிரச்னையில் இந்தி வேண்டுமா அல்லது இந்துஸ்தானி வேண்டுமா என்ற வாதம் வடக்கே பலமாக நடந்து வருகின்றன. இந்த வாதத்தில் சமயப் பூசலும் இடம் பெற்று நிற்கிறது.

இந்து மதத்தில் தீவிரப் பற்றுள்ள காங்கிரஸ் வாதிகள், சமஸ்கிருதச் சொற்கள் கலந்த இந்திதான் வேண்டுமென்கின்றனர். இவர்களுக்கு பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் தலைவர். அரபிச் சொற்கள் கலந்த எளிய

இந்துஸ்தானிதான் வேண்டுமென்பது, சற்று தாராள நோக்குடைய காங்கிரஸ்வாதிகளின் கட்சி. இவர்களுக்குத் தலைவராக விளங்குபவர் பண்டித நேரு.

'இந்தியா, இந்துஸ்தானியா?' என்னும் சண்டை ஒருபுறமிருக்க, இந்தியானாலும் சரி, இந்துஸ்தானியானாலும் சரி — இரண்டில் பொது மொழியாக ஏற்கப் படும் ஒன்றை எந்த எழுத்தில் எழுதுவது என்ற சண்டையும் மற்றொருபுறம் இருந்து வருகிறது!

தேவநாகரி 'லிபி'யில் எழுத வேண்டுமென்போர் ஒரு தரப்பினர். உருது லிபியில்தான் எழுத வேண்டுமென் போர் மற்றொரு தரப்பினர். "இரண்டு 'லிபி'களில் அவரவர் விருப்பம்போல எதில் வேண்டுமானாலும் எழுதிப் படிக் கலாம்; ஆனால், அதன் பெயர் இந்துஸ்தானியாக இருப் பதே நலம்" என்றுதான் காலமெல்லாம் கூறிவந்தார் காந்தியடிகள். "தேவநாகரி 'லிபி' யும் வேண்டாம்; உருது 'லிபி' யும் வேண்டாம்; ரோமன் 'லிபி'யில் இந்தியை எழுதலாம்" என்பது சுபாஷ் பாபுவின் கருத்து. நேருவும் ஒரு காலத்தில் இதே கருத்தைக் கொண்டிருந்தார். ஆனால், தாம் அக்கருத்திலிருந்து மாறி தேவநாகரி லிபியே வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டதாக தமது 'சுய சரிதை'யில் எழுதியிருக்கிறார்!

இந்தியைப் புகுத்த விரும்புவோரின் எண்ணத்தையே சந்தேகிக்கிறார் தலைவர் ராஜாஜி. அவர் வங்க கவர்னராக இருந்தபோது கல்கத்தா நகரில் ஒரு இந்திப் பள்ளியைத் திறந்து வைக்கையில்,

> "இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட வர்கள்தான் அதைப் பொது மொழியாகத் திணிக்க வேண்டு மென்பதில் அதிக அகம்

பாவம் கொண்டிருக்கின்றனர். இவர்கள், எதிர்ப்பவர்களின் கருத்துக்கு மதிப்புத் தருவதில்லை''

— என்று பேசியிருக்கிறார். இது ஒரு புறமிருக்க, ''இந்தி அல்லது இந்துஸ்தானி இவற்றில் எதை ஏற்பினும், அதைத் தேசீய மொழி என்பதா அல்லது பொதுமொழி என்பதா என்ற வாதம் வேறு வளர்ந்து வருகிறது.

அரசியல் நிர்ணய மன்றத்தில் இதுபற்றி விவாதம் நடந்தபோது, இந்திக்கு 'தேசீய மொழி' என்று பெயர் வைப்பதை கோவை திரு. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் தமிழகத்தின் சார்பாக எதிர்த்துப் பேசியிருக்கிறார். ''தமிழ் மொழி, இந்தி அல்லது வடமொழியுடன் எந்த விதத்திலும் தொடர்பற்ற தனி மொழி. எனவே, தமிழகத்திலும் இந்தியை தேசீய மொழியாக்குவது முறைகேடான செயல்'' என்று அவர் காரணம் காட்டி எதிர்த்தார்.

'தேசீயமொழி' என்பதற்கும், 'பொதுமொழி' என்பதற்கும் உள்ள வேற்றுமை மகத்தானது. 'பொதுமொழி' என்றால், பல்வேறு மொழிகள் பேசும் வெவ்வேறு தேசீய இனத்தவர்களும் கலந்து பழகப் பயன்படும் ஒரு கருவி என்பதைத் தவிர, அதற்கு வேறு எந்தவிதமான உரிமையும் பெருமையும் இருக்க முடியாது.

'தேசீயமொழி' என்றால் அப்படியல்ல. இந்திய தேசத்தின் எந்தப் பகுதியிலும், எந்தத் துறையிலும் நுழைய உரிமையுள்ள மொழி என்றே பொருள்.

'' இந்தியா ஒரே நாடு; இந்தியர் அனைவரும் ஒரே இனம்; ஆகவே, அவர்கள் பேசுவதற்கும், அவர்களை ஆள்வதற்கும் ஒரே மொழிதான் பயன்பட வேண்டும். மாகாணமொழி என்பதெல்லாம், வெறும் கலாச்சாரங்களைப் பற்றி கதையளப்பதற்குத்தான்'' — என்பது இந்தி

யைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் எண்ணம். அதனுல்தான், வட இந்தியாவில் இந்தியை ஏற்றுக் கொள்பவர்கள்கூட அதற்குத் 'தேசிய மொழி' என்று பெயர்வைப்பதை எதிர்க்கின்றனர். இந்த எதிர்ப்பில் முன்னணியில் நிற்பவர்கள் வங்காளிகள்.

'இந்தியே வேண்டாம்' என்று கூறுவோரும் காங்கிரசில் இல்லாமலில்லை. "இந்திய நாட்டின் தேசிய மொழியாக இருக்க இந்திக்கு எந்த விதமான தகுதியும் இல்லை ; சமஸ்கிருதம்தான் அந்தஇடத்தைப் பெறத் தகுதியும் உரிமையும் உடையது" என்கிருர் பிரபல காங்கிரஸ் தலைவர் கே. எம். முன்ஷி. ஆந்திர சர்வகலாசாலை துணை வேந்தரான சி. ஆர். ரெட்டியும் இதே கருத்தை அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்.

இத்தகைய போராட்டங்களால்தான் வட இந்திய மாகாணங்களில் இன்னமும் இந்தியைக் கட்டாய பாடமாக்கவில்லை. இதுவரை கூறியவற்றிலிருந்து, வடஇந்தியாவிலேயே—அதுவும் பிரசித்தி பெற்ற காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளேயே—இந்தி மொழிபற்றி எத்தனை போராட்டங்கள் இருந்து வருகின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம். பெயரைப்பற்றிப் போராட்டம்! சொற்களைப் பற்றிப் போராட்டம்! எழுத்தைப் பற்றிப் போராட்டம்! உழக்கிலே கிழக்கு மேற்கு பார்ப்பதைப் போல, 'இந்தியா, சமஸ்கிருதமா?' என்ற போராட்டமும் வேறு!

இவ்வளவு போராட்டங்களுக்கிடையே இந்திமொழி வடக்கே படாதபாடு படும்நிலையில் அம்மொழியுடன் எந்த விதத்திலும் தொடர்பற்ற செந்தமிழ் வழங்கும் நாட்டில், இந்தியைக் கட்டாய பாடமாக்கியுள்ளார் நமது கல்வி அமைச்சர். அதிலும், தமக்கே நம்பிக்கை இல்லாத நிலையில் தமிழ்மக்கள் மீது அதைக் கட்டாயமாகச் சுமத்தி

யுள்ளார். இந்தி 'தேசிய மொழி' என்பதில் அவருக்கு நம்பிக்கை இருந்தால், அசெம்பிளியில் எழுந்த ஒரு கேள்விக்கு, 'தமிழகத்திற்கு இந்தி அந்நிய மொழிதான்' என்று பதிலளித்திருப்பாரா? மேலும் செயலளவில் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் படுத்தியிருந்தும் அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத் துணிவின்றி, 'இந்தி கட்டாய பாடமல்ல' என்று உண்மைக்கு மாருக ஊர்சுற்றிப் பேசுவாரா?

இந்தியில் அவருக்கு நம்பிக்கை இருந்திருந்தால், முதலில் தமிழகத்திற்கு மட்டும் இந்தி விருப்பப் பாடமாக இருக்குமென்று கட்டளையிட்டிருப்பாரா?

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அவரே இது வரை அதைப் படிக்காமலிருந்திருப்பாரா?

தாமே விரும்பாத ஒன்றை, கேவலம் பதவியிலிருக்கும் காரணத்தால் நாட்டு மக்கள்மீது திணிக்க முயல்வது வெட்கக் கேடான செயலல்லவா? வட நாட்டில் இந்தியை ஒப்புக் கொள்ளும் காங்கிரஸ்காரர்கள்கூட அதன் பெயரைப் பற்றி, எழுத்தைப்பற்றி, சொல்லைப் பற்றி தங்களுக்குள்ள கருத்துவேற்றுமையைப் பகிரங்கமாகக் கூறிச் சண்டைபோட உரிமை இருக்கும்போது, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் ஏன் அந்த உரிமை இல்லை? இவற்றைத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நண்பர்கள் ஆழ்ந்து சிந்திப்பார்களாக!

—'முரசு' 22-7-48.

## சொல்லாட்சி!

தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டுமானல், தமிழ்ச் சொற்களைக் காப்பதில் கவனம் செலுத்த வேண்டும். தமிழ் மொழிச் சொற்கள் ஏனைய மொழிச் சொற்களைவிட வளம் வாய்ந்தவை; வரலாற்றுச் சிறப்பும் உடையவை. அதனுற்ருன், "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்ருர் பாரதியார். தமிழில், மிகுதியான சொற்கள் வழக்கிழந்து விடுமாயின், நாளடைவில் தமிழே வாழ்விழக்க நேரலாம். அந்த அபாயம் தமிழுக்கு நேராமலிருக்க, அதன் சொற்களைக் காப்பதில் தமிழன்பர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ் மொழி தோன்றிய காலம் தொட்டு அம்மொழியோடு தொடர்பு கொண்டிருந்த சொற்களில் எண்ணற்றவை இறந்து விட்டன. அதன் விளைவாக, அந்தச் சொற்களால் இயற்றப்பட்ட சங்ககாலப் பாடல்களை சாதாரணப் படிப்புள்ளவர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது.

தமிழ்ச் சொற்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கூறுவது, பிறமொழிச் சொற்களே தமிழில் கலக்கக்

கூடாதென்ற பிடிவாத குணத்தாலன்று. 'தேவைப்படு மிடத்து' பிறமொழிச் சொற்கள் தமிழில் கலக்கலாம். தமிழ் இலக்கணமும் அதற்கு இடம் தருகிறது. ஆனால், எளிதில் புரியக்கூடிய, பொருட் செறிவுடைய தமிழ்ச் சொற்களைப் புறக்கணித்து விட்டு, பிற மொழிச் சொற் களைத் தமிழில் புகுத்துவது அல்லது புக இடம் தருவது, ஒன்று அறியாமை; அல்லது அறிந்தே செய்யும் நாசவேலை.

சான்றாக, "உயர்நிலைப்பள்ளி", "கல்லூரி" என்ற இனிய தமிழ்ச் சொற்களை விடுத்து, "ஹைஸ்கூல்" "காலேஜ்" என்ற ஆங்கிலச் சொற்களைத் தமிழில் கலப் பானேன்? ஆங்கிலச் சொற்கள் தமிழ் ஏடுகளில் புகுந்து நிலைத்து விட்டால், அவற்றிற்கு ஈடான தமிழ்ச் சொற்கள் நாளடைவில் வழக்கிழந்து மறைந்து விடுமல்லவா! தொன்று தொட்டே வழங்கிவரும் சொற்கள் மிகுதியும் குறைந்துபோய் வேற்றுமொழிச் சொற்கள் அதிக மாகக் கலந்துவிட்டால், அப்புறம் தமிழின் அழிவைத் தடுக்க ஆண்டவனாலும் முடியாது. முற்காலத்தில் தமிழ கத்தின் மேற்குக் கரையோரத்தில் சமஸ்கிருதம் குடி புகுந்தபோது அங்கு வாழ்ந்த மக்கள் தமிழ்ச் சொற்களினும் வடமொழிச் சொற்களையே மிகுதியாகக் கையாண்டிருக்க வேண்டும். அதனால்தான் அந்த நிலத்தில் தமிழ் அழிந்து வடமொழிச் செல்வாக்கே மிகுதியுமுடைய மலையாள மொழி தோன்றலாயிற்று. அதன் விளைவாக, தமிழ் நாட்டின் ஒரு பகுதி தமிழுக்குப் புறம்பான நிலமாயிற்று. தமிழரில் ஒரு சாரார், தமிழ ரல்லாதாராகி விட்டனர்.

வெறும் சொற்களைக் காப்பதிலும், பெயர்ச் சொற்களைக் காப்பது இன்றியமையாததாகும். பெயர்ச்

சொற்களைச் சிதைப்பதோ அல்லது முற்றும் மறைய விடுவதோ, தமிழ் நாட்டின் பெருமைக்கும், பழங்காலச் சிறப்புக்கும் கேடு செய்வதாகும். பெரும்பாலும் ஒரு நாட்டின் வரலாற்றுக்கு, அவ்வரலாற்றை யொட்டிய ஆராய்ச்சிக்கு உறுதுணை செய்வது பெயர்ச் சொற்களே யாகும். அந்தப் பெயர்கள் மறைந்துவிட்டால், அல்லது பொருளில் மயக்கமோ, மாற்றமோ தரும் வகையில் திருந்திவிட்டால், அவற்றை யொட்டிய வரலாறும் மறைந்துவிடும் ; அல்லது மாற்றமடையும்.

சென்னையிலுள்ள ஒரு பாலத்திற்கு 'ஹாமில்டன் பாலம்' எனப் பெயர் வைத்தது அரசாங்கம். 'ஹாமில்டன்' என்பது ஒரு ஆங்கிலக் கலெக்டரின் பெயர். அவருடைய நினைவுக்கு அறிகுறியாகவே அந்தப் பாலத் துக்கு 'ஹாமில்டன் பாலம்' எனப் பெயரிடப்பட்டது. ஆனால், நாளடைவில் 'ஹாமில்டன்' என்ற சொல் பாமர மக்களின் வாயில் 'அம்பட்டன்' எனத் திரிந்து வழங் கியதால், ஹாமில்டன் பாலமும் அம்பட்டன் பாலமாகி விட்டது. இதனால் எந்த அதிகாரியின் நினைவுக்கு அறி குறியாக அந்தப் பாலத்துக்குப் பெயரிடப்பட்டதோ அந்த நினைவு பற்றிய செய்தி மறைந்துவிட்டதல்லவா ?

இன்று 'வேதாரண்யம்' என்று அழைக்கப்படும் ஊரின் பண்டைப் பெயர், 'மறைக்காடு' என்பதாகும். தமிழ் இலக்கியங்களிளெல்லாம் அந்த ஊர் 'மறைக்காடு' என்றே பெயர் பெற்றிருக்கிறது. தமிழகத்தில் வட மொழி ஆதிக்கம் செலுத்திய பிற்காலத்தில், 'மறைக் காடு' என்னும் தமிழ்ப் பெயர் மறைந்து, 'வேதாரண்யம்' என்ற வடமொழிப் பெயர் வழங்கலாயிற்று. இப்பொழுது அந்த ஊரில் வாழ்வோரை நோக்கி, 'மறைக்காடு எது ?'

என்று கேட்டால் விழிப்பார்களே யொழிய, 'இதுதான் மறைக்காடு' என விடையளிக்க மாட்டார்கள்.

இன்று 'திருச்சி' என்று வழங்கும் நகரின் சரியான பெயர் 'திருச்சிராப்பள்ளி' ஆகும். 'சிராப்பள்ளி' என்பதே நகரின் பெயர். தமிழின் மரபுக்கேற்ப, அழகு என்ற பொருளில் வழங்கும் 'திரு' என்ற சொல் அடைமொழியாக்கப்பட்டு, 'திரு-சிராப்பள்ளி' என நாட்டிலும் ஏட்டிலும் வழங்கி வந்தது. அந்தத் 'திருச்சிராப்பள்ளி'யை ஆங்கிலேயர் உச்சரிக்கத் தெரியாமலோ அல்லது நீண்ட பெயர்களை யெல்லாம் குறுக்கித் தொலைக்கும் ஆங்கில மரபாலோ 'ட்ரிச்சி' என உளறினர். அந்த உளறலையே உபதேசமாகக் கொண்டு ஆங்கிலம் படித்த தமிழர்களும் 'ட்ரிச்சி' என்றனர். பின்னர், தமிழ் எழுத்தாளர்கள் இலக்கண மரபு கெடாமல் 'திருச்சி' என எழுதி வந்தனர். இந்தச் சொல்லுக்குப் பொருளே கிடையாது.

பழைய பெயரையே பாதுகாக்க விரும்பியவர்கள், 'திருச்சி'யோடு, 'ஞப்பள்ளி'யையும் (அதற்கு என்னதான் பொருளோ இறைவனே அறிவார்!) சேர்த்து, 'திருச்சிஞப்பள்ளி' யாக்கினர். ஆம், எல்லோருமாகச் சேர்ந்து 'ரா'வை விழுங்கி விட்டனர். நல்ல வேளையாக நாடு விடுதலை பெற்றபின் காங்கிரஸ் அரசாங்கம், தமிழ் வரலாற்று வழிப்பட்ட முழுத் திருச்சிராப்பள்ளிக்கும் உயிர் கொடுத்தது.

உலகிலுள்ள எந்த மொழியிலும் சொற்கள் பொருளோடுதான் வழங்கி வரும். சொல்லைச் சிதைத்து எழுதும்போதுதான் பொருள் மாறி விடுகிறது; அல்லது பொருளே மறைந்து வெற்றுச் சொல்லாகி விடுகிறது.

எள்ளைப் பிழிந்து எடுக்கப்பட்ட நெய், எள்-நெய் ஆகும். அந்த இரு சொற்களும் இலக்கன வழி மருவி

'எண்ணெய்' என்ற ஒரே சொல்லாயிற்று. ஆனால், பெரும்பாலான தமிழர்கள் எண்ணை என்றே எழுதுகின்றனர். 'எண்ணை.' என்ற சொல்லுக்கு ஒரு பொருளும் இல்லை. அப்படியே 'செலவு' என்ற சொல்லை 'சிலவு' என்றும், 'பட்டினம்' என்ற சொல்லை பட்டணம் என்றும் பொருளிழந்த வெற்றுச் சொற்களாக்கி நூல் வழக்கிலும் நுழைத்து விட்டனர்.

இலக்கியங்களில் உயர் பொருளைக் குறிக்கும் பல சொற்கள் இன்றைய மக்களிடையே தாழ்வான சொற்களாகக் கருதப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களில் 'ஐ' என்ற ஓரெழுத்துச் சொல்லும், "ஐயா" என்ற சொல்லும் தலைவனை-தளபதியை அல்லது பெரியோரைக் குறிப்பனவாகும். திருக்குறள் படைமாட்சியில், ஒரு படை வீரன் தன் பகைவர்களைப் பார்த்து, "என் ஐமுன் நில்லன்மின்" என்று எச்சரிக்கை செய்கிறான். அதன் பொருள், "என் தலைவனை எதிர்த்தும் போரிட்டால் வீழ்ச்சியுறுவீர்; ஆகவே விலகிப் போய்விடுங்கள்" என்பதாகும். இங்கே, 'ஐ' என்ற சொல் தளபதியையே குறிக்கிறது.

திருவாசகத்தில், "வேதங்கள் 'ஐயா' என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" எனக்கூறி இறைவனைப் போற்றுகின்றார் மாணிக்க வாசகர். இதில் வரும் 'ஐயா' என்ற சொல் தலைவனை-அதாவது இறைவனையே குறிக்கின்றது.

இவ்வளவு சிறப்புடைய 'ஐயா' என்ற சொல்லால் சென்னை நகரில் ஒருவரை அழைத்து விட்டால், வந்தது அபாயம்! ஆம், 'ஐயா' என்பது மரியாதையைக் குறைக்கும் சொல்லாக எண்ணுகின்றனர் சென்னை மக்கள். ஆனால், இன்றைக்குக்கூட தமிழ்நாட்டின் தெற்கு

ஜில்லாக்களில் அச்சொல் மரியாதைக் குரியதாகவே கருதப்படுவது மகிழ்ச்சிக் குரியதாகும்.

தமிழிலுள்ள 'அவன்' என்ற சொல்லேயும் மரியாதைக் குறைவானதாக மதிக்கின்றனர் சிலர். அதனுல், பணியாளே 'அவன். இவன்' என்று கூறுகின்றனர். இழிவுபடுத்தும் கருத்துடன் பகைவரையும் 'அவன்' எனக் குறிப்பிடுகின்றனர். மதித்தற்குரியாரை 'அவர்' என்கின்றனர். ஆனுல், உண்மையில் 'அவன்' என்ற சொல்லில் மதிப்பும் இல்லே; மதிப்புக் குறைவும் இல்லே. 'அவள்' என்ற சொல் பெண்பாலேக் குறிப்பது. அதற்கு எதிரான 'அவன்' என்ற சொல் ஆண் பாலேக் குறிப்பது. ஆகவே, 'அவன்' என்ற சொல்லில் அவமதிப்பு ஒட்டிக் கொண்டிருப்பதாகக் கருதுவது அறியாமை. ஆங்கிலத்தில் 'He' என்ற சொல், ஆண்பாலாரில் ஏற்றத் தாழ்வின்றி எல்லோருக்குமே பயன்படுகிறதல்லவா? அது போலத்தான் தமிழிலுள்ள 'அவன்' என்ற சொல்லும். தமிழ் இலக்கியங்களில் புலவர்களேயும் இறைவனேயும் 'அவன்' என்ற சொல்லாலேயே குறிப்பிட்டிருப்பதை அறியலாம்.

குமரகுருபர சுவாமிகள் தாம் இயற்றிய பிரபந்தத்துள் ஒன்றுன சிதம்பரச் செய்யுட் கோவையில் ஒரு பக்கம் ஆணும், மற்ருெரு பக்கம் பெண்ணுமாய் அர்த்தநாரி வடிவத்தில் காட்சியளிக்கும் இறைவனே 'ஒருத்தன் என்பதா? ஒருத்தி என்பதா? என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு, "ஒருத்தனும்-ஒருத்தியும் ஒரே வடிவில் நிற்பதால் இருவருக்கும் பொருத்தமாக 'ஒருவர்' என்கின்றேன்" என விடையும் விளக்கமும் தருகின்றுர். அதோடு ஆண் பெண் இரு பாலாரையும் குறிக்கும்

' ஒருவர் ' என்ற இயற் சொல் படைத்த தமிழின் பெருமையையும் போற்றுகிறார்.

ஒருவனுக்கும் ஒருத்திக்கும்
உருவொன் றுலவ்
உருவையஃது ஒருத்தனென்கோ
ஒருத்தி யென்கோ
இருவருக்கும் உரித்தாம்
' ஒருவர் ' என்றோர்
இயற்சொலில தெனின்யான்மற்
றென்சொல் கேனே

என்பதே அப்பாடல்.

' அவர் ' என்பது, ஆண்—பெண் இருபாலாரையும் ஒரு சேரக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டிருப்பது விளங்கும்.

' அவர் ' என்பது மரியாதைக்குரிய சொல்லாகக் கருதப்படுவதால், ஒருவருடைய பெயருக்குப் பின்னே ' அவர்கள் ' என்ற சொல்லும் சேர்கப்படுகிறது போலும்! இது, போலி மரியாதையாகும். ' அவர்கள் ' என்ற ஒட்டுப் போடாமல் அசல் பெயரை மட்டுமே குறிப்பிடுவதால் குறைவு ஒன்றுமில்லை.

தமிழ் நாட்டுப் பார்ப்பனர், பெற்ற தாயை ' அவள் ' என்றும், தந்தையை அவன் என்றும் கூறி வருகின்றனர். அது இலக்கண மரபுக்கு விரோதமானதல்ல. என்றாலும், பழக்கம் காரணமாக அப்படிக் கூறும் பார்ப்பனரை சிலர் பழித்துப் பேசுவதைப் பார்க்கிறோம்.

அம்மாஞ்சி, ஆத்துக்காரி என்ற சொற்கள் தூய தமிழ்ச் சொற்களின் திரிபாகும். அதாவது, ' அம்மான்சேய் ' என்பது ' அம்மாஞ்சி ' எனவும்

இல்லாள் என்ற பொருளில் வரும் 'அகத்துக்காரி' என்பது ஆத்துக்காரி எனவும் மருவிவிட்டன. வடமொழிப் பற்றுடையோர் எனக் கருதப்படும் பார்ப்பனர் மட்டுமே அச் சொற்களைப் பயன்படுத்தி வருவதால் அவை வடமொழிச் சொற்களாகவே இருக்கலாம் என்று வடமொழி எதிர்ப்பாளர்கள் சிலர் நினைக்கின்றனர்.

சொற்களைத் தாழ்ந்த பொருளில் உபயோகிப்பது தமிழின் பெருமையைக் குறைப்பதாகும். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளுக" என்றார் வள்ளுவர். உள்ளுவது மட்டுமில்லாமல்,சொல்லுவதெல்லாம் உயர்சொல்லாகவே இருக்கவேண்டும். திடீரென்று ஒருவர் மெலிந்திருக்கக் கண்டால், 'என்ன நோயோ?' என்று நாம் கேட்கின்றோம். யாழ்ப்பாணத் தமிழர்கள் 'வருத்தமோ?' என்று கேட்கிறார்கள். சாதாரணமாக, மனதில் ஏற்படும் நோயைத்தான் நாம் வருத்தம் என்ற பெயரால் குறிப்பிடுகிறோம். ஆனால் யாழ்ப்பாணத் தமிழர்கள் உடல் நோயையும் வருத்தம் என்றே குறிப்பிடுகின்றனர். 'மெய் வருத்தம் பாரார்' எனத் துவங்கும் பாடலில் உடல் நோயும் 'வருத்தம்' என்ற சொல்லாலேயே உணர்த்தப் படுகிறதல்லவா!

—'செங்கோல்' 2—11—'52.

## சென்னையில் தமிழரும் உளரோ ?

தமிழர், தமிழராக வாழவில்லை. தமிழருடைய உணவு, உடை, பழக்க வழக்கம் ஆகிய எதிலுமே தமிழ் மணக்கவில்லை. 'தமிழர்' என்ற பெயர் கொண்டு வாழ்கின்றனரே யன்றி, தமிழர் உள்ளத்திலே 'தமிழன்' என்ற உணர்ச்சி இல்லை. தமிழ் இனத்தை, தமிழ் நாட்டை, தமிழ் மொழியை, தமிழனல்லாத ஒருவன் குறைவாகப் பேசினால், அதைக் கேட்கும் தமிழனின் நெஞ்சு கொதிப்ப தில்லை. தன்னைக் குறை கூறினால், ஆத்திரப்படுகிறான்; தமிழ் இனத்தைக் குறைகூறினால், அதைக்கேட்டு அமைதியோடு வாழ்கின்றான். ஆம்; இனமானத்தைவிடத் தனது மானமே பெரிதென்று எண்ணும் நிலைக்குத் தமிழர் தாழ்ந்து விட்டனர்.

சென்னை நகரைச் சுற்றிப் பார்த்தால், தமிழ் மணக்கின்றதா ? இல்லை, இல்லை. எங்கெங்கும் ஆங்கில மயம். தமிழரல்லாதாரின் ஆதிக்கம்.

சிற்றுண்டிச் சாலைகள் எல்லாம், 'மாடர்ன் கபே'—'ஆரிய பவன்'—'உடுப்பி ஹோட்டல்' என்று பிறமொழி

பிலேயே, தமிழுக்கு எதிரான பண்பிலேயே பெயரிடப் பட்டுள்ளன.

தமிழர் அல்லாதார் நடத்தப்படுவதால், அவற்றிற்குத் தமிழ்ப் பெயர் இல்லை என்று சொல்லி விடுவதற்கில்லை. தூய தமிழர்களாலேயே நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகளுக்குக்கூட 'சிட்டி கபே', 'கபே காசினோ'' 'ரத்ன விலாஸ்' என்றே பெயரிடப்பட்டுள்ளன.

பூங்காக்களில் புகுந்தால், அங்கும் 'ராபின்ஸன் பார்க்', 'பீப்பிள்ஸ் பார்க்', 'நேப்பியர் பார்க்' என ஆங்கில நாற்றமடிக்கிறதே யன்றி, தமிழ் மணம் வீசவில்லை.

சென்னை நகரத்தின் பகுதிப் பெயர்களைப் பார்த் தாலும், 'ஜார்ஜ் டவுன்', 'பார்க் டவுன்', 'கிரே நகர்', 'கான்ரான்ஸ்மித் நகர்' என எல்லாம் ஆங்கில ஆதிக்க வெறியர்களின் பெயர்கள் தான்.

கடற்கரைக்குக்கூட, 'மெரினா பீச்' என்றே பெயர். அங்கிருக்கும் சிற்றுண்டிச் சாலைக்கு 'மெரினா கான்டீன்' என்றும், நீந்தும் இடத்துக்கு 'ஸ்விம்மிங் பூல்' என்றுமே பெயரிடப்பட்டுள்ளன. அந்தோ! இயற்கை அழகொழுகும் கடற்கரையில் கூட நம் இன்பத் தமிழ் மணக்கவில்லையே!

பசி வருங்கால் சிற்றுண்டிச் சாலைக்குள் புகுந்து, "என்ன இருக்கிறது." என்று கேட்டால், 'ரவா கேசரி' 'பாதம் அல்வா', 'டில்லி பாதுஷா', 'குலாப் ஜாமன்' என்று பண்டங்களின் பெயர்களைக் 'கியூ' வரிசையில் வைத்துக் காட்டுகின்றார் பரிமாறும் தொழிலாளி. அவற்றில் ஒரு பண்டத்திலும் தமிழ்ச்சுவை இல்லையே!

சென்னை பெரிய ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தால் பகுதிகளின் பெயர்கள் எல்லாம், 'ஹாவ்லக் வார்டு',

'ப்ளாரன்ஸ் வார்டு', 'வென்லக் வார்டு' என வெள்ளை நிறத்தவரின் முழக்கந்தான் ; தமிழன் பெயரில்லை.

வீதிகளின் பெயர்களைப் பார்த்தாலும், மவுண்ட் ரோடு, பிராட்வே, பாரிஸ் கார்னர், எஸ்பிளனேடு, எல்டாம்ஸ் ரோடு, வால்டாக்ஸ் ரோடு எனப் பறங்கியர்கள் மொழியில் இருக்கின்றனவே யன்றி, நமது பண்பார் தமிழ் மொழியில் இல்லை.

சந்துமுனைச் சுவர்களில் உள்ள வீதிகளின் பெயர் விளக்கும் பலகைகள் எல்லாமும் ஆங்கிலத்தில் இருக்கின்றனவே யன்றி, தமிழில் இல்லை.

மக்களின் வரிப்பணத்தால் நிர்மாணிக்கப்பட்ட நகர சபைக்குச் செந்தமான கட்டிடங்களுக்கும் 'ரிப்பன் பில்டிங்', 'மூர்மார்க்கெட்', 'ஸ்டேடியம—பவலியன்', 'விக்டோரியா பப்ளிக் ஹால்' என நம்மை அடக்கியாண்ட அன்னியரின் பெயர்களே சூட்டப்பட்டுள்ளன.

"ஆங்கிலேயரை வெளியேற்றினோம்; நல்லதுதான். ஆனால், ஆங்கிலத்தையும் வெளியேற்றிவிடக்கூடாது. அதனால் கெடுதல் விளையும்" எனக் கூறுகின்றனர் சில தலைவர்கள். அவர்கள் கூறுவதை நாம் அப்படியே ஏற்காவிட்டாலும், சில நிபந்தனைகளோடு ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், ஆங்கிலத்தை இப்படித்தான் பயன்படுத்த வேண்டுமா? வேலைக்காரியை வீட்டுக் காரியாக்கும் முறையிலா? வந்தவனுக்குப் பெருமை ; இருந்தவனுக்கு இழிவு என்ற நிலையிலா ?

இந்த அவலநிலை, அவமானநிலை இன்றே அகல வேண்டும்.

தமிழர்களே! கடைகளில் தொங்கவிடப்படும் விளம்பரப் பலகைகள் எல்லாம் தமிழிலேயே இருக்கவேண்டும் !

பூங்காக்கள், நடைபாதைகள் ஆகியவற்றிற்கெல்லாம் தமிழ்ப் பெயர்களை, தமிழருடைய பெயர்களை வைக்கும்படி சென்னை நகராண்மைக் கழகத்தாரைக் கட்டாயப்படுத்த வேண்டும்!

பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள அன்னியரின் சிலைகளையெல்லாம் அந்த இடங்களிலிருந்து அகற்றிப் பொருட்காட்சி சாலைக்கு அனுப்பும்படி சென்னை அரசினரை வற்புறுத்த வேண்டும்!

இவ்வாறு, காண்பதெல்லாம் தமிழ்க் காட்சி! கேட்பதெல்லாம் தமிழ் ஒலி! நுகர்வதெல்லாம் தமிழ் மணம்! என்ற நிலையை உருவாக்கத் தமிழ் இளைஞர்கள் பாடுபட வேண்டும்!

—'செங்கோல்' 8—3—'53.

# கற்பவை கற்க

ஆங்கில அரசு அகன்ற பின்பு புதிய கல்வி முறை பற்றிய பேச்சுப் பலமாக இருந்து வருகிறது. மாகாண அரசாங்கங்கள் தத் தம் மனப்போக்கில் கல்வி முறையைத் திருத்தியமைக்க இடம் கொடாது அகில இந்தியாவிலும் ஒரேவிதமான சீர்திருத்தத்தைப் புகுத்த முயற்சிக்கிறது மத்திய அரசாங்கம்.

பொதுவாக, இன்றுள்ள கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்பதில் எவருக்கும் மனவேறுபாடு இல்லை. ஆனால், எந்த முறையில் மாற்றியமைப்பது என்பதில் மட்டும் கல்வி நிபுணர்களிடையே கூடக் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. கல்விச் சீர்திருத்தத்தில் முதல் பிரச்சினை மொழியைப் பற்றியதாகும். ஏனெனில், இந்திய நாட்டில் ஆரம்பப்பள்ளி முதல் கல்லூரி வரையில் ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்தி வந்தது. இனியும், அரசுரிமை பெற்ற இந்தியாவில் ஆங்கிலம் ஓரளவு அவசியமென்றாலும், மாகாண மொழிகள்மீது ஆதிக்கம் செலுத்தும் வகையில் அதை விட்டு வைப்பதற்கில்லை.

நியாயப்படி பார்த்தால், ஆரம்பப் பள்ளி முதல் கல்லூரிப் படிப்பு வரை எல்லாப் பாடங்களும் அந்தந்த மாகாண மொழிகளில்தான் நடைபெறவேண்டும். ஆனால் சென்னை சர்வகலாசாலை துணைவேந்தர் மட்டும் இதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். கல்லூரிப் படிப்பு ஆங்கிலத்தில் இல்லாவிடில் மாணவர்களின் அறிவுத்தரம் குறைந்து விடுமென்று பயமுறுத்துகிறார்.

அவர் போன்றாரின் போக்கைக் கண்டு நாம் வியப்படைவதற்கில்லை. அவர்கள் கடந்த காலத்தில் கற்ற அடிமைக் கல்வி, தாய்மொழி உணர்ச்சியின் ஆணிவேரையே அறுத்து விட்டது. எனவே, அவர்களிடம் இதைவிட வேறுவிதமான கருத்தை எதிர்பார்க்க முடியாது. ஆனால், சுதந்தர இந்தியாவிலும் இத்தகையவர்கள் கல்வி நிலையங்களின் அதிபர்களாக இருக்க அனுமதிக்கப்பட்டிருப்பதைக் கண்டுதான் நாம் ஆத்திரப்படுகிறோம்.

சரியாகச் சொன்னால், கல்லூரிகளில் மாகாண மொழிகளின் மூலமே கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று முடிவாகுமானால், இன்றுள்ள பல்கலைக் கழகத் துணை வேந்தர்களின் அறிவுத் தரம் உபயோக மற்றதாகிவிடும். ஏனெனில், அவர்கள் அறிவு தாய்மொழி மூலம் வளர்ந்ததல்ல. ஆகவே, தன்னலம் காரணமாக அவர்கள் தாய்மொழிக்குத் தீங்கிழைக்கின்றனர். இவர்களிடமிருந்து சர்வகலாசாலைகள் விடுதலை பெற்றாலன்றி, கல்வித் துறையில் எத்தகைய முற்போக்கான சீர்திருத்தங்களையும் காண முடியாது.

கல்லூரிப் படிப்பு ஆங்கிலத்தில்தான் இருக்க வேண்டுமென்பதற்கு மற்றொரு காரணம் கூறப்படுகிறது. விஞ்ஞானச் சொற்கள் மாகாண மொழிகளில் கிடையா

தாகையால் பௌதிகம், மருத்துவம், வான சாத்திரம் போன்ற கல்லூரிப்பாடங்களை ஆங்கிலத்தில்தான் நடத்த முடியும் என்பதே அவர்கள் காட்டும் காரணம். உண்மையில் இது ஒரு சிக்கல்தான். ஆனால், தீர்க்க முடியாததன்று.

ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானச் சொற்களில், தேவைப் படுபவற்றை அப்படியே தமிழில் சேர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சிக்கலைச் சீர் செய்து கொள்ளலாம். ஆனால், இது தற்காலிகமானதாகத்தான் இருக்கவேண்டும். நாளடைவில் நல்ல தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடித்து, ஆங்கிலச் சொற்களுக்கு விடை கொடுக்க வேண்டும். அவசரத் தேவைக்காக ஆங்கிலச் சொற்களைக் கையாளுவதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை.

கல்வித் துறையில், "ஆங்கில மொழி வேண்டுமா? ஆங்கிலச் சொற்கள் வேண்டுமா?" என்ற கேள்விக்குப் பதிலளித்துத் தீர வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். "இரண்டும் வேண்டாம்; தமிழும் தமிழ்ச் சொற்களுமே வேண்டும்" என்று பதிலளிக்கத்தான் விரும்புகிறோம். ஆனால், நிலைமை அதற்குச் சாதகமாக இல்லை. எனவே, "ஆங்கிலம் வேண்டாம்; ஆங்கிலச் சொற்கள்தான் வேண்டும்" எனப் பதிலளிப்பதன் மூலம் தமிழின் வளர்ச்சிக்கும் தமிழரின் வாழ்வுக்கும் வழி செய்யலாம். ஆங்கிலத்தை நீக்கி ஆங்கிலச்சொற்களை எடுத்துக் கொள்வதன் மூலம் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் கூறும் 'அறிவுத்தரம்' அப்படியே கிடைத்து விடும்.

ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரிப் படிப்புவரை மாகாண மொழியிலேயே கற்பிக்கப் படலாம் என்பதை இந்திய அரசாங்கத்தாரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனல், இந்தியாவின் பொதுமொழி எது என்ற விஷயத்தில் மட்டும் மத்திய அரசாங்கத்தினரும், அகில இந்தியக் கல்வி மாநாட்டினரும் தவருன கொள்கையைக் கடைப்பிடித்திருக்கின்றனர். இந்தியா முழுவதற்கும் இந்தி அல்லது இந்துஸ்தானிதான் பொது மொழியாக இருக்க முடியும் ; இருக்கவும் வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டனர்.

இந்தி இந்தியாவின் பொது மொழியாக இருப்பதைத் தமிழர் எதிர்ப்பதற்கு முக்கிய காரணம், அது தமிழகத்திற்கும் ஆட்சிமொழியாகி விடுமோ ; அதன் மூலம் வட இந்தியர்கள் தமிழகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவார்களோ என்ற அச்சமேயாகும். அன்று ஜார் ரஷ்யாவில் கிரேட் ரஷ்யர்கள் தங்கள் தாய்மொழியாகிய ரஷ்ய மொழியின் மூலம்தான் தென் ரஷ்ய மாகாணங்களை அடிமைப் படுத்தி ஆதிக்கம் செலுத்தினர். ஆங்கில மொழியை இந்தியாவின் அரசியல் மொழியாக்கியதால் தான் பிரிட்டிஷார் 200 அண்டுகள் நம்மை ஆள முடிந்தது. ஆம்; பிறமொழிக் கல்வி, தாய்மொழிப் பற்றை அழிப்ப தோடன்றி, தன்மான உணர்ச்சியையும் மாய்த்து விடுகிறது.

எனவே, தமிழருக்குத் தனியரசு கிடைக்கும் வரை, தமிழ் ஆட்சி மொழியாகவும் போதன மொழியாகவும் செய்யப்படும் வரை ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருந்து வரவேண்டுமென்று நாம் விரும்புகிருேம். கடந்த காலத்தில் ஆங்கிலம், பிரிட்டிஷாரின் சுரண்டல் கருவியாக இருந்ததாலேயே அதை நாம் ஆட்சேபித்தோம். ஆனல், ஆங்கிலேயரை வெளியேற்றி அரசுரிமை பெற்ற பிறகு, ஆங்கிலம் நம்மைச் சுரண்டும்

சக்தியை இழந்து, நமது தேவையைப் பூர்த்தி செய்யும் கருவியாகி விட்டது.

கல்வித்துறையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மற்றொரு முக்கியமான மாறுதலும் ஏற்பட்டாக வேண்டும். தமிழர் தனி இனத்தவர்; தமிழ் தனித்தியங்கும் மொழி; பல கிளை மொழிகளுக்குத் தாய் மொழி. தமிழர் பண்பும் தனிப் பண்பு. பழக்க வழக்கங்களும் அப்படியே. அரசியல் வரலாற்றை ஆராய்ந்தாலும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்ட காலம் வரை வேங்கடத்திற்கு வெளியேயுள்ள பிற இனத்தவரின் ஆட்சிக்கு அடிமைப்படாத தனியரசே தமிழகத்தில் நடைபெற்றதை அறிகிறோம். ஆகவே, எல்லாவற்றாலும் தமிழகத்தின் வரலாறு தனி வரலாறாகும். இந்த உண்மையை தமிழ் மக்களிலேயே பெரும்பாலோர் அறிய முடியாமற் செய்து வைத்தது ஆங்கில ஆட்சி. இனியேனும், தமிழகத்தைப் பற்றிய வரலாற்றைச் சரியானபடி எழுதச் செய்து அதை மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். தமிழரைத் தமிழராக வாழச் செய்ய இதுவே தலைசிறந்த வழி.

கல்வித் துறையில், தமிழினத்தைப் பிளவு படுத்தும் மற்றொரு பெருங்கேடு புகுந்துள்ளது. கல்லூரிகளில் வகுப்புவாரி இடம் ஒதுக்கும் கொள்கையே அது. சமய சந்தர்ப்பங்களைச் சாதகமாகக் கொண்டு வளர்ச்சி பெற்று விட்ட பிராமணர்களோடு போட்டியிட முடியாத 'பிராமண ரல்லாதார்' என்று கூறப்படும் மக்களுக்கு வசதி செய்து கொடுக்கவே இந்த வகுப்புவாரி முறை தோன்றியது. எனவே, விரும்பத் தகாத இந்த வேற்றுமையை தமிழ் மக்கள் வருத்தத்துடன் வரவேற்க வேண்டியிருந்தது.

ஆனால், வகுப்புவாரி இடம் ஒதுக்குவதை இன்னும் நீடிக்க விடுவது தமிழனத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதாகும். எனவே, இந்த வகுப்புவாத வேற்றுமைகளை கல்வித் துறையிலிருந்து அகற்ற வேண்டியது மிக மிக அவசியமாகும். ஆனால், வகுப்புவாத வேலியை அகற்றும் போது, மீண்டும் ஒரு சாதியினரே கல்லூரிகளில் அதிக அளவுக்கு இடம் பெறும் பழைய நிலைமை தோன்றிவிடக் கூடாது. இதற்குள்ள ஒரே வழி, அறிவுக் கல்வியையும் தொழிற் கல்வியையும் ஒன்ருகப் பிணைத்து அவற்றைக் கற்க விரும்பும் எல்லோருக்குமே இடம் கிடைக்கும்படி கல்லூரிகளைப் பெருக்க வேண்டும்.

சாதி வேற்றுமைகளை வெறுக்கும் இந்தக் காலத்தில், சாதிகளின் பெயரால் கல்லூரி ஸ்தானங்களைப் பங்கிட்டுக் கொடுப்பது, அதுவும் இந்த பிரித்தாளும் முறையை அரசாங்கமே கையாளுவது வெறுக்கத் தக்கதாகும்.

பொதுவாக, கல்வித் துறையில் ஆரம்ப முதல் இறுதிவரையுள்ள எல்லா நிலைகளிலும் தமிழ் மொழியே நீக்கமற நிலைபெற வேண்டும். ஆங்கிலத்தைப் பொது மொழி யாக்கலாம். ஆனால், அதையும் உயர்நிலைப் பள்ளிக்கு மேல் ஓங்கவிடக் கூடாது. பாடத்திட்டங்கள், தமிழ் மக்களின் பண்பு வழியும், சர்வதேச அறிவை வளர்க்கும் விஞ்ஞான இயல்புப்படியும் அமைந்திருக்க வேண்டும். வரலாற்றுப் பாடத்தில், வீரத்திற்கு சிவாஜியையும், கற்புக்கு அருந்ததியையும், கொடைக்குக் கர்ணனையும், கவிதைக்குக் காளிதாசனையும் பற்றிக் கதை அளப்பதோடு நில்லாமல் செங்குட்டுவன், கண்ணகி, குமணன், கம்பன் போன்ற தமிழ்ப் பெருமக்களின் வரலாற்றைச் சேர்க்க வேண்டும். மற்றும் நாட்டுப் பற்றுக்கு வீரபாண்டியக் கட்டபொம்மன், வ. உ.

சிதம்பரனர், திருப்பூர் குமரன், சுப்பிரமணிய பாரதியார் போன்றவர்களின்வரலாறுகளும் போதிக்கப்படவேண்டும்.

கற்றல் எவ்வளவு அவசியமோ, அவ்வளவுக்கு அவசியம் கற்க வேண்டியதைக் கற்பது. கண்டதையெல்லாம் கற்பதால் அறிவு வளர்வதற்குப் பதிலாக, அடிமைப்புத்தி தான் வளரும். இதையறிந்தே கல்வியின் அவசியத்தை வற்புறுத்திய திருவள்ளுவர், "**கற்கக் கசடற**" என்று கூறிய மறு மூச்சிலேயே "**கற்பவை கற்க**" என்றும் எச்சரித்தார்.

—'முரசு' 2—1—49.

# வாய் இனிக்கப் பேசாமல் வாழ்வு இனிக்கப் பாடுபடுவோம்!

இந்த இருபதாம் நூற்றாண்டில் ஒரு மொழியின் வளர்ச்சி அதன் இலக்கிய வளர்ச்சியை மட்டும் பொறுத்ததன்று. விஞ்ஞானக் கலைகளில் அம் மொழிக்குரிய தொடர்பைப் பொறுத்தும் இருக்கிறது. காவியங்களாலும் கவிதைகளாலுமே தமிழ் மொழி மக்களிடையே மதிப்புப் பெற்ற காலம் மலையேறி விட்டது. காவியங்களைப் படிப்பதாலும் கவிதைகளைப் பாடுவதாலும் தமிழர்களுக்கு வாய் இனிக்கலாம்; ஆனால் வாழ்க்கை இனிக்காது. இன்றைய நிலையில், தமிழ் மொழியை மக்கள் விரும்பிக் கற்க வேண்டுமானால், கற்ற பின்னும் கருத்தில் வைத்துப் போற்ற வேண்டுமானால் அந்த மொழி பதவி பிடிக்க எவ்வளவு தூரம் பயன்படுகிறது?—டாக்டர், எஞ்சினீயரிங், சட்டம் போன்ற நவீன தொழில்களில் ஈடுபட்டுப் பணம் சேர்க்க எவ்வளவு தூரம் பயன்படுகிறது?—என்பதைப் பொறுத்தே இருக்கிறது. ஆங்கிலத்தின்மீது மக்கள் கொண்டுள்ள மோகம் இன்னும் கொஞ்சங்கூடக் குறையவில்லை. இலக்கிய, இலக்கண

வளமற்ற இந்தியைப் படிப்பதற்கு எவர்தான் விரும்ப வில்லை? மேடையேறி எதிர்ப்பவர்கள்கூட, தங்கள் பிள்ளைகளுக்கு இந்தி கற்பிக்கப் பின்வாங்குவதில்லை. காரணம் என்ன? ஆங்கிலமும் இந்தியும் அரசாங்க மொழிகளாயிருக்கின்றன. வருங்காலத்திலும் அம்மொழி களே பதவி பிடிக்கவும், பணம் திரட்டவும் பயன்படக் கூடியன என்பதேயாகும். ஆகவே, தமிழை அரசாங்க மொழியாக்கி, கல்லூரிப் பாடங்கள் அனைத்தும் அம் மொழியிலேயே போதிக்கப்பட்டாலொழிய, தமிழ் வளர்ச்சி பெற முடியாது. தமிழகத்தில் பிறமொழிகள் ஆதிக்கம் பெறுவதையும் தடை செய்ய முடியாது.

குறிப்பாக, மருத்துவம், எஞ்சினீயரிங், விஞ்ஞானம் போன்ற நவீனக் கலைகள் அனைத்தும் தமிழிலேயே கற்பிக்கப்பட வேண்டும்.

மருத்துவம், எஞ்சினீயரிங் போன்ற தொழிற் கலைகளை தமிழ் மூலம் கற்க முடியாது என்றனர் ஆங்கில மேதைகள் சிலர். ஏனெனில், அந்த நவீன தொழிலைக் கற்பதற்கான கலைச் சொற்கள் தமிழில் இல்லையாம்! இது ஓரளவு உண்மைதான். ஆனால், முயன்றால் முடியாத காரியமன்று. 'தமிழில் முடியுமா?' என்ற பெயரில் ராஜாஜி வெளியிட்டுள்ள நூலைப் படிக்கும் எவரும், தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டே நவீன தொழிற் கலைகளை எளிதில் கற்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்வர். இது, இப்போதைக்கு முடியா தென்றாலும், ஆங்கிலக் கலைச் சொற்களையே தமிழ் வழியில் திருத்தி தமிழ் மொழியில் சேர்த்துக் கொள்ள லாம். 'ஹாஸ்பிடல்' என்ற ஆங்கிலச் சொல், 'ஆஸ் பத்திரி' என்றும், 'பென்' என்ற சொல், 'பேனா' என்றும் தமிழில் திருத்தப்பட்டிருப்பதைச் சான்றாகக்

கூறலாம். தமிழ் வழியில் திருத்த முடியாத ஆங்கிலக் கலைச் சொற்களைக்கூட அப்படியே எடுத்துக் கொள்ள லாம். தமிழின் நன்மைக்காகவே இதைச் செய்வதால், தமிழறிஞர்கள் ஆட்சேபிக்க மாட்டார்கள். விஞ்ஞானக் கலைச் சொற்கள் தமிழில் இல்லை என்று கூறுவோர் ஒன்றை மறந்துவிடக் கூடாது. கலைத் துறையில் ஆங்கில மொழிக்குள்ள வளம் திடீரென்று ஒரு நாளில் வந்ததன்று. பலகாலமாக மெல்ல மெல்ல அடைந்த வளர்ச்சியே யாகும். ஆங்கில அறிஞர்கள் பாடுபட்டு முயன்றதின் பயனேயாகும். அதுபோன்று மருத்துவம், விஞ்ஞானம் போன்ற நவீன கலைகளைத் தமிழிலே கற்பிக்க முற்பட்டுவிட்டால், 25 ஆண்டுகளுக்குள் அத் துறையில் தமிழ் திருப்திகரமான அளவுக்கு வளர்ச்சி பெற்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

இன்று சாதாரண வைத்தியர்களாக இருப்பவர்களில் மிகப் பெரும்பாலோர், தமிழ் மொழியில் நன்கு பயிற்சி யுடையவர்கள். ஏன்? — அவர்களில் தமிழ்ப் புலமை யுடையவர்களும் பலருண்டு. ஆகவே, மருத்துவக் கல் லூரியின் பாடங்கள் தமிழ் மொழியில் அமையுமானால், இதே வைத்தியர்கள் நவீன மருத்துவக் கலையை மூன் றாண்டுகள் முயன்று பயின்று 'டாக்டர்' பட்டம் பெற முடியும்.

இப்படியே, எஞ்சினீயரிங்போன்ற வேறு பல தொழிற் கலைகளையும் தமிழ் மட்டுமே படிக்கத் தெரிந்த ஏழைத் தமிழர்கள் குறைந்த காலத்தில், குறைந்த செலவில் பயிற்சி பெற்று அரசாங்கத் தொழில் இலாகாக்களில் பதவி வகிக்க முடியும்.

தமிழ் அரசு மொழியானால், கல்வித் துறையிலும் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டே தீரும். இப்போது

ஆங்கிலத்தின் மூலம் கல்வி பெற்று வருவதால் பெற்றோர்களுக்கு ஏற்படும் செலவும், மாணவர்களுக்கு ஏற்படும் சிரமமும் சொல்லி முடியாது. தமிழிலேயே எல்லாப் பாடங்களும் சொல்லித் தரப்படுமானால், மாணவர்கள் சொற்பச் செலவில் எளிதில் படித்துத் தேர்ச்சி பெறுவதோடு அவர்களது அறிவுத் திறமையும் அதிகப்படும் என்பதில் ஐயமில்லை.

தேர்வு (பரீட்சை)கள் எடுபடவேண்டுமென்று மாணவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர். அறிஞர் உலகமும் இதை ஆமோதிக்கின்றது. ஆனால், ஆரம்பப் பள்ளி முதல் கல்லூரிவரை தமிழிலேயே பாடங்கள் கற்பிக்கப்படும் போதுதான், தேர்வு எடுபடுவது சாத்தியமாகும். ஆங்கிலம் போன்ற அன்னிய மொழிகளில் திறமை பெறுவது, தேர்வு போன்ற கட்டாய முறைகளாலன்றி, வேறு வகைகளில் இயலாது. இன்றுள்ள நிலையில் தேர்வு எடுபடுமானால், நிச்சயமாக மாணவர்களின் திறமை குறையத்தான் செய்யும். ஆகவே, மாணவர்கள் தேர்வு எடுபட வேண்டும் என்று கிளர்ச்சி செய்வதைவிட, கல்லூரிப் பாடங்களை தமிழிலேயே கற்பிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தாலே போதுமானது.

தமிழ்மொழி தமிழ் நாட்டு மாணவர்களின் தாய் மொழியானதாலும், நாள்தோறும் பேசுவதும் எழுதுவதும அம்மொழியிலேயே நடைபெற்று வருவதாலும், தேர்வு இல்லாமலே திறமை அதிகப்படும் என்பதை கல்வி நிபுணர்கள் கண்டுகொள்வார்கள். மாறாக தேர்வு இருப்பினும், அதில் தேர்ச்சி பெறுவதில் மாணவர்களுக்குத் துன்பமிராது.

நவீன தொழிற்கலைகள் தமிழில் போதிக்கப்படுமானால், இரவு நேரக் கல்லூரிகள் அமைத்து ஒரு தொழிலில் ஈடு

பட்டுள்ள ஏழை உழைப்பாளியும் அதிக வருவாயைத் தரும் இன்னொரு தொழிலைக் கற்றுக் கொள்வதற்கு வசதி செய்து தரலாம்.

சென்னை மாகாணத்தில் இன்று மக்களாட்சி நடக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால், ஆளுவோரின் செயலை வாக்காளர்கள் கண்காணிக்க வழி இருக்கிறதா ?

அரசாங்க தஸ்தாவேஜுகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே அச்சிடப்படுகின்றன. அசெம்பிளி, மேல்சபை போன்ற அரசியல் மன்றங்களின் நடவடிக்கைகள பெரும்பாலும ஆங்கிலத்திலேயே நிகழுகின்றன. இந்த நிலையில் பெரும்பாலும் ஆங்கிலம் அறியாத வாக்காளர்கள் அமைச்சர்களின் செயலைக் கண்காணிப்பதெப்படி ? அரசாங்கமும் அரசியல் மன்றங்களும் தமிழில் நடைபெறுமானால் சட்டங்களும் தாஸ்தாவேஜுகளும் தமிழில் அச்சிடப்படுமானால், வாக்காளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படும். அரசாங்க நடவடிக்கைகளில் எது சரி, எது தவறு என்பதை வாக்காளர்கள் தெரிந்து கொள்ளவும், தேர்தல் காலங்களில் தீர்ப்பளிக்கவும் வாய்ப்பிருக்கும். அந்த நிலை ஏற்படும் பொழுதுதான் ஆட்சியில் ஜனநாயகத் தன்மை பூர்த்தி பெறும்.

அரசியல், தொழில் துறைகளில் மட்டுமல்லாமல் நீதி மன்றங்களில்கூட, அடிப்படை மாறுதல்கள் ஏற்பட்டே தீரும். தமிழ், அரசு மொழியானால், நீதி மன்றங்களின் நடவடிக்கைகள் அனைத்தும் அம்மொழியிலேயே நடந்து தீர வேண்டிய கட்டாயம் ஏற்படும். அப்போது வழக்குகள் குறைவதுடன் கட்சிக்காரர்களின் செலவும் குறையும். வழக்காடும் இரு கட்சிக் காரர்களுக்கும்

1387.

...SITY EXTENSION...

புரியாத மொழியிலே நீதி மன்றங்கள் நடப்பதால், வக்கீல்கள் பெருகுகின்றனர். வழக்காடுவோரின் சொத்து சூறையாடப்படுகின்றது. ஆங்கிலம் அறியாத கட்சிக்காரர்கள் இருவர் எதிரெதிரே நிற்கும் நிலையில், கோர்ட் நடவடிக்கைகள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் நடத்தப்படும் காட்சி, நீதியின் பெயரால் நடத்தப்படும் நாடகமே ஒழிய, நீதிக்காக நிகழும் நடவடிக்கையல்ல. இந்நிலை மாறி, நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழில் நடைபெறுமானால், சுரண்டலும் சூழ்ச்சிகளும் குறையும்.

ஆகவே, தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடுவோர் அவசரமாகச் செய்ய வேண்டுவது புலவர்களுக்குத் திருநாள் கொண்டாடுவதன்று; கம்பர் பெயரால் மாநாடு கூட்டிக் கவி பாடுவதுமன்று; தமிழை அரசு மொழியாக்குவதொன்றே அவர்கள் செய்ய வேண்டிய அவசர வேலை.

—'செங்கோல்' 26-9-'52.

# களையெடுப்போம் வாரீர் !

"கன்னித் தமிழ் வளர்ப்போம் வாரீர்!" என்ற குரல்கள் எங்கும் கேட்கின்றன. தமிழ் வளர்த்த பெரியார் களுக்குச் சிலை எடுக்கும் நாள் இது. கவிஞர் பெருமக் களுக்கு காணிக்கை தரும் காலம் இது. ஆனால், மாநாடு கூட்டி, மக்களைத் திரட்டி 'எந்தாய் நீ வாழ்க!' என்று ஆரவாரம் செய்வதால் மட்டும் தமிழ் வாழ்ந்து விடுமா? ஒருபோதுமில்லை. தமிழ் வாழவேண்டுமானால், அதில் புகுந்த களைகளைப் பறிக்க வேண்டும். 'களை எடாது, ஜலம் விடாது, கதிரொரு முழம் காணுதாம்' என்பதைப் புராணத்தில் கேட்டோமேயொழிய, புவியில் பார்த்த தில்லை. எனவே, தமிழ் வளர்க்க முற்படும் பெருந்தகை யாளர்கள் தமிழ்ப் பண்ணையிலே பயிரோடு பயிர்போலக் கலந்து வளர்ந்துவரும் களைகளை எடுத்தெறிவதைக் கடமை யாகக் கொள்ள வேண்டும். அஃதின்றி, தமிழ் வளர்ச் சிக்குப் பாடுபடுவதெல்லாம் விழலுக்கிறைத்த நீராகி விடும். ஆனால், இன்று நாடாளும் தமிழ் அமைச்சர்கள் இதை உணர்ந்து விட்டனர். தமிழை அழிக்கும் சக்திகளை ஒழிக்க அவர்கள் திட்டமிட்டு வேலை செய்ய முனைந்து விட்டனர். தமிழ் எழுத்துக்கள், தமிழ்ச் சொற்கள், தமிழ்ப்

பெயர்கள் ஆகியவற்றிற்கு எங்கு, எவரால், எவ்வகையில் கேடு வந்திருப்பினும் அக்கேட்டை நீக்கிக் கன்னித் தமிழுக்கு ஆக்கம் தர ஊக்கம் கொண்டுவிட்டனர்.

தமிழகம் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோது நமது ஊர்களின் பழைய பெயர்களை, அருமையான கருத்தமைந்த பெயர்களை, ஆதிவரலாற்றை அறிவுறுத்தும் பெயர்களைச் சிதைத்தனர்.

திருநெல்வேலி, 'டின்னவேலி'யானது. திருச்சிராப் பள்ளி 'ட்ரிச்சி'யாக மாறியது. தரங்கம்பாடி, 'ட்ராங் கோபர்' ஆகியது. இப்படிச் சிதைந்த பெயர்கள் ஆயிரக் கணக்கானவை. மற்றும் தமிழ்ப் பெயர்களை அடியோடு இழந்து புதுப்புது ஆங்கிலப் பெயர்களைப் பெற்ற ஊர்களும், பொருள்களும், பொதுவிடங்களும் பலப்பல. இன்று நிலைமை மாறிவிட்டது. சிதைந்த பெயர்களைச் சீர்திருத்துவதிலும், ஆங்கிலப் பொயர்களையெல்லாம் அடியோடு அகற்றி, மீண்டும் தமிழ்ப் பெயர் வழங்குவதிலும் நம் அரசியலார் எடுத்து வரும் முயற்சி பாராட்டற்குரியது. ஆனால், ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை அகற்றுவதோடு அரசியலார் நின்று விடாமல் பிற மொழிப் பெயர்களை மாற்றுவதிலும் கருத்துச் செலுத்தவேண்டும். தமிழ் மொழியை அழிக்கும், அதன் அழகைக் குலைக்கும் பிற மொழிகள் எவையாயினும் அவற்றிடம் தமிழர் அன்பு காட்ட முடியாது. அடிமை என்னும் நச்சுக்காற்று மேற்கிலிருந்து வந்தாலென்ன? வடக்கிலிருந்து வந்தாலென்ன? தமிழுக்கு—தமிழ் இனத்திற்குத் தீங்கிழைக்கும் சக்தி எதுவானாலும் அதை அகற்றியே ஆக வேண்டும்.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழில் புகுந்த பிறமொழிச் சொற்களுக்கும் கணக்கில்லை. 'கிஸான்', 'மஸ்தூர்', 'ராஷ்டிரம்', 'ராஷ்டிரபதி',

'ஜண்டா' போன்ற சொற்களைச் சான்றாகக் காட்டலாம். இவற்றைத் தமிழ்ப் படுத்தினால் முறையே, 'உழவர்', 'தொழிலாளி', 'நாடு', 'தலைவர்', 'கொடி' என்று ஆகும். எளிதில் புரிந்து கொள்ளக் கூடியனவும் எண்ணத்தில் எழுச்சி தரும் ஏற்றம் உடையனவுமான இந்தத் தமிழ்ச் சொற்களை விடுத்து, புரியாத பிறமொழிச் சொற்களைப் பிடிவாதமாகச் சொல்லுவதால் பயனுண்டோ?

மற்றும் 'ஜெய்ஹிந்த்', 'ராஷ்டரீய ஜண்டேகு ஜெய்' என்பன போன்ற பொருள் புரியாத சொற்றொடர்களால் ஆரவாரிப்பதை விடுத்து, அவற்றில் உள்ள கருத்தைக் கன்னித் தமிழிலே கொண்டுவந்து 'இந்தியா வாழ்க', 'தாயின் மணிக்கொடி வாழ்க' என்று கூறுவதால் நேரும் குறையென்ன? தாய் மொழிக்குச் சுதந்திரம் அளிக்காத நிலையில் தாய் நாடு சுதந்திரம் பெற்றதாகக் கூற முடியுமா?

தேசீயப் பாடல்களிலும் தமிழ் மொழி புறக்கணிக்கப் படுகின்றது. 'ஜண்டா ஊன்ஸா' என்ற கொடிப் பாடலும், 'ஜனகணமன' என்ற நாட்டுப் பாடலும் தமிழகத்தில் அரசியல் மேடைகளிலும் மாநாடுகளிலும் இன்னமும் பாடப்பட்டு வருகின்றன. பாரதி போன்ற தேசீயக்கவி தோன்றாத பிற மாகாணங்களில் மேற்சொன்ன பாடல்களைப் பாடுவதில் வியப்பில்லை. ஆனால், பாரதி தோன்றி 'தாயின் மணிக்கொடி பாரீர்', 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்பன போன்ற நாமணக்கும் பாடல்களை இயற்றியிருக்க, பிற மொழிப் பாடல்களைப் பாடுவது மறதியா? மயக்கமா? பிறமொழிப் பாடல்களைப் பாடுங்கால் எழுத்துப் பிழைகள் எத்தனை? சொற்பிழைகள் எத்தனை? கருத்துப் பிழைகள் எத்தனை? பிழைகளைத் தவிர வேறொன்றுண்டோ? இது நகைப்பிற்கிடமல்லவா?

தேசியப் பாடல்களைப் பாடுவது எதற்காக? பாமர மக்களின் மனதிலே நாட்டுப் பற்றை எழுப்பவேயல்லவா? ஆனால், படித்தவர்களுக்குக்கூடப் புரியாத பிறமொழிப் பாடல்களால் பாமர மக்கள் மனதில் நாட்டுப் பற்றை எழுப்ப முடியுமா?

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

என்ற தமிழகப் பாடலையும்,

பாருக்குள்ளே நல்லநாடு
எங்கள் பாரத நாடு

என்ற இந்தியப் பாடலையும் கேட்கும்போது நம் உள்ளத்தே எழும் கிளர்ச்சியும் புரட்சியும் பிற மொழிப் பாடல்களைப் பாடக் கேட்பதால் உண்டாகுமா? இதையெல்லாம் தேசியவாதிகள் சிந்தனை செய்து திருத்தமடையவேண்டும்.

'வைஷ்ணவ ஜனதோ' என்ற காந்தியடிகளுக்குப் பிரியமான பாடலை அவரது மறைவிற்குப் பிறகு சென்னை, திருச்சி வானொலி நிலையங்களில் அடிக்கடி கேட்டு வருகிறோம். அன்றாடம் கேட்டு வருகின்றோமென்றாலும் பொருந்துவதே. ஆனால், அதைப் பாடக் கேட்கும்போது, காந்தியடிகளுக்குப் பிரியமான பாடல் என்று கேள்விப் பட்ட செய்தி நினைவிற்கு வருகிறதே தவிர, அப்பாடலின் பொருள் இன்னதெனப் புரிகிறதா? பக்தி மலர்கிறதா? இல்லவே இல்லை. அதே பாடலை 'சொல்லுவோம் வைஷ்ணவர் யாரெனக் கேளீர்' என்ற தலைப்பின்கீழ் நண்பர் திரு. சங்கு சுப்பிரமணியம் தமிழ்ப் படுத்தி இருக்கிறார். அது எத்தனைமுறை கேட்டாலும் இனிக்கும் தன்மையது.

அதைப் பாடினாலென்ன? வானொலி நிலையத்தார் இதைக் கருத்தில் கொண்டு பாடகர்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

அரசாங்கத்தார், தேசியவாதிகள், வானொலி நிலையத்தார் ஆகிய மூன்று தரப்பினரும் களை எடுக்க முயன்றால் தமிழ்ப் பயிர் தலை எடுத்து வளருவது திண்ணம்.

தமிழ்நாட்டு இளைஞர்கள், இலக்கியக் கழகங்கள் இத்துறையில் ஓயாது கிளர்ச்சி செய்து வந்தால் வெற்றி விரைவில் கிட்டும்.

—'முரசு' 1949.

## சாதிப் பிரிவுகள் வேண்டாம்!

பிறப்பால் சாதி வேற்றுமை, சாதிக்குச் சாதி உயர்வு தாழ்வு கற்பிப்பது கூடாது என்று எத்தனையோ அறிஞர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

"சாதி இரண்டொழிய வேறில்லை"

என்பது ஔவை மூதாட்டியின் அறிவுரை.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்பது வள்ளுவர் வாக்கு.

"சாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

* * *

"சாதிக் கொடுமைகள் வேண்டாம் — அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்"

* * *

"நகரென்று கொட்டு முரசே — பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்"

இவை கவி பாரதியாரின் முரசொலி

ஔவையார் முதல் அமரகவி பாரதி வரை புலவர் பெருமக்கள் பலரும் சாதி வேற்றுமையைச் சாடிப் பாடினர். சாதி வேற்றுமைகளை விட்டொழிக்குமாறு சமயத் தலைவர்கள் செய்த வேண்டுகோளும் கொஞ்சமன்று.

காகம் உறவு கலந்துண்ணும் காட்சியைக் காட்டி, வேற்றுமைகளை யெல்லாம் விட்டொழித்து 'சேரவாரும் செகத்தீரே' என்று கூவி அழைத்தார் தாயுமானவர்.

"சாதிசம யங்களிலே வீதி பலவகுத்த
சாத்திரக் குப்பைகளெல்லாம் பாத்திரமன்று..."

எனப் பறையறைந்தார் இராமலிங்க வள்ளலார்.

"இப்போது இருந்து வரும் சாதிப் பாகுபாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை. இது முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கிறது. அந்தஸ்திலே உயர்வு தாழ்வை உண்டாக்குகிற சாதி வேற்றுமை மிகவும் கொடியது. மல மூத்திரத்தைப் போலவே இதை ஒதுக்கித்தள்ளி விடவேண்டும்."

இது, அண்ணல் காந்தியடிகளின் அருள்வாக்கு.

ஆனால், தமிழ்ப் புலவர்களும் சமயத் தலைவர்களும், காந்தியடிகளும் சாதி வேற்றுமையை வெறுத்தனரே ஒழிய, அவை ஏற்படக் காரணம் என்ன? அவற்றை அழித்தொழிக்கும் வழி என்ன? என்பவற்றை ஆராய்ந்து அறிவித்தார்களில்லை. எனவே, தமிழகத்தில் சாதி வேற்றுமைகள் அழிவதற்குப் பதிலாக நன்கு ஆக்கம் பெற்று வந்தன.

தமிழகத்திலே, நடமாடும் மனிதர்கள் முதல் படமாடும் தெய்வங்கள் வரை சாதிப் பெயர்கள் ஆதிக்கம் பெற்று விட்டன. வேளாளர் வீதி, பிராமணத் தெரு, அம்பட்டர் சந்து, வண்ணார்ப்பேட்டை, சாணார் குப்பம், இடையர்பாளையம், பறையர் சேரி என மக்கள் வாழும்

இடங்களெல்லாம் சாதிப் பெயர்களால் அழைக்கப்படு கின்றன. வாழும் இடங்களுக்குமட்டும் அல்ல; வரங் கொடுக்கும் தெய்வங்களுக்கும் கூட சாதிப் பெயர் களுண்டு. செம்படப் பிள்ளையார், வாணிய சுப்பிரமணியர் என சாமிகளுக்குரிய சாதிப் பெயர்களும் பலப்பல. உயர் சாதியினர் ஆதிக்கத்திலகப்பட்ட 'கடவுளர்கள்' தாழ்ந்த சாதியினர் வீதிகளில் பவனி வரா.

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றார் பாரதியார். ஆனால், சாதி சழக்கர்களின் விபரீத விளை யாட்டால் தமிழ்ச் சொற்களுக்குக் கூட உயர்வு, தாழ்வு கற்பிக்கப் படுகின்றது. 'சேரி' என்ற சொல் மக்கள் சேர்ந்துவாழும் பகுதியைக் குறிப்பதேயாகும். இதில் இழிவுக்குரிய பொருள் எதுவுமே இல்லை. உயர்ந்த சாதி யினராகக் கருதப்படும் பார்ப்பனர் வாழும் இடங்கள் கூட பண்டைத் தமிழ் இலக்கியங்களில் 'பார்ப்பனச் சேரி' என்றே குறிப்பிடப் படுகின்றன. ஆனால் இன்று 'சேரி' என்ற சொல் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடத் திற்கே உரியதாகக் கருதப்படுகிறது.

சாதிகள் மட்டுமல்ல; சாதிக்குள்ளும் சாதிகள் உண்டு. பார்ப்பன சாதிக்குள்ளும் ஐயர், ஐயங்கார், ஆச் சாரியார் என உட்பிரிவுச் சாதிகள் பல. அதே போல வேளாள சாதிக்குள்ளேயே எத்தனை விதவிதமான குட்டிச் சாதிகள்; அவற்றிற்குள்ளேயே உயர்சாதி தாழ்சாதி தத்துவங்கள் வேறு!

'பறையர்' என்போர் பொதுவாக ஒரே சாதியினராகக் கருதப்படுகின்றனர். ஆனால், உண்மை அப்படியல்ல. அந்தச் சாதிக்குள்ளும் பல்வேறு உப சாதிகள் உண்டு. அவற்றில் ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வுகளும் உண்டு. பொதுவாகத் தமிழினத்திலுள்ள சாதி வேற்றுமைகளை

ஆராயப் புகுந்தால் புரையோடிய புண்ணைக் கிளறித் துர் நாற்றச் சரக்குகளை வெளிப்படுத்தியதாகவே முடியும்.

சாதிப் பிரிவுகள் எப்பொழுது தோன்றின? ஆரியர் இந்தியாவுக்குள் புகுந்த பின்னரே என்பர். அன்னார் நால்வகைச் சாதிகளை இந்நாட்டினில் நாட்டினர். அந் நால் வகைச் சாதிகளையே பின்னர் நானூற்றுக்கும் மேற் பட்ட சாதிகளாகப் பெருக்கினர் என்பது ஆராய்ச்சியாளர் சிலரது முடிவு. இது உண்மையல்ல. ஆரியர் வரு முன்னரே குமரிமுதல் இமயம் வரை பரவிக்கிடந்த தமிழ் சமுதாயத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவுகள் இருந்து வந்தன.

நாளடைவில், நாகரிக முதிர்ச்சி காரணமாக மனிதனின் தேவையை யொட்டி தொழில்கள் பெருகின. இதனால் தொழில் குழுக்களும், குழுப் பெயர்களும் தோன்றின. ஆனால், அவை இந்நாளில் இருப்பது போன்று பிறப்புப் பற்றி இயங்கவில்லை; அவற்றுள் எத்தகைய ஏற்றத் தாழ்வுகளும் கூட இருந்ததில்லை என்பதை மறத்தல் கூடாது. மற்றும், தொழில் குழுப் பெயரைக்கூட அக்கால மக்கள் தமது பெயருக்குப் பின்னே பொருத்திவைக்கும் வழக்கமும் இருந்ததில்லை என்பதற்குச் சங்க நூல்களே சான்று கூறும்.

புறநானூற்றில் காணப்படும் புலவர்களின் பெயர்க ளெல்லாம், குமரனார், பெருந்தேவனார், பெரும்பூதனார், நன்னாகனார், சாத்தனார் என வருகின்றனவேயன்றி, இந் நாளில் இருப்பன போன்று அவர்களுடைய பெயருக்கும் பின்னே சாதிப் பெயர்கள் ஒட்டியிருக்கவில்லை. ஒரு சில புலவர்களின் பெயர்களோடு மட்டும், அவர்தம் தொழிற் பெயர்கள் இணைந்திருக்கின்றன. அதுவும், பெயருக்குப் பின்னேயல்ல ; முன்னே. மருத்துவ நூற் புலவராகவும்,

மருத்துவத் தொழில் புரிவோராகவும் இருந்து வந்த ஒரு புலவர், 'மருத்துவன் தாமோதரனார்' என்று அழைக்கப் பட்டார். அப்படியே கூலம் அதாவது பலவகை தானியங்கள் விற்றவர், 'கூல வாணிகன் சாத்தனார்' என்றும், சோதிட நூற்புலவர் 'கணியன் பூங்குன்றனார்' என்றும் அழைக்கப்பட்டனர்.

பின்னர் இந்தியாவுக்குள் புகுந்த ஆரியர் ஏற்கெனவே இருந்துவந்த அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பெயர்களுக்குப் பதிலாக, பிராம்மணர். க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற வடமொழிப் பெயர்களைச் சூட்டி அவற்றை நூல் வழக்கிலும் கொண்டுவந்தனர். மற்றும் அந்நான்கு பிரிவுகளின் பிறப்புப் பற்றிய கற்பனைக் கதைகளும் கட்டிவைத்தனர். பிரம்மாவின் முகத்தில் பிறந்தவன் பிராம்மணன், மார்பில் பிறந்தவன் க்ஷத்திரியன், துடையில் பிறந்தவன் வைசியன், பாதத்தில் தோன்றியவன் சூத்திரன் எனப் பகுத்தறிவுக்குப் பொருந்தாத கதைகளை ஏட்டில் எழுதி நாட்டில் பரப்பினர். மற்றும் மேற்சொன்ன நால்வகைப் பிரிவுகளை ஒட்டித் தோன்றிய தொழில் பிரிவுகளுக்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட ஆசாரங்களையும் கற்பித்தனர். இந்த ஆசாரங்கள்தான் தொழில் பற்றிய பிரிவுகளை, பிறப்பை ஒட்டிய சாதிப் பிரிவுகளாக நிலை நாட்டிவிட்டன.

* * *

நால் வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டே

என்கிறார், அருட்சோதி வள்ளல் இராமலிங்கனார்.

சாதிகள் ஒழிவதற்குப் பதிலாக சாதிச் சங்கங்களின் எண்ணிக்கை பெருகிவருகின்றன. சங்கமில்லாத சாதி

ஒன்றுகூடக் கிடையாது என்று சொல்லலாம். உண்மையில், அந்தந்த சாதியில் உள்ள சாதாரணப் பட்டாளி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக சாதிச் சங்கங்கள் பாடுபடுவதில்லை. பெருவாரியான சாதிச் சங்கங்கள் தத்தம் சாதியில் உள்ள படிப்பாளிகளுக்கும் பணக்காரர்களுக்கும் பதவி தேடிக்கொடுப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதில்லை. சுருங்கச் சொன்னால், ஒரு சிலர் உத்தியோக வேட்டைக்குச் செல்லும் உல்லாசப் படகுகளாகவே சாதிச் சங்கங்கள் இருந்து வருகின்றன. எனவே, சாதிச்சங்கங்களால், சாதிகள் ஒழிவதற்குப் பதிலாக சாதி உணர்ச்சி உரம் பெற்று வருவதையே கண்டு வருகிறோம்.

என்றாலும், அரசாங்கம் பின்வரும் வகையில் திட்டமிட்டுச் செயலாற்றினால் சாதி வேற்றுமைகள், உயர்வு-தாழ்வுக் கொடுமைகள் இருந்த இடம் தெரியாது மறைவது திண்ணம்.

கட்டாயக் கல்வித் திட்டத்தை உடனடியாக நாடு முழுவதும் அமுல் நடத்த வேண்டும்.

கல்வி கற்க வசதியற்றோர்க்கு ஆரம்பக் கல்விமுதல் உயர்தரக் கல்விவரை இலவசமாகக் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குடிசைத் தொழில்களைக் கூட்டுறவு முறையில் நடத்தவும் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள், உழைப்புக்கும் தேவைக்கும் ஏற்ற ஊதியத்தைப் பெறவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமங்களில் மின்சாரம், குடிநீர், போக்குவரத்து ஆகிய வசதிகளைச் செய்துதர வேண்டும்.

நிலச்சுவான்தார் முறையை ரத்து செய்து, உழைத்துத் தொழில் செய்வோருக்கே நிலத்தை வைத்திருக்கும் உரிமை தரவேண்டும்.

மக்களிடையே நிலவும் அநாகரீகப் பழக்க வழக்கங்களையும் அர்த்தமற்ற சடங்குகளையும் சட்ட விரோதமாக்க வேண்டும்.

அறிவுக் கல்வி வேறு; தொழில் கல்வி வேறு என்றில்லாமல் உழைப்பை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையை நாடெங்கும் பரப்ப வேண்டும்.

கிராமங்களில் வாழும் ஒதுக்கப்பட்ட சாதி மக்கள் வாழ்வதற்கு, நல்ல சுகாதார வசதியுள்ள குடியிருப்புக் காலனிகள் கட்டித்தர வேண்டும். அவை, சேரிகளைப் போன்று ஊருக்குப் புறத்தே இருக்கக் கூடாது.

அரசாங்கத்தார் எடுக்கும் குடி மதிப்புக் கணக்கில், மொழிப் பிரிவுகளைத் தவிர ஏனைய சாதி, சமயப் பிரிவுகளை அங்கீகரிக்கக் கூடாது.

சட்டசபை, ஸ்தல ஸ்தாபனம் போன்ற பொதுமன்றங்களில் சாதி சமயப் பிரிவுகளின்படி ஸ்தானங்கள் அளிப்பதை ரத்து செய்து தொழில் வாரி பிரதிநிதிகளை, அந்தந்த தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களே தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையை அமுல் நடத்த வேண்டும். அப்போது க்ஷவரத் தொழில், சலவைத் தொழில், உழவுத் தொழில் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஒடுக்கப்பட்ட சாதிகளின் பிரதிநிதிகள் சட்டசபைகளில் இடம் பெற வசதி ஏற்படும்.

இவ்வாறு தொழில் வளர்ச்சி; உழைப்புக்கும் தேவைக்கும் ஏற்ற ஊதியம், கல்வி வசதி, குடி இருப்பு சௌகரியம், அறிவு வளர்ச்சி சாதனங்கள் ஆகியவைகளை

அரசாங்கத்தார் எல்லா சாதிகளையும் சேர்ந்த ஒடுக்கப் பட்ட உழைப்பாளி மக்களுக்குத் ,தேடித் தருவதன் மூலம், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி விடுவதால் சாதிப் பிரிவுகளும் அப்பிரிவுகளிடையே காணப்படும் உயர்வு, தாழ்வு மனப்பான்மைகளும் ஒழிந்து விடும்.

ஆனல், இன்றைய ஆட்சி, நிலப் பிரபுத்துவ—முதலாளித்துவப் பாதையில் சென்று கொண்டிருப்பதால் இத்தகைய சீர்த்திருத்தத்திற்கான செயலை அவர்களிட மிருந்து நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. புதிய தமிழகத்தில் அமைக்க விருக்கும் சோஷலிசத் தமிழ்க் குடியரசுதான் சாதிக் கொடுமையை ஒழித்து ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்கச் சக்தி பெற்றிருக்கும்.

—" தமிழ்முரசு " ஜூன்—48.

## சாதிகள் ஒழிய வழி

# 1

**சா**தி வேற்றுமை தமிழ் நாட்டிற்கே உரிய சாபக் கேடாகி விட்டது. தமிழருக்கு நிறைந்த அறிவுண்டு; நிகரற்ற வீரமுண்டு ; நினைத்ததைச் சாதிக்கும் ஆற்றலு முண்டு. பாரத நாட்டில் வேறெந்த இனத்தவருக்கு மில்லாத பழம்பெருமைகளும் உண்டு. சுருங்கச் சொன்னால், தமிழினத்தவருக்கு எல்லாம் உண்டு. ஆனால், ஒன்று தான் இல்லை. அது, தமிழர் எல்லோரும் ஓரினம் என்ற ஒற்றுமை உணர்ச்சியாகும்.

இந்தக் குறையினால், எல்லாச் சிறப்புகளு மிருந்தும் தமிழர் தலை நிமிர்ந்து வாழவழி இல்லை. 300 ஆண்டு களுக்கு முன்னே தோன்றிய, ஒரு கோடி ஜனத்தொகையே உடைய கேரள இனத்தவர்கூட சர்வதேசச் சிறப்புப் பெற்று வருகின்றனர். தமிழரும் கண்டு அஞ்சத்தக்க, தமிழர்மீதே ஆதிக்கம் செலுத்தவல்ல ஆற்றலையும் பெற்றுவிட்டனர். அதைப் பார்த்தும் ஒற்றுமைப்பட வேண்டுமென்ற புத்தி வரவில்லை தமிழருக்கு.

தமிழினம் இப்படிச் சீரழிந்து வருவதற்குக் காரணம் பயிரில் புகுந்த களை போன்று தமிழருடைய உள்ளங்களில் புகுந்துள்ள சாதி வேற்றுமை உணர்ச்சிதான். இந்த வேற்றுமை தொலைந்தாலொழிய, தமிழ் இனத்துக்கு விமோசனமில்லை.

சங்க காலத்தில்—அதாவது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழகத்தில் சாதி வேறுபாடுகள் இருந்தன. ஆம், அந்தச் சாதிப் பிரிவுகள் தொழில் வழிப் பட்டவை ; பிறப்பு வழிப் பட்டவையல்ல. அதனால், சாதிப் பிரிவுகள் தமிழர் சமுதாயத்திற்கு நல் வாழ்வைத் தந்தன. நாடெங்கும் தொழில்கள் செழித்தன. உழைத்துப் பிழைக்க வேண்டுமென்ற உணர்ச்சி நிறைந்திருந்தது. பண்டங்களின் உற்பத்தி பெருகின. அதனால் பரதேசி என்று வந்த பிறதேசத்தாரை யெல்லாம் பரிவுடனே வரவேற்று வாழ்வு தந்தனர் பழங்காலத் தமிழர்கள்.

ஆனால், தொழில் வழி சாதிப் பிரிவுகள் தொலைந்து பிறப்பு வழி சாதி வெறி வளர்ந்துவரும் இற்றை நாளில் உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற உணர்ச்சி ஒருவரிடத்திலும் காணோம். உழைப்பவனுக்கு மதிப்புத் தர வேண்டும் என்ற நினைப்புக்கூட இல்லை. ஆடை வெளுப்பது, மலம் அள்ளுவது, க்ஷவரம் செய்வது போன்ற தூய்மைக்குரிய தொழில்களில் ஈடுபட்டிருப்போரை இழிந்தவர்களாக எண்ணும் இறுமாப்பு வளர்ந்து விட்டது. தொழிலைப் பயன்படுத்திக் கொண்டு, அதே நேரத்தில், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரை இழிவாக நடத்துகின்ற அதர்மம் 'தர்ம'மாகி விட்டது. 1, 2, 3 என்ற எண்களின் மதிப்பில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது போல சாதிக்குச் சாதி ஏற்றத் தாழ்வு ஏற்பட்டுவிட்டது.

இந்த சாதி வேற்றுமையும், அதனூடே வளர்ந்து வரும் விரோத உணர்ச்சியும் தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதைத்து தமிழகத்தைப் பல்வேறு பகை முகாம்களின் பாசறையாக்கி விட்டன. "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் இல்லாததே நாடு" என்ருர் வள்ளுவர். ஆனல், இந்த இரண்டும் தமிழ் நாட்டில் ஆண்டவனலும் அழிக்க முடியாத அபாயச் சக்திகளாக்கி விட்டன.

தொழில் வழித் தோன்றிய சாதிப்பிரிவுகள் பிறப்பு வழி மாறிய காலத்திலேயே, அதனல் நேரக்கூடிய கேடுகளை எடுத்துக் காட்டி எச்சரித்தனர் தமிழ்ச் சான் ருேர்கள். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப் பொக்கும் செய்தொழில் வேற்றுமையான்" என்று உரைத்த வள்ளுவரிலிருந்து, "சாதிகள் இல்லையடி பாப்பா"—"சாதிக் கொடுமைகள் வேண்டாம்" என்று பாடிய பாரதியார் வரை எல்லோரும் பிறப்பு வழிப்பட்ட சாதிப் பிரிவினையைச் சபித்தனர். ஆனல், சான்ருேர் களின் சாபத்தையும் வென்று சாதிப்பிரிவுகள் சாகாவரம் பெற்று விட்டன.

தமிழகத்தின் சரித்திரத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால், பிறப்புவழி சாதி வேற்றுமையை வெறுத்த வர்களே அறிந்தோ அறியாமலோ அந்த வேற்றுமை நிலைக்கும்படி செய்துவிட்ட அதிசயத்தைப் பார்க்கிருேம்.

பெரிய புராணத்தைப் படித்தால், அதிலே சாதிக் கொரு நாயன்மாரைப் பார்க்கிருேம். ஆம்; அந்தண சம்பந்தரிலிருந்து அரிஜன நந்தனர் வரை.

அப்படியே வைஷ்ணவ இதிகாசங்களைப் படித்தால், அங்கும் சாதிக்கொரு ஆழ்வார்களை அல்லது அடியார் களைக் காண்கிருேம்.

இப்படி, ஒவ்வொரு சாதியாரையும் திருப்தி செய்ய சாதிக்கொரு நாயன்மாரையும், வைஷ்ணவ அடியாரையும் அறிமுகப்படுத்தினர் சமயவாதிகள்.

சைவ-வைணவ சமயங்களிடையே இருந்த போட்டி உணர்ச்சியும் போராட்டப் புத்தியும் சமயாச்சாரியர்களைக் கூடச் சாதி வேற்றுமைகளை ஏற்கும்படி செய்துவிட்டன.

இதே தவறை, பிற்காலத்தில் தமிழகத்துக்கு வந்த கிறிஸ்துவப் பாதிரிமார்களும் தொடர்ந்து செய்தார்கள். சாதி வேற்றுமைகளை விடாமலே, சாதிப்பட்டங்களைக் கூடத் துறக்காமலே, கிறிஸ்துவராக மாறுவதற்கு இந்துக்களுக்கு சந்தர்ப்ப மளித்தார்கள். ஆம்; வேறு நாட்டுக் கிறிஸ்துவரிடையே இல்லாத சாதி வேற்றுமைகளை தமிழ் நாட்டுக் கிறிஸ்துவரிடையே காண்கிறோம்.

இப்படி, கடந்த காலத்தில், சாதி வேற்றுமைகளை மதவாதிகள் மனமார வெறுத்துக் கொண்டே தத்தம் மதங்களை வளர்ப்பதற்கு அந்த வேற்றுமைகளையே உரமாகப் பயன்படுத்திக் கொண்டனர். அதனால், சாதி வேற்றுமைகள், புராண காலத்தில்-மதங்களிடையே போராட்டம் நடந்த காலத்தில் புத்துயிர் பெற்றுத் தழைத்தன.

மதவாதிகள் செய்த அதே தவறை இன்றைய அரசியல் கட்சித் தலைவர்களும் மிக உற்சாகமாகச் செய்கின்றார்கள். வெளிப் பார்வைக்கு அரசியல் கட்சிகள் அனைத்துமே சாதி வேற்றுமைகளை வெறுக்கின்றன. ஆம், பிரச்சார மேடையைப் பொறுத்த வரையில்! ஆனால், தேர்தல் காலத்தில் சாதிக் கண்ணோட்டத்துடன் தான் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கின்றன அரசியல் கட்சிகள். தியாகம், திறமை, தகுதி ஆகியவெல்லாம் மதிப்பிழந்து விட்டன. மூன்று தலைமுறை காலமாக

வாழ்ந்து, ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தை அழித்து, பாரத நாடு முழுவதுமே ஆட்சி செலுத்தி வரும் காங்கிரஸ் மகாசபை கூட சாதி வேற்றுமைப் படுகுழியில் விழுந்து விட்டதென்றால், மற்ற கட்சிகளைப்பற்றிக் கேட்பானேன்!

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கல்வித் துறையிலும், உத்தியோகத் துறையிலும் மட்டுமே சாதிகளுக்குச் சலுகை காட்டப் பட்டன. அதவும், பிற்பட்ட சாதிகளின் முன்னேற்றத்திற்குச் சலுகைகள் தேவைப்பட்ட காரணத்தால். ஆனால் காலமெல்லாம் சாதி வேற்றுமைகளை வெறுத்து வந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி புரியும் இக் காலத்தில் சட்டசபை அங்கத்தினர் பதவி, மந்திரி பதவி ஆகியவைகூட சாதிவழி விநியோகிக்கப் படுகின்றன. பிற்பட்ட சாதிகள் முன்னேற வேண்டுமென்ற நல்லெண்ணத்தால் அல்ல; பலவீனமடைந்து விட்ட காங்கிரசைப் பலப்படுத்துவதற்காகத்தான்.

ஆம், கடந்த நூற்றாண்டுகளில், மதங்களிடையே ஏற்பட்ட போட்டியின் விளைவாக சாதி உணர்ச்சி வளர்ச்சி யடைந்தது போல, இந்த நூற்றாண்டில் அரசியல் கட்சி களிடையே உள்ள ஆதிக்கப் போட்டியும் பதவி மோகமும் சாதி வேற்றுமைகளை வளர்த்து வருகின்றன. இந்த நிலை நீடிக்கும் வரை தமிழர் ஒன்று படுவதோ, தமிழகம் உலகத்தார் முன்பு தலை நிமிர்ந்து வாழ்வதோ சாத்திய மில்லை.

## 2

சாதி வேற்றுமைகள் ஒழிய வேண்டும் என்பதில் தன்னலமற்ற அறிஞர்களிடையே, அரசியல் தலைவர் களிடையே கருத்து வேற்றுமை இல்லை. ஆனால், சாதி

வேற்றுமைகளை ஒழிப்பதற்கான வழி வகைகளைக் காண்பதில் ஒன்றுபட்ட அபிப்பிராயம் உருவாகவில்லை.

இன்றைய தமிழகத்தில், மக்களும் சரி; அவர்களை ஆட்டிப் படைக்கும் அரசியல் தலைவர்களும் சரி; ஒன்றுக் கொன்று முரணான ஆசைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். ஆம்; தன்னலமின்றிப் பேசும்போது சாதி வேற்றுமைகள் ஒழிய வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், அதே சமயத்தில் சொந்த வாழ்க்கை வளம் பெறுவதற்குச் சாதிகளின் பெயரால் சலுகைகள் கேட்கின்றனர்! கிடைக்காவிட்டால், சாதிவழி படை திரட்டிப் போராடவும் செய்கின்றனர். நிலைமை இதுவானால் சாதி வேற்றுமைகள் எப்போது, எப்படி ஒழியும்?

வருங்காலப் பிரஜைகளான பள்ளி மாணவர்கள் கூட, சாதிகளின் பெயரைச் சொல்லி, 'பிற்பட்ட சாதியார்' என்ற முத்திரையைக் காட்டி கல்வித் துறையில் சலுகைகள் பெறுவதைக் காண்கிறோம். இதனால், சாதி வேற்றுமைகள், நிகழ் காலத்தில் மட்டுமின்றி வருங்காலத்திலும் நிலைத்திருக்குமென்பது நிச்சயமாகிறது.

பிள்ளைகளுக்குக் கல்விச் சலுகை பெற சாதி வேற்றுமை தேவைப்படுகிறதென்றால், பெரியவர்களுக்கு உத்தியோகச் சலுகை பெறவும் அந்த வேற்றுமை தேவைப் படுகின்றது. அரசியல்வாதிகளுக்கோ, ஓட்டுப் பெட்டிகளை நிரப்பிக் கொள்வதற்கு சாதி வேற்றுமை பயன்படுகிறது. இப்படிக் கல்விக்கும், உத்தியோகத்திற்கும், பதவிக்குமாக, பிள்ளைகளிலிருந்து பெரியோர் வரை சாதிகளைப் பயன்படுத்தினால், அவற்றை எப்படி ஒழிப்பது? ஒழிக்க வேண்டும் என்ற ஆர்வம்தான் ஒழிந்து விடும்!

சமூகத்தின் மீது ஒரு சிலர் ஆதிக்கம் பெற்றதும் பெரும்பாலோர் அதற்கு அடிமைப் பட்டதும் சாதிகளின்

பெயரால்தான். வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், “வல்லான் வகுத்தது வாய்க்கால்” என்ற போக்கில் சம்பவங்கள் நடந்துவந்திருப்பதைப் பார்க்கலாம். இதனுல் ஒடுக்கப்பட்டவர்கள் உயர்வடைய வேண்டுமானுல், சாதி வழிச் சலுகைகள் தேவை என்ற எண்ணம் பிற்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களின் உள்ளங்களில் உரம் பெற்று விட்டது. முன்னேறி விட்ட சாதியார்களின் ஆதிக்க புத்தியும் இந்த எண்ணத்திற்கு அரண் செய்கின்றது. இந்த நிலையில் சாதி வேற்றுமைகளை ஒழிப்பது எப்படி?

சாதி வேற்றுமையையும் சகித்துக் கொள்ளலாம்; சாதிக்குச் சாதி விரோதம் வளராமலிருக்குமாயின்! ஆம்; சுயசாதிப் பற்றுதலைவிட பிறசாதி மீது கொண்டுள்ள பகைதான் கொடியது. பிறசாதி மக்கள்மீது பகை கொள்ளாமலே சுயசாதியின் வளர்ச்சிக்குப் பாடுபட முடியும். ஆனுல், சுயசாதிக்கு ஆக்கவழியில் பாடுபட ஆற்றல் இல்லாதவர்களே பிற சாதி மீது பகைமையைத் தூண்டி விடுகிருர்கள். அதன் மூலம் சொந்தச் சாதிக்குப் பாடுபடுபவர்போல நடித்து பதவி வேட்டையாடுகிருர்கள். இவர்களால்தான் சாதி வெறிப்பேய் ‘ஊழிக் கூத்து’ ஆடுகின்றது. வயது வந்தோருக்கு வாக்குரிமை கிடைத்து விட்ட பிறகு, சாதிப் பேய் ஜனநாயக அணிகள் பூண்ட மோகினி வடிவம் கொண்டு விட்டது. ஆளுங் கட்சியான காங்கிரஸ், அதிகாரக் கள்ளுண்ட போதையில் அந்த மோகினிக்கு அடிமைப் பட்டுக் கிடக்கின்றது.

குறைந்த பட்சம் காங்கிரஸ் கட்சியேனும் இந்த மோகினியிடமிருந்து விடுதலை பெறுமானுல், சாதி வெறிப் பேயின் கொட்டம் அடங்கும். அந்த நாள் எந்நாளோ!

சமுதாயத்தின் அடித் தளத்திலுள்ள ஏழை, எளியவர்களின் வாழ்க்கை வளர்ச்சிக்கு சாதி உணர்ச்சி

கொஞ்சங்கூட உபயோகமாக இல்லை. அதற்கு மாருக, அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்வதற்கே சாதி உணர்ச்சி பயன்பட்டு வருகின்றது. இன்று நேற்றல்ல ; பல நூற்ருண்டுகளாக. ஆகவே, சுக ஜீவிகள் சாதி வேற்றுமையை விரும்பிஞலும், ஏழை எளியவர்கள் அந்த வேற்றுமையை வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் பொசுக்குவதற்குப் பாடு படவேண்டும்.

சாதி உணர்ச்சி விஷயத்தில், பாமர மக்களை விட, படித்த 'புத்திசாலி'களின் நிலைமைதான் மோசமாக இருக்கிறது; ஆம்! பாமரர்கள், சுய சாதிப் பற்றுடையவர் களா யிருக்கின்றனர். ஆனுல், படித்தவர்களோ பிற சாதி மீது பகைமை யுடையவர்களாகவும் காணப்படு கின்றனர். இது 'கல்வி'யில் புகுந்த களங்கமாகும்.

சாதி வேற்றுமைகள் ஒழிய வேண்டு மென்கிற இத் தருணத்தில், 'பிராமண ரல்லாதார்' என்ருெரு புதிய சாதி சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு சாதியை சங்க இலக்கியத்திலோ, சரித்திரத்திலோ நாம் பார்த்த தில்லை. சமூகத்தில் மிகச் சிறுபான்மையினரான ஒரு சாதியின் பெயரைச் சொல்லி, அந்த சாதி அல்லாதவர் என்று பெரும்பான்மையினர் தங்களுக்குப் பெயர் சூட்டிக் கொள்வது வெட்கப்பட வேண்டிய விஷயம். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில், 'பிராமணர் அல்லாதார்'—'முஸ்லிம் அல்லாதார்' என்ற பெயர்கள் தமிழினத்தின் ஒற்றுமை யைச் சிதைப்பதற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டன.

பழைய நிலை எதுவாயினும், "பிராமணர்—பிராமண ரல்லாதார்" என்ற வேற்றுமையை இனியும் நீடிக்க விடக்கூடாது. பிராமண அறிவாளிகளுக்கு எதிராகத் துவங்கிய இந்த 'அல்லாதார்' உணர்ச்சி, ஏனைய சாதி

களிலுள்ள அறிவாளிகளுக்கு எதிராகவும் இன்று பயன்பட்டு வருகின்றது. அறிவுக்குப் பெயர் பெற்ற தமிழகத்தில் "அறிவாளிகள் வேண்டாம்" என்ற அவல நிலை அரசியலில் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலைமை நீடிக்குமானால், தமிழகத்தின் பெருமைகள் எல்லாம் ஒழிந்து பிறரால் பழிக்கத்தக்க நிலை ஏற்பட்டுவிடும்.

சமீப ஆண்டுகளில் தமிழகத்தில் அரசியல் போகின்ற போக்கை ஆராய்ந்தவர்களுக்கு இந்த உண்மை விளங்கும். உத்தியோகத் துறையில் தமிழ் நாட்டில் தமிழரல்லாதார் ஆதிக்கம் செலுத்துவதற்குக் காரணமாக இருப்பதும் இந்த பிராமணரல்லாதார் உணர்ச்சிதான். இப்போது பிராமணரல்லாதார் இயக்கத்தை நடத்துபவர்களே இதை உணர ஆரம்பித்து விட்டனர். ஆனால், தவறை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அதற்குப் பரிகாரம் தேட அவர்களுக்குத் தைரியம் பிறக்கவில்லை.

அவர்கள் நிலை எதுவாயினும், தமிழினத்தை ஒன்றுபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழரசுக் கழகம், சாதி வேற்றுமைகளை ஒழிப்பதற்குப் பாடுபட வேண்டும். பிற்பட்ட சாதியாரின் முன்னேற்றத்திற்குத் தடை செய்யாத வகையில் சாதி ஒழிப்புப் பிரச்சாரமும் நடைபெற வேண்டும்.

## 3

சாதி வேற்றுமைகள் ஒழியவேண்டுமானால், கலப்பு மணம் அதிக அளவில் நடைபெறவேண்டும் என்கின்றனர் சிலர். இது ஒரு யுக்தி வாதந்தான். ஆனால், ஏற்கெனவே கலப்பு மணம் செய்து கொண்டவர்களிடையேயும் சாதி உணர்ச்சி ஒழியவில்லை என்பதைக்

கண்கூடாகப் பார்த்து வருகிறோம். பிற சாதிப் பெண்களை மணந்து வாழும் ஆடவர்களில்—அரசியல்வாதிகளில் — பலர் சுய சாதிச் சங்கங்களில் நிர்வாகிகளாக இருக்கின்றனர். பிராமணப் பெண்களை மணந்தவர்களில் சிலர் பிராமணரல்லாதார் சார்பில் நடக்கும் கிளர்ச்சியில் உற்சாகமாகப் பங்கு கொள்வதைப் பார்க்கிறோம். ஆகவே, கலப்பு மணத்தால் சாதி உணர்ச்சி ஒழியுமென்று சொல்லுவதற்கில்லை. ஒருவேளை, இங்கொன்று அங்கொன்று என்றில்லாமல் எங்கெங்கும் கலப்பு மணம் நிகழுமானால், அடுத்த தலைமுறையிலேனும் சாதி வேற்றுமையும் வெறியும் பெருமளவுக்குக் குறையலாம். ஆனால், எங்கெங்கும் கலப்பு மணம் நிகழ்வதற்கான சூழ்நிலை இப்போதைக்கு இல்லை; கலப்பு மணத்தைச் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்துவதும் சாத்தியமில்லை.

ஒவ்வொருவரும் தங்கள் இயற்பெயருக்குப் பின்னே உள்ள சாதிப் பெயர்களை 'தியாகம்' செய்வதால், சாதி உணர்ச்சி குறைந்து விடும் என்கின்றனர் சிலர். இது, வெறும் வெளி மயக்கமே! இந்நாளில் பெரும்பாலோர்—சிறப்பாகப் படித்தவர்கள் அநேகமாக சாதிப் பெயர்களை இயற்பெயருக்குப் பின்னே பொருத்திக் கொள்வதில்லை. ஆனால், அப்படிப்பட்டவர்களின் உள்ளத்திலும் சாதி உணர்ச்சி பொங்கித் ததும்பி வழிந்து ஒழுகுவதைப் பார்க்கிறோம். எனவே, இந்த வெளிமயக்குத் 'தியாக'த்தில் நமக்கு நம்பிக்கை இல்லை.

சாதிவாரி குடியிருப்புகளை ஒழித்து விட்டால் சாதி உணர்ச்சி குறைந்து விடுமென்று கூறப்படுகிறது. குறிப்பாக, அக்கிரகாரமும், சேரியும் தொலைந்தால் அனைத்தும் சரியாகிவிடும் என்கின்றனர். இதுவும் வெறும் பேச்சு சித்தாந்தந்தான். சாதாரண மக்களிடையே நாகரிக

வாழ்வும், பொருளாதார அந்தஸ்தும், போதிய கல்வி அறிவும் ஏற்படாத வரையில் பல சாதியினரும் கலந்தாற் போல் வாழும் குடியிருப்புகள் ஏற்படுவது சாத்தியமில்லை. பொருளாதாரத்திலும், கல்வியிலும் சம அந்தஸ்துடைய பல சாதியினர் ஒரே வட்டாரத்தில் சேர்ந்து வாழலாம். அப்போதும் பின்னடைந்துவிட்ட அல்லது ஒடுக்கப்பட்டுள்ள மக்களிடையே சாதி முகாம்கள் இருக்கத்தான் செய்யும். குறிப்பாக நெசவாளர்கள், சலவையாளர், மீனவர் ஆகிய தொழில்வழி சாதிகளிடையே தனித்தனிக் குடியிருப்பு தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அவர்களுடைய தொழிலுக்கு அது அவசியமாகவும் கருதப்படுகிறது.

இதையெல்லாம் நோக்கினால் ஒரே அடியில், எடுத்த எடுப்பிலேயே சாதிகள் அனைத்தையும் ஒழித்துவிட முடியுமென்று நம்புவதற்கில்லை. முதலில் சாதி வெறியையும் சாதிக்குச் சாதியுள்ள விரோதத்தையும் ஒழிக்க முயல வேண்டும். இதில் வெற்றி கண்டால் சாதி வேற்றுமைகளை ஒழிப்பதிலும் வெற்றி காண்பது சுலபமாகி விடும்.

சமுதாயத்தில் சாதி வேற்றுமை தொலையவேண்டுமானால், முதலில், சமுதாயத்தின் மீது ஏதேனும் ஒரு வகையில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் கட்சிகளில் சாதி உணர்ச்சிக்கு இடந்தரக் கூடாது.

தமிழகத்தைப் பொறுத்த வரையிலேனும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் கூடிப்பேசி தங்கள் கட்சிகளில் சாதி உணர்ச்சிக்கு இடந்தருவதில்லை என்று உடன்பாடு செய்துகொள்ள வேண்டும். இதனால், அரசியலில் சாதி உணர்ச்சியைக் கலந்து சமுதாயத்தைப் பிளவுபடுத்தும் நாசகார சக்திகளை ஒழித்துக் கட்டலாம்.

சாதிப்பற்றுக் குறைய வேண்டுமானால், மொழிவழிப் பட்ட இனப்பற்றை மக்களிடையே வளர்க்க வேண்டும். தமிழர் எல்லோரும் ஒரே சாதி என்ற எண்ணத்தை ஒவ்வொருவருடைய இதயத்திலும் புகுத்தவேண்டும். இன உணர்ச்சியை வளர்க்காத வரையில், சாதி உணர்ச்சி கொஞ்சங்கூடக் குறையாது. 'தமிழர்' என்ற இன உணர்ச்சியால் சாதி வேற்றுமைகளை முற்றிலும் அழிக்க முடியாவிடினும் அதன் வெறியாட்டத்தையேனும் கட்டுப்படுத்த முடியும்.

சான்றாக, தேச விடுதலைப் போராட்டத்தின்போது இந்திய மக்களில் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் 'இந்தியர்' என்ற உணர்ச்சி நிறைந்திருந்தது. அதன் விளைவாக அப்போது சாதி உணர்ச்சி அரசியலில் தலை காட்டவில்லை. அதுபோல, கலை ஆர்வம், மொழிப் பற்று, கலாச்சார உணர்ச்சி ஆகியவற்றைத் தூண்டி விட்டு 'தமிழர்' என்ற இன உணர்ச்சியை வளர்த்து விடுவோமானால் சாதிவெறி பெட்டிப்பாம்பு போல ஒடுங்கி விடும்.

மற்றும், சட்ட சபைகளுக்குப் பிரதேசவாரித் தேர்தல் தொகுதிகள் அமைத்திருப்பதற்குப் பதிலாக, சாத்தியமானவரை தொழில் வாரித் தொகுதிகள் ஏற்படுத்திவிட்டால் தேர்தல் களத்திலிருந்தும் சாதி வெறியை விரட்டி விடலாம். படித்தவர்களும் பணக்காரர்களும்தான் தங்கள் சுயநலத்திற்காகப் பாமர மக்களிடையே சாதிவெறியைக் கிளப்பிவிடுகிறார்கள். வறுமையாலும், கல்வி இன்மையாலும் சாதாரண மக்கள் வழி தவறிச் செல்லுகின்றனர். ஆகவே, மக்களிடையே கல்வி அறிவை-விஷய ஞானத்தை வளர்க்கும் முயற்சி துரிதமடைவதோடு விரைவில் பூரணமாக வெற்றி பெற

வேண்டும். அவர்களை வாட்டும் வறுமையைத் தொலைத்து உழைப்புக்கும் தேவைக்குமேற்ற ஊதியம் கிடைப்பதற்கு வழி வகைகள் காணவேண்டும்.

பழமையின் பெயரால், பழக்கவழக்கங்களின் போர்வையில் குறிப்பிட்ட சில சாதியாரை இழிதொழிலில் ஈடுபடும்படி உயர்சாதியார் வற்புறுத்துவதை சட்டவிரோதமாக்க வேண்டும்.

சலவைத்தொழில், நெசவுத்தொழில் போன்ற பழமையான குடிசைத் தொழில்களை, பாக்டரி மூலம் நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் அந்தத் தொழில்களில் உயர் சாதியாரும் கலந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும்.

சாதி ஒழிப்பை சமூக சீர்திருத்தக் கொள்கையாகக் கொண்டு அரசாங்கத்தில் அதற்கென சமூக சீர்திருத்த இலாகா என்ற ஒரு தனி இலாகாவை ஏற்படுத்த வேண்டும்.

சாதி ஒழிப்பு அடிப்படையில் பிற்பட்ட சாதியாரின் கல்விக்காகவும், அவர்கள் ஈடுபட்டுள்ள தொழில்களை நாகரிகமுடையதாகச் செய்வதற்காகவும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு பெருந்தொகையைத் தனியாக ஒதுக்க வேண்டும்.

இதெல்லாம் அமுல் நடக்கவேண்டுமானால், சமுதாயத்தின் வழிகாட்டிகளாக விளங்கும் அரசியல் கட்சிகளிடையே சாதி ஒழிப்பு ஒன்றிலேனும் ஒற்றுமை ஏற்பட வேண்டும்.

மற்ற கட்சிகளின் நிலை எதுவானாலும் தமிழரசுக் கழகத்தார் மேலே குறிப்பிட்டுள்ள கொள்கைகளையும், வகுத்துள்ள திட்டங்களையும் மக்களிடையே பரப்பி, சாதி

ஒழிப்பு வேலையில் அரசாங்கம் கவனம் செலுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இன்றுள்ள நிலையில் சாதி உணர்ச்சியை எதிர்த்துப் போராடுவது அவ்வளவு சுலபமல்ல. அதிலும், சாதி ஒழிப்புப் போராட்டம் என்ற பெயரில் ஒரு சாரார் தமிழகத்தில் ஒரு தலைமுறை காலம் சாதிப் பகைமையை வளர்த்து வந்திருக்கின்றனர். போதாக் குறைக்கு காங்கிரசும் சாதி வேற்றுமைகளை தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாதனமாகக் கையாண்டு வருகிறது. இந்தச் சங்கடங்களெல்லாம் இருப்பினும், நம்பிக்கையோடு சாதி உணர்ச்சி கொண்டவர்களிடம் விரோதம் பாராட்டமல் அன்பு வழியில்—ஆக்க முறையில் பாடுபட்டால் நாளடைவில் நல்ல சூழ்நிலை தோன்றும்.

—'செங்கோல்' 9—10—'55.

## மதம் பெரிதா? நாடு பெரிதா?

இஸ்லாம், உலக மதம். அதைப் பின்பற்றுவோர் பல்வேறு நாடுகளிலும் பரவிக்கிடக்கின்றனர். எனவே, சமயப்பற்றுடைய முஸ்லிம்கள், பிறநாட்டு முஸ்லிம்களின் மீது அன்பு கொள்வது இயற்கை, நியாயமுங்கூட. ஆனால், இந்த அன்பால், தான் பிறந்த நாட்டின் நலனை மறந்துவிடக்கூடாது. இது முஸ்லிம்களுக்குமட்டுமல்ல; தமிழகத்லுதிள்ள எல்லாச் சமயத்தினருக்கும் பொருந்துவதேயாகும்.

ஒரு தமிழ் முஸ்லிமுக்கு தாய் நாடு எது? தமிழ்நாடேயாகும். கடைப்பிடிக்கும் மதம் எதுவானாலும், கைதொழும் கடவுள் எவரானாலும், ஒவ்வொரு தமிழனுக்கும் தாயகம் தமிழகத்தைத் தவிர வேறில்லை. எனவே, முஸ்லீமாகட்டும், கிறிஸ்துவராகட்டும், அல்லது இந்துக்களாகட்டும்—தத்தம் மத உணர்ச்சியை தாய்நாட்டுப் பற்றுக்குக் கேடின்றி வளர்க்க வேண்டும்.

ஒரு உண்மைத் தமிழனை, "உனக்கு மதம் பெரிதா, நாடு பெரிதா?" என்று கேட்டால் என்ன பதில் கூற

வேண்டும்? "மதத்தைவிட நாடே பெரிது" என்பதே அவனுடைய பதிலாக இருக்க வேண்டும்.

மேல்நாட்டை நோக்கினல், ஒரே கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றும் பல்வேறு நாட்டினர், தேசபக்தி காரணமாய் எதிர் எதிராக நின்று சண்டையிட்டு மாண்டதை நாம் படித்திருக்கிறோம்; ஏன், பார்த்துமிருக்கிறோம். இதனல், கிறிஸ்துவ மதம் அழிந்துபோய் விட்டதா? இல்லவே இல்லை. தேசபக்தி காரணமாக ஒரே மதத்தினர் சண்டையிட வேண்டும் என்பதல்ல எனது கருத்து. தேசபக்தியால் மதம் அழிந்து விடாது என்பதை எடுத்துக் காட்டவே இதைக் கூறுகின்றேன்.

எனவே, சமயம் எதுவானலும், தமிழகத்தில் வாழும் மக்கள் அனைவரும் தமிழர் என்ற இன உணர்ச்சிகொள்ள வேண்டும். தமிழகமே தங்கள் தாயகம் என்ற நாட்டுப் பற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் முஸ்லிம்கள் இதர மக்களோடு இன உணர்ச்சி கொண்டு இணைந்து வாழ்வதால், இஸ்லாம் மதத்திற்குத் தீங்கு ஒன்றும் நேராது. ஆழ்ந்து சிந்தித்தால் தமிழ் நாட்டு முஸ்லிம்கள் இதர தமிழர்களோடு நெருங்கிப் பழகி ஓரினமாக உறவுகொண்டு வாழ்வதால், தாங்கள் பின் பற்றும் இஸ்லாத்தின் மேன்மையைப் பிறருக்கும் உணர்த்த வழி கிடைக்கும். இதனல், தமிழ் முஸ்லிம்கள், தமிழ் நாட்டளவுக்கேனும் இஸ்லாத்தின் பெருமையை உணர்த்தும் பணிபுரிந்தவர்களாவர்கள்.

தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கு உருது சமய மொழியாகவும், தமிழ் தாய் மொழியாகவும் இருந்து வருகிறது. ஆனல், அரசியலில் இந்து—முஸ்லிம் என்ற வேற்றுமை அதிகப்பட்டதன் காரணமாக உருதுவை சமயமொழியாக மட்டுமின்றி, அதையே தாய்மொழியாகவும் கொண்டு

தமிழைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணம் பரவி வருகிறது. இதற்கு முஸ்லிம் அரசியல் தலைவர்களின் தவருன பிரச்சாரமும் ஒரு காரணமாகும்.

தமிழ் நாட்டு முஸ்லிம்கள் அனைவருமே அராபிய நாட்டிலிருந்து வந்தவர்களின் சந்ததிகளல்லர். தமிழகத்தின் கிழக்குக் கரையோரப் பிரதேசங்களில் குடியேறிய அரபு முஸ்லிம்கள் மிகமிகச் சொற்பமே யாவர். உள்நாட்டு மதங்களைக் கைவிட்டு இஸ்லாமைத் தழுவிய தமிழர்தான் பெரும்பாலோர். எனவே, தமிழகத்து முஸ்லிம்களில் மிகப் பெரும்பாலோருக்குத் தொன்று தொட்டே தமிழ்மொழி தாய்மொழியாக இருந்து வந்திருக்கிறது. மதம் மாறி விட்டதனுல், தாய்மொழியும் மாறிவிடாது. ஏனெனில், மதம் மாறிய பின்னரும் தமிழகத்தில்தான் வாழ்கின்றனர். தமிழ் மொழியைத்தான் வீட்டு மொழியாகவும் நாட்டு மொழியாகவும் கொண்டு போற்றி வருகின்றனர். எனவே, தமிழகத்து முஸ்லிம்களுக்கு தமிழ்தான் தாய்மொழி.

அரபு நாட்டிலிருந்து தமிழகத்தில் குடியேறிய முஸ்லிம்களின் சந்ததியினர் உருதுவைத் தாய்மொழியாகக் கொள்ளக் கூடும். ஆனுல், அவர்கள் மூதாதையர் தமிழகத்தில் குடியேறி எத்தனையோ நூற்ருண்டுகள் ஆகிவிட்டன. அவர்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே ஒரு பொதுவான நாகரீகம் உருவாகிவிட்டது. உணவு, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் அவர்கள் பெரும்பாலும் தமிழகத்துப் பண்பாடுகளையே பின்பற்றுகின்றனர். ஆகவே, தமிழகத்து முஸ்லிம்கள் தமிழைத் தாய் மொழியாகவும், உருதுவை சமய மொழியாகவும் கொள்வதே இதர தமிழரோடு .கலந்து வாழ்வதற்குச் சரியான வழி.

கடந்த காலத்தில் தமிழகத்து முஸ்லிம்கள் தமிழையே தங்கள் தாய் மொழியாகக் கருதிப் பெருமைப்பட்டார்கள் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு.

வள்ளல் சீதக்காதி ஒரு முஸ்லிமாவார். ஆனால், அவர் தமிழ்மீது கொண்ட பற்றுதலால், முஸ்லிம்களல்லாத தமிழ்ப் புலவர்களுக்குத் தமது செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுத்து 'வள்ளல்' எனப் புகழ் பெற்றார். அந்த வள்ளல் மீது பல பிரபந்தங்களைப் பாடிப் புகழ்ந்தனர் முஸ்லிமல்லாத புலவர்கள்.

சீதக்காதியைப் போன்று தமிழ்ப் புலவர்களைக் காத்த வள்ளல்களும், உமர்ப் புலவரைப் போன்று தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்த கவிஞர்களும் முஸ்லிம் சமூகத்தில் எண்ணற்றோர் இருந்ததுண்டு. இன்றுங்கூடப் பலர் இருந்து வருவதைக் காண்கிறோம். எனவே, தமிழ் நாட்டு முஸ்லிம்கள் சமய உணர்ச்சியை, தேச பக்திக்கு எதிர்த்தட்டில் வைக்காமல், குமரி முதல் வேங்கடத்திற்கு இடைப்பட்ட தமிழகத்தின் எல்லைகளைக் காப்பதே—அதில் தனியரசு காண்பதே தங்கள் தலையாய கடமை என்று கருதிப் பாடுபட வேண்டும்.

முஸ்லிம்களைப் போலவே தமிழ் நாட்டு இந்துக்களிடமும் பல தவறான எண்ணங்கள் இருந்துவருகின்றன. மொழிப் பற்றும், அம்மொழி வழிப்பட்ட நாட்டுப் பற்றும், மதப் பற்றைவிட உயர்ந்தவை என்பதை அவர்கள் உணர்வதில்லை.

உதாரணமாக, தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழ் மொழி பேசும் ஒரு முஸ்லிமை சமயம் காரணமாக அந்நியராய்க் கருதுகின்றனர் பலர். என்ன தவறான உணர்ச்சி!

சொந்த இனத்தார் யார்; அந்நிய இனத்தார் யார் என்பதை நிச்சயிப்பதற்கான அளவுகோல் எது? அவர்கள் பேசும் மொழியும், வாழும் நாடுமன்றோ!

" இந்தியா முழுவதும் ஒரே நாடு; இந்தியர் அனைவரும் ஒரே இனம் " என்று பேசும் தேசியவாதிகள் எதை ஆதாரமாகக் கொள்ளுகின்றனர் தெரியுமா? குமரிமுதல் இமயம் வரையுள்ள மக்களிடையே நிலவி வரும் இந்துமத பழக்க வழக்கங்களையேயாகும். ஒரே தேசிய இனத்திற்குரிய இலக்கணங்கள் எவை என்பதை, மதப் பண்புகளைக் கொண்டு நிர்ணயிப்பது பிழையன்றி வேறில்லை.

" கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுவோரெல்லாம் ஒரே தேசிய இனத்தவர் " என்று கூறும் மேனாட்டு அரசியல் வாதியை நாம் கண்டதில்லை. அங்கெல்லாம் இனத்தைக் கணக்கிட, அவ்வினத்துக்குரிய மொழியையும் அம்மொழி வழங்கும் நாட்டையும் வரலாற்றையுமே முக்கியமாகக் கொள்ளுகின்றனர்.

சைவ தெய்வத்தைத் தொழுவதில்—வைணவக் கடவுளை வாழ்த்துவதில்—தமிழ்நாட்டாரும் வடநாட்டாரும் ஒரே மனப்பாங்கு உடையவராக இருக்கலாம். ஆனால், பேசும் மொழி, தமிழருக்குத் தமிழ் மொழியேயன்றி வடமொழியல்ல.

அரசியலிலும் தமிழர் வரலாறு தனியானது. தெற்கு நோக்கிய அசோகனது படையினரை எதிர்த்துப் போராடி இரத்தத்திலே முழுக்காட்டிய கலிங்க மக்களின் வீரம்—தமிழ் வேந்தரைப் பழித்துப் பேசிய கனக விசயரின் தலையில் கல் சுமத்திய செங்குட்டுவனின் ஆற்றல்—ஆகியவைதான் தென்னாட்டின் அரசியல் வரலாறு. பொருளாதாரத் துறையில் பார்த்தாலும் ஒவ்வொரு மொழிபேசும் இனத்தவரும் தத்தம் நாட்டின் வளத்தைத்

தாங்களே அனுபவித்து வந்ததைக் கடந்த கால வரலாறுகள் காட்டுகின்றன.

எனவே, முஸ்லிமல்லாத தமிழ் மக்களும், மத உணர்ச்சியையே இன உணர்ச்சியாகக் கருதாது, தமிழே தாய்மொழி, தமிழகமே தாயகம் என்று எண்ணி வாழ வேண்டும். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமயங்களைப் பின் பற்றும் எல்லா தமிழரும் கலந்ததே தமிழ்த் தேசிய இனம் ; இதை மறக்கலாகாது.

தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களை வேண்டுகிறேன் : உங்கள் மதம் எதுவானாலும், மதவழிப்பட்ட மொழிகள் எவையானாலும்,அவற்றைவிட தமிழ்மொழியும் தமிழகமும் தாம் முக்கியமென்று உணர வேண்டும். தமிழரின் வாழ்வு தான் —தமிழகத்தின் வாழ்வுதான்—தங்கள் வாழ்வு என சர்வ சமயத் தமிழர்களும் உணர்ந்து அதன்படி ஒழுக வேண்டும். அப்பொழுதுதான். தமிழர் மதவேற்றுமையின்றி மனமொத்து வாழ இயலும். அந்தப் புதிய தமிழகம்—இன உணர்ச்சி கொண்ட தமிழகம்—மதப் பற்றைவிட நாட்டுப்பற்றே பெரிதெனக் கொண்ட தமிழகம் — 'கோட்சே'க்களைப் பெற்றெடுக்கும் வட நாட்டுக்கு நல்ல வழிகாட்டியாயிருப்பதோடு இந்தியா முழுவதையுமே தலைமை தாங்கி நடத்தும் பெருமையும் பெற்றிருக்குமென்பதில் ஐயமில்லை.

—'முரசு'— *17—10—48.*

# தேசிய வாதிகளும் சமூகப் புரட்சியும்

தேசிய வாதிகள் என்றாலே 'சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்கு விரோதிகள்' என்ற ஒரு தவறான எண்ணம் தமிழகத்தில் நெடுங்காலமாக நிலவி வந்தது. அரசியலில் தேசியவாதிகளுக்கு எதிரிகளாக இருந்தவர்களே இந்த எண்ணத்தைப் பரப்புவதில் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். ஆனால், தேசிய இயக்கத்தின் வரலாற்றைப் பழுதற உணர்ந்த பகுத்தறிவாளர்களுக்கு இது முழுப் பொய் என்பது நன்கு தெரியும். அரசியல் புரட்சியில் ஈடுபட்டு அல்லலுற்றதன் காரணமாக, சமூகப் புரட்சியில் தேசியவாதிகள் திட்டமிட்டு வேலை செய்ய முடியவில்லை. என்றாலும், சமூகப் புரட்சியிலிருந்து அவர்கள் முற்றும் விலகியிருக்க வில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் வ. உ. சிதம்பரனார், ராஜாஜி, பாரதியார் போன்ற தேசியத் தலைவர்கள் தங்கள் வாழ்க்கையில் நடத்திக் காட்டிய சீர்திருத்தச் செயல்கள் கொஞ்சமன்று. புரட்சிகரமான சீர்திருத்த வாதிகள் என்று இப்பொழுது கருதப்படுவோர்கூட, சீர்திருத்தத்தைப் பற்றியே சிந்தனை செய்யாத காலம்

அது. கவியரசர் பாரதியார் எழுதி வைத்துப் போன பாடல்களிலுள்ள சீர்திருத்தக் கருத்துக்கள், சமூகப் புரட்சியின் சிகரத்தில் காணும் சின்னங்களாகும்.

அமைப்பு வழியாகப் பார்த்தாலும் தேசியவாதிகளின் தாய்ச் சபையாகிய காங்கிரஸ் மகாசபை, தீண்டாமையைப் போக்கச் செய்துள்ள சேவை கொஞ்சமன்று. மற்றும் கலப்பு மணம், விதவை மணம், ஆகிய சீர்திருத்தத் திருமணங்களைச் செய்து கொண்டு வாழ்வோரில் தேசிய வாதிகளில் எத்தனையோ பேரை எடுத்துக்காட்டாகக் கூற முடியும். பொதுவாக நோக்குமிடத்து, சீர்திருத்தத்திற் காகப் பேசுவது தங்களுக்கே தனியுரிமை என்று சொல்லிக் கொள்ளும் குழுவினரைவிட, தேசியவாதிகள் தான் சீர்திருத்தச் சிந்தனையை நாட்டிலே கிளப்பினார்கள் என்றாலும் மிகையன்று; வரலாறு காட்டும் உண்மைகள் இவை. தேசியப் போராட்டத்திலிருந்து இடைநடுவே விலகியவர்களும், தேசியப் போராட்டத்திற்கு எதிராக நடப்பதையே கடமையாகக் கொண்டு, அதற்காக அந்நிய ஆட்சியிடம் பட்டம்—பதவிகளைப் பரிசாகப் பெற்றவர் களும், மக்களிடையே செல்வாக்குப் பெறுவதற்காக சீர்திருத்தக் கொள்கையை ஒரு கருவியாகக் கையாண் டனர். அதனால், சீர்திருத்தக் கொள்கையாளரை மக்கள் பாராட்ட வேண்டியதற்குப் பதிலாகப் பழி கூறலாயினர்.

சமூக சீர்திருத்தக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்ய விரும்புவோர், அரசியல் கட்சி விவாதங்களில் ஈடுபடா திருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், ஒன்றோ டொன்று மாறுபட்ட அரசியல் கொள்கையுடைய பல் வேறு கட்சிகளையும் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தான் சீர்திருத்தக் கொள்கையாளர் வெற்றிபெற முடியும். தமிழ் நாட்டில் சமூக சீர்திருத்தக் கொள்கைகளைப்

பிரச்சாரம் செய்ய முற்பட்டவர்கள் இதைக் கருத்தில் கொண்டிருந்தால், சமூகத் துறையில் இதுவரை எவ்வளவோ மகத்தான மாறுதல்களை நிகழ்த்தியிருக்க முடியும். ஆனால், அவர்கள் அப்படி நடந்து கொள்ளவில்லை. சீர்திருத்தக் கொள்கையைப் பரப்புவதைவிட, தேச விடுதலைக்கு முட்டுக்கட்டையாக நிற்பதையே தங்கள் முதல் வேலையாகக் கொண்டனர். இதனால் தேசியவாதிகளுக்கும் சீர்திருத்தவாதிகள் எனப் படுவோருக்கு மிடையே பிணக்குகள் பெருகின. இதன் விளைவாக, மூட நம்பிக்கையையே தமது மூச்சாகக் கொண்டுள்ள சமயப் பிற்போக்காளர்கள், சீர்திருத்தவாதிகளுக்கு எதிராகத் தேசிய மேடையை ஓரளவு பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.

சமூகப் புரட்சிக்கான துறையில் பிரிட்டிஷ் இந்தியாவில் தேசியவாதிகள் திட்டமிட்டு வேலை செய்யாததற்கு மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. தேசீவாதிகளின் அரசியல் கொள்கை வெறும் உணர்ச்சி வயப்பட்டதல்ல ; விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து முடிவு கட்டப்பட்டதாகும். எனவே, அந்நியராட்சிக்குட்பட்ட ஒரு நாட்டில் முதலில் நிகழவேண்டியது அரசியல் புரட்சியே யன்றி, சமூகப் புரட்சியல்ல என்பதைத் தேசீயவாதிகள் தெளிவாக உணர்ந்திருந்தனர். அடிமைப்பட்ட நாட்டில் அரசியலைப் புறக்கணித்து சமூகப் புரட்சியைக் கிளப்புவது, வண்டிக்குப் பின்னே குதிரையைப் பூட்டிய 'புத்திசாலி'யின் கதையாகத்தான் இருக்கும். மேலும், சமூக சீர்திருத்தம் என்பது வெறும் பிரச்சாரத்தால் மட்டும் நிகழ்ந்துவிடக் கூடியதன்று. பிரச்சாரத்தால் சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்குமளவுக்கு மக்களைப் பக்குவப்படுத்தலாம். ஆனால், மக்களின் பக்குவப்பட்ட மனநிலையை சமூக நன்மைக்குப்

பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானுல், சட்டங்கள் இயற்ருமல் முடியாது. அடிமை நாட்டில் சட்ட மியற்றும் உரிமை அல்லது செல்வாக்கு ஆங்கிலேயரிடமே இருந் தது. அடிமை கொண்ட எசமானின் தயவால் சமூக சீர்திருத்தத்திற்கான சட்டம் இயற்றுவதென்ற மிதவாதக் கொள்கையைத் தேசீயவாதிகள் ஏற்கத் தயாராக இல்லை. எனவே, சமூக சீர்திருத்தக் கண்ணேட்டத்தோடு பார்த்தாலும்கூட, சமூகப் புரட்சியைத் தோற்றுவிப் பதற்கு அரசியல் புரட்சியின் மூலம் இந்தியா விடுதலை பெற வேண்டியது அவசியமாயிற்று. ஆகவே, சமூகப் புரட்சியைப் பின்னணி வேலையாகக் கருதி அரசியல் புரட்சியில் ஈடுபட்டனர் தேசீயவாதிகள்.

இன்றுங்கூட சமூகப் புரட்சி என்று சொல்லு கின்ற பொழுது, முதலாளித்துவ சமுதாயத்தைத் தலைகீழாக மாற்றியமைக்கும் பொருளாதாரப் புரட்சியா, அல்லது மதத்தில் படிந்த மாசை அகற்றும் சமயப் புரட்சியா என்ற கேள்விக்குத் தேசீயவாதிகள் பதிலளிக்க வேண்டியவர்களாகின்றனர்.

சுதந்திர இந்தியாவில், மக்கள் சுகவாழ்வு பெற, அரசியல் புரட்சிக்கு அடுத்தபடியாகச் செய்ய வேண்டியது பொருளாதாரப் புரட்சியே யன்றி, சமயப் புரட்சி யல்ல என்பது வர்க்கப் போராட்ட வாதிகளின் திட்டவட்டமான கொள்கை. என்றுலும், தேசீயவாதிகளைப் போன்றே வர்க்கப் போராட்டவாதிகளும், அரசியல் பிற்போக்காளர் மூலம் சமூக சீர்திருத்தக் கொள்கைகள் ஒரு தனி இயக் கமாக உருவாவதை விரும்பவில்லை. காரணம், சமூக சீர்திருத்தவாதிகள் என்போர், அரசியல்—பொருளாதாரத் துறைகளில் கொண்டுள்ள பிற்போக்கான கொள்கைகளே

யாகும். அவற்றிலிருந்து அவர்கள் முற்றும் விடுபட்டு அரசியல் கலப்பற்ற வகையில் சமூக சீர்திருத்தப் பிரச்சாரம் செய்து வருவார்களாயின், அதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

—' தமிழ் முரசு '—மார்ச் 49.

# ராணுவத்தில் பெண்கள்

இத்தனை நாளும் இந்தியாவைக் காக்கும் பொறுப்பை, அந்நியரான ஆங்கிலேயர் மேற்கொண்டிருந்தனர். ஆங்கிலேயரை வெளியேற்றி உரிமை பெற்ற இந்தியா, உள்நாட்டுக் குழப்பத்திலிருந்தும் வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்தும் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் நிலைமைக்கு வந்துவிட்டது. எனவே, மேலிடத்து ஆட்சியாளர், பாதுகாப்புப் படைத் திரட்ட திட்டம் வகுத்து வருகின்றனர்.

இது தேவையானதே. ஆனால், பாதுகாப்புப் படையை எந்த வகையில் அமைப்பது; படையில் சேரும் உரிமை யார் யாருக்கெல்லாம் உண்டு; படையினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பவற்றைப் பற்றிக் கருத்து வேற்றுமை வலுத்து வருகிறது.

குறிப்பாக, 'பெண்களைப் படையில் சேர்க்கலாமா?' என்பதைப் பற்றி இந்தியப் பாராளு மன்றத்தில் விவாதம் எழுந்த போது, 'சேர்க்க வேண்டும்' என்று சிலரும் 'சேர்க்க வேண்டாம்' என்று பலரும் மாறுபட்டு வாதமிட்டனர். பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒரு

முஸ்லிம் மாது, பாதுகாப்புப் படையில் பெண்கள் அதிக அளவுக்கு இடம் பெற வேண்டுமென்று வற்புறுத்திப் பேசியிருக்கிருர். 'கோஷா' வழக்கத்தைப் புனிதமாகப் போற்றும் ஒரு மரபிலிருந்து இத்தகைய குரல் எழுந்ததை வரவேற்க வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், பாதுகாப்புப் படையில் மட்டுமன்று; முதல் தரமான ராணுவத்திலேயே தமிழ்ப் பெண்கள் இடம் பெற வேண்டும். தமிழகத்தின் வரலாறு, வீரத்திற்குப் பெண்கள் விதிவிலக்கல்ல என்பதை வெளிப்படுத்துகிறது. பெல்ஜியத்தின் வீரத் திற்கு வாழ்த்துக் கூறிய பாரதியார் :

முறத்திஞல் புலியையோட்டும்
மொய்வரைக் குறப்பெண்போல
திறத்திஞல் எளியையாகிச்
செய்கையால் உயர்ந்துநின்ருய்

என்ற வரிகளிலே தமிழகத்துக் குறப்பெண்கள், முறத்தி ஞலேயே புலியை அடித்தோட்டிய வீரத்தை உவமை காட்டியிருக்கிருர்.

தமிழ்ப் பெண்களின் வீரம் வாழையடி வாழையாக வளர்ந்து வரும் பண்பு. இதைச் சங்ககால இலக்கி யங்களே எடுத்தோதும். அன்னமூட்டிய மணிக்கையால் தம் மக்களுக்கு ஆணை காட்டி, அமர்க்களம் அனுப்பிய பெருமை, தமிழ் இனப் பெண்களுக்கே தனியுரிமை.

மாற்ருன் பறையோசை காற்ருேடு கலந்து பாண்டி நாட்டின் மானத்தை அறைகூவியபோது, தன் ஒரே மைந்தனை நோக்கி "மகனே! பாண்டி நாட்டைப் பகைவர் சூழ்ந்தனர். நாட்டைக் காக்க வீட்டுக்கொருவர் வெளிப்பட

வேண்டுமென்ற நமது தென்னவன் ஆணை தெருவெங்கும் ஒலிக்கிறது. உன் பெயர் விளங்க, உன்னைப் பெற்ற மறக்குடியின் புகழ் துலங்க, இப்போதே செருமுகம் செல்! அங்கு வெற்றியன்றி வேறொன்றைக் காணாதே; மன்னவன் நாட்டுக்கு வெற்றி கிட்டுவது அரிதாயின், மாற்றான் விடும் வேலாயுதத்தை உன் மார்பில் தாங்கி, மறவர் குலத்தின் மானத்தைக் காப்பாற்று!" என்று கூறி பாலொழுகும் மகனை வேலொழுகும் போர்க்களம் அனுப் பினாள் ஒரு வீரத் தாய்.

வில் தாங்கி, வேல் தாங்கி, போர்க்களம் புகுந்த வீரத் திருமகன், புறமுதுகில் அம்புபட்டு மாண்டான் என்ற பொய்ச் செய்தி கேட்டதும், "மறவர் குடியில் பிறந்து, என் மார்பகத்தே வீரப் பாலுண்ட எனது செல்வத் திருமகனா போர்க்களத்தில் புறமுதுகிட்டான்? இது உண் மையாயின், அந்தப் பேடிக்குப் பாலூட்டிய என் மார்பை அறுத்து மண்மீது வீசுவேன்" என்று வஞ்சினம் கூறிப் போர்க்களத்தே புகுந்து, பிணக் குவியலின் நடுவே முகத்தில் வீரக் களை வீச, மார்பிலே அம்பு தைத்து மாண்டு கிடக்கும் மைந்தனைக் கண்டு, அவனை மார்போடு தழுவி மனம் களித்தாள் மற்றொரு முதுமகள்.

தமிழ் வேந்தரின் போர்த்திறனை தமது புலமைத் திறத்தால் புகழ்ந்து பாடிப் பரிசு பெற்ற பெண் புலவர் பலரையும் புறநானூற்றில் பார்க்கிறோம். இத்தகைய வீரம் செறிந்த தமிழ்க் குடியில் பிறந்த தற்காலத் தமிழ்ப் பெண்களை ராணுவத்திற்குத் தகுதி யற்றவர்களென்று கூறுவதற்கு எவரும் துணியார். 'பிள்ளை பெறுவதுதான் பெண்களின் தொழில்' என்று பேசும் பேதையர் பலர் இந்நாட்டில் உண்டு. ஆனால், அந்தப் பிள்ளைபெறும் தொழிலிலுங்கூடப் பெண்கள்

வீரத்தையே இலட்சியமாகக் கொண்டிருந்ததை இலக்கிய நூல்களில் பரக்கக் காண்கிறோம்.

புறநானூற்றிலே, ஒரு பெண்ணணங்கு பேசுகின்றாள் :

" ஈன்று புறந்தருதல்
என்தலைக் கடனே "

என்கின்றாள்.

ஆம், பிள்ளையைப் பெறுவது தனது பெருங்கடன் தான் என்பதை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்கிறாள் அந்தப் பெண். ஆனால் "நான் பெற விரும்புவது போர்க் களத்தே, களிறு எறிந்து பெயர்தலைத் தனது கடமையாகக் கொண்ட காளையையே" என்று கூறுகிறாள்.

என்ன வியப்பு! கருவைச் சுமந்து கவலைப் படுங் காலத்திலும் தமிழ் அன்னையரின் ஆசையெல்லாம், "ஆண் மகவு பிறக்காதா!" என்பதேயாகும். அதுவும் தலைப் பிள்ளை ஆண் பிள்ளையாகத்தான் இருக்கவேண்டும் என்பது பெண்களின் பேராசை. ஏன்? பெண் மகவின்மீது வெறுப்பா? அது பாவத்தின் சின்னம் என்ற பழுதுபட்ட எண்ணமா? இல்லை! பெண்ணின்றி ஆண் இல்லை. பெண்ணும் ஆணுமின்றி உலகம் இல்லை. கருவைச் சுமக்கும் அன்னை இதை அறிவாள். ஆனால், நாட்டைக் காக்கும் ராணுவத்திற்குத் தானும் தன் பங்குக்கு ஆள் தர வேண்டும் என்ற ஆசை யொன்றே அவள் ஆண் மகவை விரும்புவதற்குக் காரணமாகும். இதில் பெண்களுக்குள்ளே போட்டி வேறு! முதலில் பெண் மகவை ஈன்றவளைப் பார்த்து, ஆண்மகவை ஈன்றவள் கேலியாகப் பேசுவாள். இது இன்றளவும் பெண்களிடையே இருந்து வரும் வழக்கம்.

இந்த வீர எண்ணம் நாடு அடிமைப்பட்ட காலத்தில் மறைந்து கிடந்தது. மீண்டும் அது உயிர்பெற வேண்டும்.

தமிழகத்தில் வயதுவந்த ஆண் பெண் அனைவருக்கும் ராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும். இன்று துடைப்பம் பிடிக்கும் கை, அவசியமானால் துப்பாக்கி ஏந்தவும் துணிவு பெற வேண்டும். கடமை உணர்ச்சி, துடைப்பத்திற்கும் துப்பாக்கிக்கும் வேற்றுமை காணாது ; காணவும் கூடாது. ஆனால், தாயகத்தைப் பகைவரின் படை முற்றுகையிடுங் கால், துடைப்பத்தைத் தூர எறிந்து துப்பாக்கி ஏந்திப் போர்முனை புகும் துணிச்சலைப் பெண்களிடையே வளர்க்க வேண்டும். படைதாங்கும் வீரம் கடையில் வாங்கும் சரக்கல்ல—நினைத்த மாத்திரத்தில் பெற்றுவிட. அது பயிற்சியால் வருவது. அந்தப் பயிற்சியைச் சாதாரண காலத்தில் கொடுத்து வைத்தால்தான் யுத்த காலத்தில் பயன்படும்.

பெண்களைப் படையில் சேர்ப்பதென்றால், குடும்ப வாழ்வு குலைந்துவிடும் என்று அஞ்சுகின்றனர் சிலர். ஆனால், எப்படி எல்லா ஆண்களும் நிரந்தர ராணுவத்தில் இடம் பெறுவதில்லையோ, அப்படித்தான் எல்லாப் பெண்களும் ராணுவத்தில் இடம் பெற்றுவிட மாட்டார்கள். எனவே, குடும்பம் சிதைந்துவிடுமென்று அஞ்சத் தேவை இல்லை. சுருங்கச் சொன்னால், பெண்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகவேனும் படைப் பயிற்சி பெற வேண்டும். பண்டைத் தமிழ்ப் பெண்களின் வீரத்தை நினைவு கூர்ந்து இன்றையத் தமிழ்ப் பெண்களை நோக்குங் கால், அவர்களது நெஞ்சுரமற்ற நிலையைக் கண்டு நாம் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

வீரக் கண்ணகியின் வழிவந்த நம் தமிழகத்துப் பெண்கள் வீரமற்று வாழ்வதா? ஒருபோதும் கூடாது. ஆகவே, இந்திய அரசாங்கமாகட்டும்; மாகாண அரசாங்கமாகட்டும்—பெண்களுக்கு ராணுவப் பயிற்சி யளிப்பதைத் தங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும்.

வாழ்க பெண்மக்கள் வீரம்!

—'முரசு' 19—9—'48.

# சொல் வன்மை

'சொல் வன்மை' என்பது, எல்லாச் செல்வத்திலும் சிறந்த செல்வமாகும். இதையறிந்தே,

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று

என்றார் வள்ளுவர். வன்மையாகப் பேசும் ஆற்றலுடையார் இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ முடியும் என்பது வள்ளுவரின் நம்பிக்கை. ஆம்; வளமார் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் சொல் வன்மை பெறுவது அரிதன்று; எளிதே. 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று பாரதியாரும் கூறியிருக்கிறாரன்றோ!

'சொல் வன்மை' என்றால் என்ன?

சொல்வதை, கேட்போர் மனதில் நன்கு பதியும்படி சொல்ல வேண்டும். 'பசுமரத்தாணி' என்பார்களே, அதுபோல!

மனதில் பதியும்படி சொன்னால் மட்டும் போதாது. சொல்லுகின்ற கருத்தின் நேர்மையையும் நியாயத்தையும் கேட்போரின் அறிவு அங்கீகரிக்கும் வண்ணம் அழுத்தமாகவும் திருத்தமாகவும் சொல்ல வேண்டும்.

அதோடு, மனதில் பதிந்த—அறிவு அங்கீகரித்துக் கொண்ட கருத்து வழி செயலாற்றும் வகையில் உணர்ச்சி களைத் தட்டி எழுப்பும் முறையிலும் சொல்ல வேண்டும்.

இத்தனை சக்திகளும் படைத்த ஒரு சாதனமே சொல் வன்மை.

சொல்வன்மை என்றவுடனே மேடைப் பேச்சுதான் நம் கருத்தைக் கவரும்; காதுகளில் ஒலிக்கும். அதில் தவறில்லை. ஆயினும், தனி நபர்களோடு உரையாடும் போதும், கருத்து மாறுபட்ட பொருளைப் பற்றி விவா திக்கும் போதும் வாக்கு வன்மை வெளிப்பட வேண்டும். இத்தகைய சொல் வன்மையை, மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் அடைய வேண்டும்; அடையவும் முடியும்; அடைந்து விட்டால், அதைவிடப் பெருஞ் செல்வம் வேறில்லை.

பொதுமக்களோடு, தொடர்பு கொண்டு தொழில் புரிவோருக்கு வாக்கு வன்மை மிகமிகத் தேவை. மருத்து வர்கள் நோயாளிகளிடம் பழகும்போது அன்பு ததும்ப அறிவுரை கூறினால் அதுவே முதல் சிகிச்சையாகும்.

வணிகர்கள் வாய்மை தவறாமல், நயமொழி பேசி, நாணயத்தோடு வாணிபம் செய்ய முடியுமானால், வாணிபம் செழிக்க அதுவே சிறந்த வழியாகும். 'பட்டினப் பாலை' என்னும் சங்க இலக்கியத்தில், அக்காலத் தமிழ் வணிகர்கள் 'வடுவஞ்சி வாய் மொழிந்தார்கள்' என்று கூறப்படுகின்றது. உள்ளம் தூய்மையுடைய தாயின், உரையும் உறுதியுடையதாகும்.

வாக்கு வன்மை பெற விரும்புவோர், வெட்டிப் பேச்சையும் வீண் வாதங்களையும் வெறுத் தொதுக்க வேண்டும். பயனறிந்து, பண்புடைய சொற்களால் குறை

வாகப் பேசப் பயிற்சி பெற வேண்டும். இழுக்குடைய சொற்களை, மறந்தும் பேசுதல் கூடாது.

'சொல்' என்பதற்குப் பொருள் கூறுவார் போன்று,

" கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல் "

என்ற குறளில், சொல் வன்மையின் ஆற்றலை அளவிட்டுக் காட்டுகிறார் வள்ளுவர். சொல்ல விரும்பிய கருத்துக்களை வரிசைப் படுத்தி, இனிய சொற்களால், சொல்லும் ஆற்றலை ஒருவர் பெற்றுவிட்டால், அவர் சொல்லுவதையெல்லாம் உலகம் ஏற்றுக் கொள்ளும்.

தங்கள் சொல்வன்மையால் நமது உள்ளத்தைக் கவர்ந்த நன்மக்கள் பலரை இலக்கியங்களில் பார்க்கிறோம்.

சீதையின் காதலனை இராமனை 'செல்லுஞ் சொல் வல்லான்' என்கிறார் கம்பர். இதன் பொருள் வெல்லக் கூடிய சொற்களையே சொல்லக்கூடியவன் என்பதாம். இராமனின் சொல்வன்மைக்கு எத்தனையோ சான்றுகள் தருகின்றார். ஒன்றை மட்டும் இங்கு கவனிப்போம்.

தான் பெற்ற மைந்தன் தரணியாளும் பதவியேற்று முடிபுனைந்த கோலத்துடன் தன் முன்னே வந்து நிற்பான் என்ற நம்பிக்கையோடும், அவனைத் தனது இரு கைகளாலும், ஆசீர்வதிக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடும், பொன்னையும் பொருளையும் வறியவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறாள் கோசலை. அந்த நிலையில், குழைக்கின்ற கவரியின்றி கொற்ற வெண்குடையுமின்றி பதவி துறந்த இராமன் தனது அன்னையை அணுகி அவளுடைய திருவடிகளில் வணங்கி நிற்கின்றான்.

தன் மகன் அவனியாளும் அரசகோலத்துடன் பவனி வருவான் என்று எதிர்பார்த்த கோசலை, இராமனின்

அவல நிலைகண்டு, வியப்படைந்தவளாய், 'முடி புனையாமல் வரக் காரணமென்ன? என்ன நேர்ந்தது' என்று கேட்கிறாள். தான் முடி புனைந்து கொள்வதைச் சிற்றன்னை கைகேயி தடுத்துவிட்டாள் என்று சொன்னால், அன்னை ஆத்திரப்படுவாளோ என அஞ்சுகின்றான் இராமன். எனவே, தனக்கு நேர்ந்த கேட்டைக் கூறாமல், 'அன்னையே, உனது அருமைத் திருமகன், எனது தம்பி பரதன், நாளை துங்கமா முடிசூட இருக்கிறான்' என்று கூறி, தனது வாக்குவன்மையால் உண்மை நிகழ்ச்சியைத் திரையிட்டு மறைக்கின்றான். இராமனுடைய சொல்வன்மையில் மகிழ்ந்த கோசலை, 'பரதன் நிறைகுணத்தவன்; நின்னினும் நல்லன். அவன் நாடாள வருவதால் கேடொன்றுமில்லை' எனக் கூறுகிறாள். செல்லுஞ்சொல் வல்லானான ராமன் ஒரு விஷயத்தில் வென்றான். ஆனால், தான் காடு சென்று அங்கு பதினான்கு ஆண்டுகள் வாழவேண்டுமென்று அரசனிட்ட கட்டளையை அன்னையிடம் எப்படிக் கூறுவதென்று அஞ்சுகின்றான். 'பதினான்கு ஆண்டுகள்' என்ற சொல்லை, 'வனவாசம்' என்ற வாசகத்தைக் கேட்டதுமே, அன்னை ஆவி துறப்பாளோ என ஐயுறுகின்றான்.

அந்த நிலையில், தனது நாவன்மையைப் பயன்படுத்தி 'நாயகன், என்னை நன்னெறி உய்ப்பதற்கு ஏவின பணி இன்னொன்றும் உண்டு' என்று நயமான சொற்களில் முன்னுரை கூறி,

> ஆண்டொ ரேழிரண் டேழகன் கானிடை
> மாண்ட மாதவ ரோடுடன் வைகிப்பின்
> மீண்டும் நீவரல் வேண்டு மென்றான்

என்று முழு விஷயத்தையும் கூறி முடித்து விடுகின்றான் இராமன். இந்த வரிகளில் இராமனுடைய சொல் வன்மையைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் கம்பர். 'பதினான்கு

ஆண்டுகள்' என்று சொல்லாமல், 'ஈரேழு ஆண்டுகள்' என்று கூறுகின்றான். 'வனவாசம்' என்று சொல்லக் கேட்டால், "ஐயோ, அங்கு மிருகங்கள் வாழுமே" என்று அன்னை அலறுவாள் என்பதற்காக "மாட்சி மிக்க மாதவர்கள் வாழும் மாபெரும் கானகம்" என வெகு சாமர்த்தியமாகக் கூறுகின்றான்.

இந்த இடத்தில் ராமனுடைய சொல்வன்மை கோசலை யிடம் வெற்றி பெறவில்லை. என்றாலும், சொல்லுந் திறமைக்கு இதை ஒரு சான்றாகக் கொள்ளலாம்.

இராமாயணக் கதைக்கு வித்திட்ட கொடு மனக் கூனியும் சொல்வன்மை யுடைவள்தான். கள்ளமற்ற கைகேயின் உள்ளத்தைத் திருத்தி, பரதனை அரியா சனத்து அமர்த்தவும், இராமனைக் காட்டுக்கு அனுப்பவும் கூனியின் பேச்சுத் திறமையே பெருங் காரணம். "தீய மந்தரையின் சொல்வன்மையால் கைகேயின் தூய சிந்தையும் திரிந்தது" என்று கம்பரே கூறுகின்றார் என்றால், மந்தரையின் நாவன்மைக்கு வேறு சான்றும் வேண்டுமோ !

"பொய்யுடை யொருவர் சொல் வன்மையினால், மெய் போலும்மே மெய்போலும்மே" என்ற வாசகத்துக்கு மந்தரை ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றாள்.

இராமாயண பாத்திரங்களில், சொல் வன்மைக்காக இராமபிரானிடம் பட்டம்பெறும் பாக்கியம் அனுமன் ஒருவனுக்கே கிடைத்தது. அஞ்சனாதேவியின் மைந்தன் வன்மையோடும், இனிமையோடும் பேசும் ஆற்றலுடை யவன். அனுமன் தன்னைச் சந்தித்து ஒரு சில வார்த் தைகள் பேசிய அளவிலேயே அவனது சொல்வன்மையில் சொக்கிப்போன இராமன் அருகிருந்த தம்பியை நோக்கி

"இச் சொல்லின் செல்வன், யாவனோ ?" என்று வியப் போடு கேட்கின்றான். "கல்லாத கலையும், வேதக் கடலுமே என்னும் காட்சி, இவன் சொல்லாலே தோன்றிற்றன்றே" என்று அனுமனைப் புகழ்ந்து பேசுகின்றான் இராமன்.

வாக்குவன்மை பெற்றால்மட்டும் போதாது. அந்த வாக்கு வன்மையை வாய்மையின் வரம்பு கடவாமலும் பயன் படுத்த வேண்டும். சொல்லின் செல்வனை அனுமன் வாய்மை தவறாதவன் என்பதை "மெய்ம்மையின் வேலிபோல்வான்" என்ற வாசகத்தில் நமக்கு உணர்த்தி வைக்கின்றார் கம்பர்.

வாலி வதைப் படலத்தில் இராமனுக்கும் வாலிக்கு மிடையே நடைபெறும் வாக்குவாதம் சொல் ஆற்றலுக்கு ஒரு அத்தாட்சியாகும். இராமன் தன்னை மறைந்திருந்து கொன்ற கொடுமையைக் குறை கூறும் வாலி "தேவியைப் பிரிந்த பின்னர் திகைத்தனை போலும் செய்கை" என்று நகைச்சுவையோடு தனது நாவன்மையை வெளிப்படுத்து கிறான். "அரக்கரோ ரழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறொரு குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற்றுண்டோ" எனக் கேள்வி போட்டு, மும்மை சால் உலகுக்கெல்லாம் மூலமந்திரமாக விளங்கும் இராமனையே திகைக்க வைக்கிறான். மேலும்,

இறைவன் நீ என்னைச் செய்தது
  ஈதெனின் இலங்கை வேந்தன்
முறையல செய்தா னென்று
  முனிதியோ முனிவிலாதாய்

என, அரக்கர் குலத் தலைவனின் இரக்கமற்ற செயலை உவமை காட்டி, அயோத்தி வேந்தன் மைந்தனின் இரங்கத்

தக்க நிலையை தனது சொல்வன்மையால் புலப்படுத்து கின்றான் வாலி.

வில்லிபாரதத்தில், பாஞ்சாலியின் வாயிலாக வாக்கு வன்மைக்கும் வாதத் திறமைக்கும் இன்னொரு சான்று கிடைக்கின்றது.

அரசியலில் பண்டைக் காலச் சனியனான சகுனி என்பானோடு, பாண்டவர் தலைவனான தருமன் சூதாடு கின்றான். நாட்டு மக்களை ஆட்டு மந்தைகளாகக் கருதி ஒரே பகடையில் துரியோதனனுக்கு அடிமைப் படுத்தி விடுகின்றான். அதோடு நின்றானா? தம்பியரையும் தன்னையுமே சூதில் தோற்று விடுகிறான். இன்னும் ஒரு பகடையில் ஐவருக்கும் வாய்த்த பாஞ்சாலியைத் தோற்று விடுகிறான். சூதில் அடிமைப்பட்ட துருபதன் மகளை அவமானப்படுத்த எண்ணி, அரசவைக்கு அழைத்து வரும்படி தேர்ப்பாகனுக்கு ஆணை யிடுகின்றான், துரியோதனன்.

ஆனால், அழைக்க வந்த தேர்ப்பாகன் மூலம் ஆட்சி யாளருக்கு ஒரு கேள்வி அனுப்புகின்றாள் பாஞ்சாலி.

என்னைத் தோற்று மனுநெறிகூறி சையோன்
தன்னைத் தோற்றனனோ
தன்னைத் தோற்றுத் தனதுமனத் தளர்வால்
என்னைத் தோற்றனனோ
முன்னைத் தோற்ற தோற்றபொருள் முற்றுங் கவரு
முறையின்றிப்
பின்னைத் தோற்ற பொருள்கவரப் பெறுமோர்,
நினைக்கப்பெறா தென்றாள்.

“ தருமன் சூதில் தன்னைத் தோற்று, தான் அடிமைப் பட்ட பிறகு, என்னைப் பணயம் வைத்துத் தோற்க

அவனுக்கு உரிமை இல்லை. அடிமைக்குத் தனது மனைவி மீதுகூட அதிகாரமில்லை. தருமன் என்னைத் தோற்றிருப் பினும், நான் துரியோதனனுடையருக்கு அடிமைப்பட்ட பொரு ளல்ல " என்பதுதான் பாஞ்சாலியின் வாதம்.

இப்படிக் காப்பியப் பாத்திரங்களிடம் மட்டுமின்றி, நம்மிடையே வாழும் பெரியார்களிலும், வாக்குவன்மை பெற்றவர்கள் பலர் இருக்கப் பார்க்கிறோம். அவர்களைப் பின்பற்றி நா படைத்த ஒவ்வொருவரும் நா வன்மை பெற முயற்சிப்பார்களா !

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS.

Univ, Grants Commission.

UNIVERSITY EXTENSION LIBRARY
18 DEC 1957
MADURAI

—'செங்கோல்' *17-6-'56.*